வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆடி திங்கள் 21-ம் நாள் (5—8—1962) ஞாயிற்றுக்கிழமை ரபி. அவ் 3 | இதழ் 10

# மந்திரிசபை மண்டியிட்டது

## 30 எம். பி. க்கள் இராஜினாமா செய்வதாகப் பயமுறுத்தல்

## அரசாங்கக் கட்சிக்குள் கிளம்பிய பலத்த கிளர்ச்சி

## விற்பனை வரி வாபஸாகிய காரணம்

நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்த எதிர்ப்பைக் கண்டு அஞ்சி அரசாங்கம் பணிந்து விட்டது— விற்பனை வரியை வாபஸ் வாங்கி விட்டது.

வரிகளிலே மிகக் கொடிய வரி விற்பனைவரி — அதுவும் ஏழரைச் சத விகிதம். இதனால் கிராமாந்தரங்களிலே 30 சத விகிதம்வரை சாமான்களின் விலை உயர்ந்துவிட்டது. நாடெங்கும் கடுமையான எதிர்ப்பு. நகரசபைகள் அனைத்தும் வன்மையாகக் கண்டித்தன. எதிர்க்கட்சிகள் ஏகோபித்து எதிர்த்தன. அரசாங்கக் கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்பு. 30 எம்.பிக்கள் இராஜினாமா செய்வோமென்று மிரட்டினர். உதவி மந்திரிகள் இருவர் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவோமென்றனர். இரு எம்.பிக்கள் சிறு குழந்தைகள்போல அழுதனராம். சில எம்.பிக்கள் வாக்காளர் முகத்தில் விழிக்க முடியாததால் தங்கள் தொகுதிகளுக்குச் செல்லவே மறுத்து விட்டனர்.

எங்கும் எதிர்ப்புக் கிளம்பியதும் அரசாங்கம் நடுநடுங்கி விட்டது. விற்பனைவரி மீண்டும் ஒரு ஹர்த்தாலைக் கொண்டு வருமோவென்று மந்திரிகள் பீதியடைந்தனர்.

கடைசியில் அரசாங்கம் பணிந்தது. தங்களின் தூரதிருஷ்டியற்ற நடவடிக்கையை வாபஸ் வாங்கி விட்டனர். இல்லையேல் விற்பனை வரி அரசாங்கத்திற்கே உலை வைத்திருக்கும் என்று அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

## சுதந்திரன் மாநாட்டு மலர்

தமிழரசுக்கட்சி மன்னார் மாநாடு 24-ம், 25-ம் 26-ம் தேதிகளில் நடைபெறவுள்ளது. அவ்வேளையில் 'சுதந்திரன் மாநாட்டு மலர்' வெளிவருகிறது.

- ★ அழகிய மூவர்ண முகப்பு
- ★ பரிசு பெற்ற சிறுகதைகள்
- ★ தலைவர்களின் கட்டுரைகள்
- ★ கவிதைகள்
- ★ நகைச் சுவைத் துணுக்குகள்.

ஆகியவை இடம் பெறுகின்றன.

**36 பக்கங்கள் —*— விலை சதம் 25**

முன் கூட்டியே உங்கள் பிரதிகளுக்கு விற்பனையாளர்களிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

## மூதூரில் புதிய தேர்தல் தொகுதி

கந்தளாயில் மேலும் 750 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி, மூதூர் தொகுதியைச் சிங்கள ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய முற்படுவதாக 24-6-62ல் "சுதந்திரன்" ஒரு செய்தியை வெளியிட்டது. இச்செய்தியை உறுதிப்படுத்தும் வகையில் பிங்கிரியா பிரதிநிதி திரு. ஜயசேன பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணை கொண்டு வருவதற்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

கடந்த மூதூர் தேர்தலின் போது மூதூர் சென்றிருந்த ஆட்சியாளர்களில் பலர், மூதூரை எவ்வகையிலும் சிங்களத் தொகுதியாக்கி விடுவது என்று கருத்து வெளியிட்டனர். அமைச்சர் சி. பி. டி. சில்வா போன்றோரும் இதுபோன்ற கருத்துக்களை வெளியிட்டனர்.

அல்லையையும், கந்தளாயையும் ஒன்றாக இணைத்து சேருவிலைத் தொகுதி என்ற பெயரில் ஒரு புதிய பாராளுமன்றத் தொகுதியை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவரப் போவதாக பிங்கிரியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜயசேன முன்னறிவித்தல் கொடுத்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

தமிழ்ப் பிரதேசத்தின் மத்தியில் சிங்களத் தொகுதியை ஏற்படுத்தும் முயற்சியில் புதிய நடவடிக்கைதான் இது.

## தமிழரசுக்கட்சி செயற்குழு கொழும்பில் கூடுகிறது

### அமைப்பு விதிகளில் மாற்றங்கள்

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இம் மாதம் 4-ம், 5-ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூடுகிறது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மன்னாரில், இம் மாத இறுதியில் நடைபெற இருக்கும் கட்சி வருடாந்த மகாநாட்டையொட்டி முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக கட்சியின் அமைப்பு விதிகளிலும், சட்டதிட்டங்களிலும் முக்கிய மாற்றங்கள் செய்வதற்கான பிரேரணைகள் கொண்டு வரப்படுமாம்.

தமிழ் பேசும் இனம் இழந்துபோன உரிமைகளை மீண்டும் பெறுவதற்கான அறப் போராட்டங்கள் என்னென்ன வகையில் அமைய வேண்டும், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பன போன்ற விடயங்களும் ஆராயப்படவிருக்கிறது.

புதிய வரவு செலவுத் திட்டத்தின் விளைவாக நாட்டில் எழுந்துள்ள பிரச்சினை சம்பந்தமாகவும் செயற் குழு ஆராயும்.

### மன்னார் மகாநாடு

மன்னாரில் நடைபெற உள்ள கட்சி வருடாந்த மகாநாட்டுக்கு, வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுடன் மலைநாட்டுத் தமிழ் மக்களும் ஏராளமாகக் கலந்து கொள்வார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாகச் செய்யப்படுகிறதாம்.

## தமிழ்பல்கலைக்கழக வேலைகள் துரிதமடைகின்றன

திருமலைப் பகுதியைச் சேர்ந்த உப்புவெளியில் உருவாகிவரும் தமிழ் பல்கலைக் கழகத்தின் இளைப்பாறும் விடுதி வேலைகளும், தண்ணீர் வசதியும் உட்பட சகல வேலைகளும் முடிவடைந்து விட்டன. ஆவணி மாதத்தில் ஓர் பொறியியல் நிபுணர் இக்கட்டிடத்தில் குடியேறி விவசாயப் பாடசாலை வேலைத் திட்டத்தைக் கவனிப்பார் என்று தெரிகிறது.

அடுத்த வருடம் சித்திரை மாதம் அளவில் எல்லாக் கட்டிட வேலைகளும் பூர்த்தியாகிவிடும் என்றும், உடன் பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பம் ஆகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. வேலைத் திட்டங்களைப் பற்றி ஆலோசனை நடத்த சம்பந்தப்பட்ட பல பிரமுகர்கள் ஆவணி மாதம் திருமலைக்கு வருவார்களென சர்வகலாசாலையில் நிலைய அதிபர் திரு. கே. எஸ். செல்லத்துரை அவர்கள் தெரிவிக்கிறார்.

சகலவித மூலநோய் நிவாரணி

**ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்**

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து




- மூலம்
- வாதம்
- படை (ECZEMA)
- மாத விடாய்

கோளாறுகள்



முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானுகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் திரு. அ. அமிர்தலிங்கம்:

# இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கத்தின் புதிய பூதம்!

## தி. மு. க. வின் நோக்கம் நாட்டுப் பிரிவினையா? நிரூபப்படுத்துங்கள்! ராஜினமா செய்து விடுகிறேன்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

சிம்மாசனப் பிரசங்கத்தில் சுருக்கமாக அவர்களது பயங்கரத் திட்டம் வெளிக் காட்டப்பட்டது அரசாங்க நிர்வாகங்களிலும் நீதிமன்றங்களிலும் அரசாங்க மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவதற்காகத் தீவிரக் கொள்கை மேற்கொள்ளப் படும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 1960-ம் ஆண்டு நடைபெற்ற சிம்மாசனப் பிரசங்கத்தில்—மக்களின் ஆதரவையும் மதிப்பையும் பெற்ற திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அவர்கள் பிரதம மந்திரிப் பதவி ஏற்ற நேரத்தில்— அவர்கள், நாட்டின் மொழிச் சட்டத்தை—தமிழ் விசேஷ பாவிப்பு மசோதா உட்பட—அமுல் நடத்துவதாகப் பிரகடனப் படுத்தினர்கள்.

### வெறிப்பாதையில் மீண்டும் பவனி

இன்று மூன்று தொகுதிகளிலே போட்டியிட்டு அவற்றில் இரண்டு தொகுதிகளில் படுதோல்வியடைந்தும் அவற்றில் ஒன்றில் கட்டுப் பணத்தை 300 வாக்குகளால் காப்பாற்றிக்கொண்டும் இருக்கின்ற இந்த அரசாங்கம் மீண்டும் வகுப்பு வெறிப் பாதையிலே செல்லத் துணிந்து தனிச் சிங்களச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தப் போகின்றோம் எனக் கூறுகின்றது. இந்நாட்டில் மாத்திரமல்ல, உலகின் மற்ற நாடுகளில் கூட அரசாங்கத் தலைவர்கள் தங்கள் பொருளாதாரத் திட்டங்களில் உள்ள குறைபாடுகளை மக்களினின்றும் மறைப்பதற்கு, நாட்டு மக்களின் கவனத்தைப் பொருளாதாரப் பிரச்சனையிலிருந்து திருப்பி வேறு துறைகளில் செலுத்துவதற்கு வகுப்புவாத வெறியைத் தூண்டிவிடுவதை ஒரு கொள்கையாகக் கைக்கொண்டார்கள். ஜெர்மனியின் அதிகார பீடத்தை ஹிட்லர் கைக்கொண்ட பொழுது ஜெர்மனியர்களின் கவனத்திலிருந்து தனது ஆட்சியின் குறைபாடுகளை மறைப்பதற்கு அவர்களை யூத இனத்தின் மீது தூண்டிவிட்டான்.

நாட்டில் நடைபெறுகின்ற அக்கிரமங்கள் குறைபாடுகள் அத்தனைக்கும் யூதர்கள் தான் பொறுப்பு என்ற கோஷத்தைக் கிளப்பினுன். 1956-ம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டில் அதிகாரத்திற்கு வந்தவர்கள் "தமிழர்களுக்கும் தமிழுக்கும் இந்த நாட்டில் இடம் இருப்பதுதான் இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கு இருக்கக்கூடிய இடைஞ்சல்களுக்கெல்லாம் முக்கியமான காரணம்" என்று பிரசாரம் செய்தார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியை, அதாவது எங்கள் கட்சியை பூதம், பசாசு என்றெல்லாம் வர்ணித்தார்கள்.

### இரத்தக் களரி

இவர்களது இந்தப் பிரச்சார மூலம் இந்த நாட்டில் இரத்தக் களரி ஏற்பட்டது. 1956-ம் ஆண்டு அம்பாறையிலும் கொழும்பிலும் இரத்தக் களரி ஏற்பட்டது. 1958-ல் நாடு முழுவதிலும் இரத்தக் களரி ஏற்பட்டது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு முதலிய சம்பவங்களைத் தூண்டிவிட்டு மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பி அதிகாரத்தில் இருக்கச் சிலர் கனவு கண்டார்கள். தமிழரசுக் கட்சியைப் பற்றி இன்று திருப்பித் திருப்பி என்ன சொன்னாலும் சிங்கள மக்கள் நம்ப மாட்டார்கள் என்று அரசாங்கத்திற்கு நன்ருகத் தெரியும். எனது நண்பர் வெலிமடைப் பிரதிநிதி (திரு. கே. எம். பி. ராஜரத்தின) போன்றவர்களுக்கும் தெரியும்.

### புதிய பூதம்

"இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய பூதம் ஒன்று தலை தூக்கி நிற்கிறது. அதைச் சிங்கள மக்கள் எதிர்க்க வேண்டும்" என்று இவர்கள் புதிய மந்திர உச்சாடனஞ் செய்து வருகிருர்கள். கிராமப் புறங்களில் பேய்களை விரட்டுவதாகக் கூறும் மந்திரவாதிகளைப் போல எங்கள் அரசியலிலும் வெறும் வகுப்புவாத மந்திரத்தைக் கோஷிக்கும் அரசாங்கமும் அரசியற் கட்சிகளும் உள்ள வரை நாடு முன்னேற முடியாது. இந்தக் கௌரவம் மிக்க சபையிலே சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் பேசிய பல் வேறு அங்கத்தினர்களும் இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்தன) அவர்களும், கௌரவ காலிப் பிரதிநிதி (திரு. டபிள்யூ. தகநாயக்கா) அவர்களும் இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றிக் குறிப்பிட்டார்கள். எனக்கு முன் பேசிய மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதி (ஜனுப் ஏ. எச். மாக்கான் மாக்கார்) அவர்களும் குறிப்பிட்டார்கள். நுவரெலியாப் பிரதிநிதி (திரு. ரி. வில்லியம் பெர்னண்டோ) அவர்களும் குறிப்பிட்டார்கள். வெலிமடைப் பிரதிநிதி (திரு. எம். பி. ராஜரத்தின) அவர்களும் அவரது பாரியாருங்கூட இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றிச் சன்னதம் கொள்ளத் தொடங்கினர்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் கம்புறுப்பிட்டியா பிரதிநிதி (திரு. பேர்லி விக்கிரமசிங்க) அவர்களும் பிரஸ்தாபித்தார்கள். இவர்கள் எல்லாரும் குறிப்பிடும் இந்தப் பூதம் என்ன என்பதை நான் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

### இன்று நேற்றுத் தொடங்கியதல்ல

இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது இன்று நேற்றுத் தோன்றிய ஒரு இயக்கமல்ல. நான் இலங்கை சர்வகலாசாலையில் 1946—47-ம் ஆண்டளவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே இலங்கை திராவிடர் கழகம் இருந்தது. கடந்த பதினறு ஆண்டுகளாக இந்தக் கழகம் இந்த நாட்டில் இயங்கி வருகிறது. அவர்களது நோக்கம் இலங்கையில் வாழ்கின்ற மலைநாட்டுத் தமிழர்கள் மத்தியில் முக்கியமாகச் சாதியின் பெயரால் காணப்படும் பேதங்களை ஒழித்துக் கட்டவேண்டுமென்பதாகும். மூடநம்பிக்கைகளில் சிக்கி காட்டையும் மாட்டையும் வணங்கி பலியிட்டுக் கூத்தாடி வாழும் மூட வாழ்க்கையில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டுமென்பதாகும். மலைநாட்டுத் தமிழ் மக்கள் தன்மானம் பெற்றவர்களாகப் பகுத்தறிவுப் பாதையில் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கி வருகிறது பெயரளவில்தான் தென்னிந்தியாவில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இலங்கை திராவிட முன் முன்னேற்றக் கழகத்திற்கும் ஒற்றுமை இருக்கிறதே தவிர ஸ்தாபன ரீதியாகத் தொடர்பு எதுவும் இல்லை என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூறவேண்டியது தான் உண்மை. இந்திய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணுத்துரை அவர்களும் [illegible] அவர் [illegible] இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தங்களுக்கும் எதுவிதமான தொடர்பும் கிடையாதென்பதை எல்லோருக்கும் கூறியிருக்கிறர்கள்.

### நிரூபப்படுத்துங்கள் பார்க்கலாம்!

இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் மூன்று ஸ்தாபனங்கள் இருந்தாலும், இரண்டு ஸ்தாபனங்கள் கொழும்பில்தான் இருந்து வருகின்றன. தோட்டப் பகுதியிலிருக்கும் மற்றொரு ஸ்தாபனம் திருவாளர் இளஞ்செழியன் என்பவரைச் செயலாளராகக் கொண்டது. அவர்களுடைய நோக்கம் நாட்டைப் பிரிப்பதல்ல. இவ்விஸ்தாபனத்தின் நோக்கம் நாட்டைப் பிரிப்பதுதான் என்று யாரும் நிரூபிப்பார்களேயானல் நான் என்னுடைய பதவியை ராஜினமாச் செய்ய ஆயத்தமாக இருக்கிறேன். அப்படி உண்மையென்று யாராலாவது நிரூபப்படுத்த முடியுமா? அப்படி நிரூபப்படுத்த ஒருவராலும் முடியாது.

அவர்களுடைய நோக்கம் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களைச் சாதி பேதத்திலிருந்து மீட்டு அவர்களை ஒரேயின மக்களாக ஒன்றுபடச் செய்வதேயாகும். ஒருவரையொருவர் தொடக்கூடாது என்றும், அவர் அந்தச்சாதி, இவர் இந்தச்சாதி, என்றும் பிளவுபடுத்தப் பட்டிருக்கும் மக்களிடையேயுள்ள பேதத்தை அகற்றுவது, அவர்களை ஒன்றுபடுத்துவது பிழையா? அரசாங்கக் கட்சியில் உள்ளவர்களானலும்சரி, எதிர்க்கட்சிகளில் உள்ளவர்களானலும் சரி, கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்தன) அவர்களானலும் சரி, இந்த நோக்கம் பிழையானது எனக் கூறுவார்களா?

### இது தான் நோக்கம்

மதத்தின் பெயரால் எத்தனையோ மூடநம்பிக்கைகளுக்குட்பட்டுக் கிடக்கிருர்கள். மற்றவர்களிலும் பார்க்க கூடுதலாக அந்தப் படிப்பற்ற தோட்டத் தொழிலாளர்கள்தான் மூடநம்பிக்கைகளின் கோரப் பிடியில் சிக்கிக் கிடக்கிருர்கள். கடவுள் ஒருவர் உண்டு. ஆனல் அதற்காகப் பலியிடத் தேவையில்லை. வீண் ஆடம்பரங்கள் தேவையில்லை; பணத்தைக் கொட்டி ஆர்ப்பாட்டமாகத் திருவிழாக்கள் நடாத்தத் தேவையில்லை எனக் கூறுவது பிழையா? இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிறுவப்பட்டதன் நோக்கமே இதுதான்.

அடுத்தது அரசாங்கம் செய்த அக்கிரமமான செயல்களால் ஒடுக்கப்பட்ட மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அவர்கள் இழந்தவைகளைப் பெற்றுக் கொடுப்பது. அதுதான் அவர்களை நாடற்றவர்களாக்கி, மொழியுரிமையைப் பிடுங்கி, இந்நாட்டில் அவர்களை எத்தவிதமான உரிமையும் அற்றவர்களாக ஆக்கிவைத்திருக்கும் அநியாயத்தை எதிர்த்து அவர்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பது. அவர்களுக்குத் தொழிலுமில்லை, துணையுமில்லை. கல்வியும் இனிமேல் புகுக்கல்வித் திட்டத்தின்படி சிங்களத்தில் தான். அவர்களுக்கு இந்நாட்டில் பிரஜாவுரிமையில்லை. வாக்குரிமையில்லை. அவர்கள் துரத்தப்பட்டால் தங்கியிருப்பதற்கு ஒருஇடந் தானுமில்லை.

மிருகங்களுக்குக் கூடக் காட்டில் இடமுண்டு. எறும்புகளுக்குக் கூடப் புற்றுகள் இருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள்—இந்த நாட்டின் வளத்துக்காக உழைத்த அந்தத் தொழிலாளர்கள்—இன்று நேற்று வந்தவர்களல்ல. எத்தனையெத்தனையோ தலைமுறைகளாக இந்நாட்டில் வாழ்ந்து வருபவர்கள். நண்பர் வெலிமடைப் பிரதிநிதி (திரு. கே. எம். பி. ராஜரத்தின) அவர்களுடைய பாட்டனர்கள்—கோனர் சந்ததியினர்—இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு வந்த காலத்திலும் அதற்கு முன்னரும் வந்தவர்கள்தான் அவர்கள். அதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் வந்தவர்கள் கூட இருக்கிருர்கள். ஆனல் ஒரேயொரு வித்தியாசம். வெலிமடைப் பிரதிநிதியின் பாட்டனர்கள் தங்களது பாரம்பரியத்தைக் காற்றில் பறக்கவிட்டு தமது பேரனை வேறு இனத்தவனுக மாற வழி செய்தார்கள். ஆனல் அவர்கள் தங்கள் பாரம்பரியத்துக்குத் துரோகம் செய்யாமல், தங்கள் தாய் மொழியைப் பேசி, தங்களுக்குரிய பண்பாட்டுடன் வாழ்ந்தார்கள்; வாழ்ந்து வருகிருர்கள்.

### பூதம் அந்தப் பக்கத்தில் தான்!

இந்தியத் திராவிட இயக்கத்துடன் தொடர்புள்ள யாராவது இருந்தால்; அவ்வியக்கத்தில் பங்குபற்றுவர் யாராவது இருந்தால், இந்த அரசாங்கக் கட்சியில்தான் இருக்கின்றர். அவர்தான் கௌரவ மூதூர் இரண்டாவது அங்கத்தவர் (ஏ. எல். ஏ. மஜீது) இவர் இந்தியாவில் கல்வி கற்ற காலத்தில் அவ்வியக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதை அவர், நான் முன்னெருபொழுது பேசுகையில் ஒப்புக் கொண்டிருக்கின்றர். எனவே, பூதம் அரசாங்கக் கட்சியில்தான் இருக்கின்றதே தவிர இங்கே—இப்பக்கத்திலில்லை, அல்லது இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை என்பதை இந்த அரசாங்கம் அறிந்து கொள்ள வேண்டும்.

அது மாத்திரமன்று. இந்த அரசாங்கமும் இதற்கு முன்னிருந்த அரசாங்கங்களும் மலைநாட்டில் வாழும் தமிழ்த் தொழிலாளர்களை மரக்கட்டைகளைப் போல மிருகங்களைப் போல எந்த ஒரு உரிமையுமற்றவர்களாக நடத்திக் கொண்டு வந்திருக்கிருர்கள், இந்நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு அவர்கள் அனுபவித்த அரசியல் உரிமைகள் அனைத்தும் அவர்களிடமிருந்து படிப்படியாகப் பிடுங்கப்பட்டுவிட்டன. 1947-ம் ஆண்டு அவர்களுக்குப் பிரஜா உரிமை இருந்தது; வாக்குரிமை இருந்தது. அவர்களின் பிரதிநிதிகள் இச்சபையில் வீற்றிருந்தார்கள். 1948-ல் நிறைவேற்றப்பட்ட பிரஜா உரிமைச் சட்டம், 1949-ல் நிறைவேற்றப்பட்ட இலங்கைத் தேர்தல் திருத்தச் சட்டம் இவற்றின் பலனுக இவர்கள் நாடற்றவர்கள் என்ற புதுப் பட்டியலிற்

(6-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும். மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் காவ், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம். எஸ். எம். முஸாரக்,
சின்னசின்னியா.

கே: வருதூர் இடைத் தேர்தலின் பின் அட்சியாளருக்கு மூதூர் இரண்டாவது பிரதிநிதி மீது நம்பிக்கை இல்லையாமே! அதன் இரகசியம் என்ன?

ப: நம்பவைத்து கழுத்தறுத்துவிட்டாரென்று அரசாங்க வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. அட்சியாளருக்கு மூதூரின் குதிரை கிடைக்கும், யானை கிடைக்கும் என்றெல்லாம் சொன்னாராம். கடைசியில் பூனை கூடக் கிடைக்கவில்லையாம்!

ஃ

வி. எஸ். வேலு, கபுகெல.

கே: நேருவின் அரசியற் கொள்கையைப் பின் பற்றும இ. தொ. கா. கோணற்பாதையில் செல்லும் அரசாங்கத்துடன் ஐக்கியமாகிவிட்டதே! இனி இ. தொ. கா. விருல் பயனுண்டா?

ப: ஏன் ஐயா பொய் சொல்லுகிறீர்? இ. தொ. கா. நேரு கொள்கையைப் பின்பற்றவுமில்லை—அரசாங்கத்துடன் ஐக்கியமாகவுமில்லை. அரசாங்கத்தின் ஆட்டத்துக்குத் தகுந்தபடி தாளம் போடுகிறது. அவ்வளவுதான்.

பயனுண்டு— அரசாங்கக் கட்சிக்கு.

ஃ

எம். எம். எகியா,
பெரியகிண்ணியா.

கே: "கல்வி மந்திரி இலங்கை முஸ்லிம்களின் முடிசூடா மன்னர்" என்று மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது கூறினரே, மந்திரிக்கு எப்போது முடிசூட்டு விழா நடைபெறும்?

ப: அவசரப்படாதீர்கள்—இலங்கையில் "மன்னர் ஆட்சி" ஏற்பட்டதும் அகில இலங்கை, முஸ்லிம் பேரரின் சக்கரவர்த்தியாக கங்காசிறிபுரியில் (கம்பளை) முடிசூட்டப்படுவார். அந்த சாம்ராஜ்யத்தில் முதல் அமைச்சர் பதவிக்கு இப்பொழுதே மனுப் போட்டு வைக்கும்படி மஜீத் அவர்களிடம் சொல்ல மறந்துவிடாதீர்கள்.

ஃ

எம். ஈ. எச்.
முஹம்மது மௌலூத்,
பெரியகிண்ணியா.

கே; படித்துப் பட்டம் பெற்றவர்கள் பள்ளிவாசலினுள் பாதரட்சையுடன் செல்ல முயற்சி செய்யக் காரணமென்ன?

ப: படித்த படிப்பைப் பட்டத்தில் கட்டிப் பறக்கவிட்டதால் மூளையில் பூஜ்யந்தான் மிச்சம்—அது தான் காரணம்.

ஃ

செல்வி. கனேஸ்வரி,
பண்டத்தரிப்பு.

கே: மனிதன் பிறக்கும்பொழுதும் அழுதுகொண்டே பிறக்கின்றான். இறக்கும் போதும் அழுதுகொண்டே இறக்கின்றான் என்கிறார்களே! தங்கள் அபிப்பிராயமென்ன?

ப: பாபிகள் நிறைந்த இந்த உலகத்துக்கு வருவதையிட்டு பிறக்கும்போது அழுகிறான். இனி பந்துக்களைத் தன்னுடன் அழைத்துச் செல்ல முடியாமல், பாபிகள் நிறைந்த இவ்வுலகிலேயே அவர்களை விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதேயென்று இறக்கும் போது அழுகிறான்.

ஃ

ம. மிக்கேல், மூதூர்.

கே: ஒற்றையாட்சியை வைத்துக் கொண்டே இலங்கையைக் குடியரசாக்கத் திட்டமிடுகின்றனர். என்ன செய்வது குயுக்தியாரே?

ப: குடியரசாயிருப்பினும் சமஷ்டிக் குடியரசாகவே இருத்தல் வேண்டும். இல்லையேல் தமிழ் பேசும் மக்கள் தங்களின் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் இருப்பார்கள்.

ஃ

அ. இரத்தினலிங்கம்,
மொகருவில.

கே: சாதி வேற்றுமை நீங்கினால் உயர் சாதி தாழ்ந்த சாதியுடன் கலப்புமணம் செய்வார்களா? அவர்களுக்குச் சமுதாய இடம் கொடுக்குமா?

ப. சரியான ஆளையா நீர்! சாதி இல்லையேல் அப்புறம் உயர்சாதி, தாழ்ந்த சாதி எங்கிருந்து வரும்? சமுதாய அமைப்பு எத்தகைய சீர்திருத்தத்துக்கும் தாராளமாக இடம் கொடுக்கும்.

ஃ

வ. சிவஞானம், அல்வாய்.

கே: இலங்கையில் சமஷ்டி அரசாங்கம் ஏற்பட்டு அதிலும் தமிழ் மக்களுக்கு அநீதியிழைக்கப்பட்டால்...?

ப: சமஷ்டி அரசியல் அமைப்பை மாற்றாமல், பொதுத் தேர்தல் மூலம் அரசாங்கத்தை மாற்றியமைக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: என்னை ஒரு பெண் ஆசை காட்டி மோசம் செய்துவிட்டாள். என் ஆத்திரத்தை எப்படித் தீர்க்கலாம்?

ப: மற்றொரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டுவதின் மூலம்...கடலில் ஒரு மீன்தான் இருக்கிறதா என்ன?

ஃ

டி. எம். ஐ. அம்சா,
கொழும்பு—3.

கே: வாழ்க்கையின் இரகசியம் என்ன?

ப: வாழத் தெரிந்துகொள்வது...

ஃ

"ஜீவன்", செம்பியன்பற்று.

கே; மனிதன் மாறிவிட்டான். ஆனல் இலங்கை ஆட்சியாளர்கள் மாறவில்லையே! காரணம் என்ன?

ப: மனிதன் மாறவில்லை—மாற்றப்படுகிறான். ஆட்சியாளர் மாறவில்லை—மாற்றப்படுவர்.

ஃ

'செல்வி", சாவகச்சேரி.

கே: நான் ஓர் ஆணாக இருந்து குயுக்தி மாமியாருக்கு காதல் கடிதம் எழுதினால் என்ன செய்வீர்களாம்?

ப: நீங்களே ஆணாக மாறும்போது குயுக்தி மாமி மட்டும் உங்களுக்குத் தாழ்ந்தவளா என்ன? அவளும் ஆணாக மாறிவிட்டாலோ...! நீங்கள் எப்படி காதல் கடிதம் எழுதுவீர்களாம்!

ஃ

வே. சிவகுமாரன்,
கொழும்பு—14.

கே: கென்னடியின் கொள்கைக்கும், குருஷேவின் கொள்கைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: கென்னடியின் கொள்கை உலக முதலாளித்துவத்தை வளர்ப்பது. குருஷேவின் கொள்கை உலகக் கம்யூனிஸத்தை ஏற்படுத்துவது. ஆனல் கொள்கையை அடைய இருவரும் ஒரே ஆயுதத்தைத்தான் கையாளுகின்றனர். அதுதான் அ...ணு...கு...ண்...டு.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

ஃ

அலோசியஸ் ஸ்டீவன்,
கண்டி.

கே: திரு. செல்வநாயகத்தைக் காந்திக்கும், திரு. இராசமாணிக்கத்தை நேருவுக்கும் சமானமாக நினைக்கிறேன். டாக்டர் நாகநாதனை யாருக்கு ஒப்பிடலாம்?

ப: நேத்தாஜிக்கு...

தமிழ்ச்செல்வன், ஹெராப்டன்.

கே: திரு. ராஜரத்னவின் தந்தையின் பெயரென்ன?

ப: யாரோ ஒரு கோணராம்!

ஃ

செல்வி ஆ. கமலாச்சி,
இரகுவானை.

கே: தற்போது நம் நாட்டில் பெருகி வருவது எது?

ப: வரியும். காதற் தற்கொலையும்.

ஃ

எம். பி. மதியழகன், டெல்வின்.

கே: இலங்கை—இந்தியர் பிரச்சினையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அது தமிழர்—சிங்களவர் பிரச்சினை என்பதுதான்.

ஃ

பி. ஏ. ராஜதுரை, மத்துகம.

கே: 1962—1963 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் உண்மை என்ன?

ப: நாட்டிலே கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதென்பது......இந்த உண்மை இதுவரை மறைக்கப்பட்டிருந்தது.

ஃ

ஜோசப் சிரோன்மணி,
மீனுக்கொல்லே.

கே: காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவைக் கொலை செய்த சோமாராம தேரோ (பிற்றர்) தூக்கிலிடப்படுமுன் ஞானஸ்நானம் பெற்றது ஆங்கிலிக்கன் சபையிலா அல்லது ரோமன் கத்தோலிக்க சபையிலா?

ப: ஆங்கிலிகன் சபையிலென்று ஒருசாரார் கூறுகின்றனர். ஞானஸ்நானம் பெற்றாரென்பது கட்டுக்கதை, பௌத்தராகவே மாண்டாரென்று மற்றொரு சாரார் கூறுகின்றனர். உண்மையைக்கண்டிப்பாக அறிய வேண்டுமானல் அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

எம். ராமசாமி, மாத்தளை.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் என்னைக் காதலிக்க மறுக்கிருள். உமது கருத்தென்ன?

ப: உமது காதல், காட்டில் எறித்த நிலா.

ஃ

எம். சதாசிவம், கொட்டகலை.

கே: காதல் அஸ்தமனமாவது எப்போது?

ப: கல்யாணமானதும்!

ஃ

எஸ். பங்கிராஜ், மட்டுநகர்.

கே: எனது காதலிக்கு குரல் ஆண் குரலாக மாறி வருகிறது. ஆணாக மாறிவிடுவாளோ என்று சந்தேகமாக இருக்கிறது.

ப: அதனாலென்ன? நீர் பெண்ணாக மாறிவிட்டால் தொடர்ந்து காதலை விறுவிறுப்பாக நடத்தலாம்.

ஃ

ஆர். கே. கரன்,
கல்லடி உப்போடை.

கே: சமீபத்தில் கல்லடி உப்போடையில் நடந்த விபுலானந்த விழாவின்போது மட்டக்களப்பைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவர் குடிபோதையில் பிதற்றித் திரிந்தாராமே! அவரை யாரென்று கூறுவீர்களா?

ப: நீங்களும் அந்த ஊரில் வசிப்பவர்தான். எனவே ஆசாமியை உங்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. தெரிந்தும் என்னிடம் எதற்காகக் கேட்க வேண்டும்? அவரது மானத்தைக் கப்பலேற்றவா?

கே; மக்கள் "வரவு—செலவுத் திட்டம்" தோல்வியடைந்ததைக் கண்டு கொம்யுனிஸ்ட் தோழர்கள் என்ன நினைக்கிறார்கள்?

ப: என்ன நினைத்தாலென்ன? அவர்கள் ஆசை நிறைவேறிவிட்டது. இலங்கைக் கொம்யுனிஸ்டுகள் என்றுமே அரசாங்கத்தைக் கைப்பற்றப் போவதில்லை. எனவே தங்கள் ஆயுட்காலத்திலேயே ஒரு வரவு செலவுத் திட்டம் தயாரித்துவிட வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள் ஆத்ம திருப்திக்காக.

ஃ

செல்வி. ஜெ. ச. மல்லாகம்.

கே: உலகத்திலே சிறந்த "தானம்" எது?

ப: நிதானம்.

மங்கையரை மகிழ்விக்கும்! நங்கையர்க்கு நகைப்பூட்டும்!!
தங்க நகை போன்றது;



லதா!!!

லதா அச்சடி கிஷேஸ்ட் கொட்டன்!!
கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ்ச்சி பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாடுடனும் உருவானது.

லதா பொப்ளின்!!
ஆடவர்தம் சேட் முதலியவற்றிற்கு ஏற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவைபுரியும்படி தயாரிக்கப்பட்டது.




எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

எமது வெளியூர் ஏஜெண்டுகள்:-

யாழ்ப்பாணம்.
சீப் சைட்,
ரஸீன் பிரதர்ஸ்,
எஸ். ஆர். செல்லத்துரை,
சாம்பசிவம் ரெக்ஸ்ரைல்ஸ்,
ஹரிபக்ஸ்ஜெய்தேவ்&சன்ஸ்
ஹரிபக்ஸ் நர்மால் & சன்ஸ்,
சாரி எம்போரியம்,
முனீர்ஸ் டிரேப்பரி மாட்,
ஏ. அப்பையா & கோ.,
ராஜகோபால்,
ஆதம்பாய் ஸ்ரோர்ஸ்,
கணிபாய் ஸ்ரோர்ஸ்,
விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்,
சென்ற். செபஸ்றியன் ஸ்ரோர்ஸ்,
ஹஜி சுலைமான் தாயூப்,
டயராம்ஸ்,
ஜுப்பிட்டர்ஸ்,
ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ்.

மட்டக்களப்பு.
காஸிமீஸ்,
ஹமீதா ரெக்ஸ்ரைல்ஸ்,
முபாரக் ரெக்ஸ்ரைல்ஸ்,
சமாது ரெக்ஸ்ரைல்ஸ்,

கல்முனை
பாவா ரெக்ஸ்ரைல்ஸ்,
கொழும்பு டிரேப்பரி ஸ்ரோர்ஸ்,
சீப் சைட்.

திருகோணமலை.
ஆதித்தன் & சன்ஸ், வி. பி.
கந்தளாய்
கந்தளாய் ஸ்ரோர்ஸ்.

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
கொழும்பு.
மொத்த விற்பனைப் பகுதி:
20, கெய்ஸர் வீதி.
சில்லறை விற்பனைப் பகுதி:
110 & 114, மெயின் வீதி,
—Mylads/KL. 424/62—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்கு ஒரு வார்த்தை!

அப்பாக்குட்டி அம்மானுக்கும், மருமகன் காலகண்டருக்கும் தினசரி ஏராளமான வாழ்த்துக்கள் வந்தவண்ணமிருக்கின்றன. தமிழ் பேசும் மக்களிடம் மலிந்துள்ள சீர்கேடுகளை அம்பலப்படுத்துவதுதான் எமது நோக்கமாகும்.

தமிழ் பேசும் இனத்துக்கு இன்று ஏற்பட்டுள்ள சூழ்நிலையை மாற்றியமைக்க முன்னேறும் ஒரு கூட்டத்துக்கு,முட்டுக்கட்டை போட முயலும் எந்த சக்தியையும் தயவு தாட்சணியமின்றிச் சாடுவதுதான் அப்பாக்குட்டி அம்மானுக்கும், காலகண்டருக்கும் இடப்பட்டுள்ள பணி.

தனிப்பட்ட வகையில் தவறு செய்யும் எந்தத் தனி நபரையும் சந்திக்கிழுப்பது எமது நோக்கமல்ல. சமுதாய விடுதலை இயக்கத்திற்குக் குந்தகம் விளைவித்து கொடுமை பல செய்வதன் மூலம், தங்கள் சொந்த வாழ்க்கையை வளம்படுத்த முனையும் எத்தர் கூட்டத்தை எமது சந்தி எப்போதும் வரவேற்றே தீரும்.

அப்பாக்குட்டி அம்மான் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவருடனும் உலவுவார். அவரை நீங்கள் கண்டு பிடிக்கவேயியலாது. தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்துக்கு தீங்கு நினைக்க முயலும் உங்களில் எவரையும் உடனிருந்தே கண்டு பிடித்து விடுவார், அம்மான்.

அம்மானையும், மருமகனையும் திட்டியும் ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. அம்மான் தவறான வழியில் செல்லுகிறார் என்று கூறும் ஒரு கடிதமும் திருமலையிலிருந்து வந்துள்ளது. அக்கடிதத்தையும் படித்துப் பாருங்கள்.

திருமலை அன்பர்கள் தயவு செய்து உண்மை நிலையை தெளிவு படுத்த இக்கடிதம் வாய்ப்பளிக்கட்டும்.

—அம்மானும், மருமகனும்—

# சந்தித்து வந்தவை

காலகண்டன்

### திருமலை நகராண்மைக் கழகம்

சுதந்திரன் 15—7—1962 இதழில் "சந்திக்கு வந்தவை"யில் திருக்கோணமலை நகராண்மைக் கழகம் குறித்து வெளிவந்த செய்தியைப் படித்தேன்.

அன்பர் அப்பாக்குட்டி அம்மான் தவறான வழியில் ஒருசிலரால் செலுத்தப்படுகிறார் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக. திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தில் ஊழல்கள் என்று அம்மான் அபாயச் சங்கு ஊதுகிறார். புதிய தலைவர் டாக்டர் சி. சிவானந்தம் அவர்கள் தலைமையில் முன்னுள் ஊழல்கள் பல அம்பலமாகின்றனவே தவிர, புதிதாக ஊழல்கள் தலை தூக்குவதற்கு இடமே இடையாது என்பதை வரியிறுப்பாளர்கள் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

திருமலையின் தற்போதைய செயலாளர் ஒரு சிங்களவர் என்று அம்மான் ஒப்பாரி வேறு வைக்கிறார். நாங்கள் சிங்கள வெறியையும், சிங்கள மொழி தமிழ் பேசும் இனத்தின் மீது திணிக்கப் படுவதையும் எதிர்க்கின்றோமேயல்லாது, சிங்களச் சோதரர்களை அல்ல என்பது தானே தமிழரசுத் தந்தையின் முதல் கூற்றாகும். இன்று திருமலை நகராண்மைக் கழகத்தில் செயலாளராகவிருக்கும் சிங்கள அன்பர் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர் மட்டுமல்ல, ஒரு கனவான் என்பதையும் இங்கிருக்கும் மக்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். ஒரு தம்பிநாயகம் மொரட்டுவ நகராண்மைக் கழகத்தின் செயலாளராகவும், ஒரு கின்லையா காலி மாநகரசபையின் ஆணையாளராகவும் கடமையாற்றும் பொழுது, ஒரு சோசிங்கா திருமலை நகராண்மைக் கழகத்தின் செயலாளராகவிருப்பதால் இங்கு பூகம்பம் வெடிக்கப் போகின்றதா இன்றேல் பொங்கி எழப் போகின்றதா..............? அம்மான் காட்டும் பூச்சாண்டிக்கு எவரும் அஞ்சப் போவதில்லை.

அடுத்துச் சிங்களத் துணைத் தலைவர். திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தின் சரித்திரத்தில் பலதடவைகளில் பல சிங்கள உறுப்பினர்களும், துணைத் தலைவர்களும் இருந்திருக்கிறார்கள் என்பதை விடயம் அறிந்த எவரும் மறுக்க முடியாது.

தற்பொழுது இருக்கும் துணைத் தலைவர் ஒரு தமிழ்த் தாய்க்குப் பிறந்தவர், ஒரு தமிழ்ப் பெண்ணையே தமது வாழ்க்கைத் துணைவியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பவர், முற்றிலும் தமிழ்ச் சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருப்பவர். அதுமட்டுமல்ல, இங்கிருக்கும் ஒன்பது உறுப்பினர்களில், இவர் மட்டும் தான் ஒரு சிங்கள உறுப்பினர் என்று வேண்டுமானால் பெயரளவில் கூற முடியும், சிறுபான்மையினரின் உரிமைகளை நசுக்க வேண்டாம் என்று உரிமைக் குரல் எழுப்பும் நாங்கள், எங்கள் மத்தியில் வாழும் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்குத் தாராள மனதுடன் துணைத் தலைவர் பதவியைக் கொடுத்தால் அது நமது இனத்தின் பெருந்தன்மையைக் காட்டுமேயல்லாது, எந்தவிதத் திலும் பிறந்த இனத்தைக் காட்டிக் கொடுக்கும் செயலாக இருக்க முடியாது.

இறுதியாக இங்கிருந்து மாற்றல் செய்யப்பட்ட செயலாளர் ஒரு தமிழர் என்று அனுதாபக் குரல் எழுப்பப்படுகின்றது. உண்மையைக் கூறுவதானால் அவருக்குத் தமிழில் படிக்கவோ இன்றேல் எழுதவோ தெரியாது. அத்துடன் நிருவாகத்தில் அவர் புதிய தலைவருடன் ஒத்துழைப்பதற்குப் பலதடவைகளில் பகிரங்கமாக மறுத்ததுடன் அல்லாமல், பழைய சகாக்கள் சிலருடன் சேர்ந்து இந்தக் கழகத்தைத் தவறான பாதையில் இழுத்துச் செல்லுவதற்கும் முயற்சிகள் செய்ய முயன்றார். எனவே தான் அவரை மாற்ற வேண்டிய அவசியம் தலைவருக்கு ஏற்பட்டது. செயலாளர் விடயத்தில், ஒரு தமிழ் பேசும் செயலாளர் தான் திருக்கோணமலை நகராண்மைக் கழகத்திற்கு வேண்டும் என்று எழுத்து மூலம் நமது தலைவர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளார் என்ற உண்மையையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வ. சின்னத்தம்பி.

### வேம்படி சிங்களம்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியைகள் சிலரும், மாணவிகள் சிலரும் சிங்களம் படிக்க முயற்சி எடுத்து வருவதாகவும், அவர்களது பெயர்ப் பட்டியலும் நமக்கு வந்து சேர்ந்துள்ளது. பெண்களை இழுத்து சந்தி சிரிக்க வைக்க நாம் விரும்பவில்லை. சிங்களம் படித்தாலும், எதிர்காலத்தில், தமிழ் இனத்தவராயிருக்கும்வரை எந்தவிதமான பலனும் கிடைக்கப்போவதில்லை என்பது கண்கூடு. இதைத் தெரிந்து கொண்டபின்னரும் இந்த வீண் முயற்சியிலிருந்து விடுபடுவார்கள் என்று நம்புகிறோம்.

### யாழ்ப்பாணம் சிங்கள நாடு?

பள்ளிக்கூடங்களுக்கு மதிய போசனத்துக்காக வழங்கப்படும் பணிஸ்களை யாழ்ப்பாணப் பகுதியில், அனேகமாக யாழ்ப்பாணத் தவர்களைக்கொண்ட ஸ்தாபனங்களே தயாரித்தளித்தன. மாதகல் கூட்டுறவு சங்கத்தினர் சில பள்ளிக் கூடங்களுக்கு பணிஸ் தயாரித்து அளித்து வந்தனர், இம்முறை அவர்களுக்கு பணிஸ் தயாரிக்கும் பொறுப்பை [illegible] கல்வி அதிகாரி முட்டுக்கட்டை போட்டுள்ளார் என்னும் தகவல் அம்மானுக்குக் கிட்டியுள்ளது.

பணிஸ் தயாரித்தளிப்பதற்காக சில சிங்கள முதலாளிகளுக்கு வாய்ப்பை அளிக்க அந்த அதிகாரி முற்பட்டாராம். அதற்காக அவர் காரணம் காட்டியுள்ளார்.

"இது சிங்கள நாடு. சிங்களவருக்கு முதல் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். அதன் பின்னர்தான் மற்றவர்கள் இடம் பெறலாம்," என்று கூசாமல் கூறியுள்ளாராம். இதனால் உருவான நிலைமையைச் சமாளிக்க கடைசியாக ஒரு முடிவு ஏற்பட்டதாம் அம் முடிவின் படி பணிஸ் தயாரிக்கும் பொறுப்பில் மூன்றில் இரண்டு பகுதியை சிங்கள முதலாளிமாருக்கும், மூன்றில் ஒரு பகுதியை தமிழர்களால் நடாத்தப்படும் கூட்டுறவுச் சங்கத்தாருக்கும் அளித்துள்ளார்களாம்.

யாழ்ப்பாணத்தையும் சேர்த்து "சிங்கள நாடு" என்று கூறும் ஒரே ஒரு தமிழ் மகன் இருப்பார் என்றால், அவர்தான் காலத்துக்கும், இடத்துக்கும் ஏற்ற வகையில் வேடம் போடும், (பலமுறை நமது சந்தியில் இடம்பெற்ற) யாழ்ப்பாணக் கல்வி அதிகாரி ஒருவரான சிறிமான் சிங்கள மோகன். அவருக்கு "சிங்கள மோகன்" என்று பெயர் சூட்ட ஆசைப்படுகிறார் அப்பாக்குட்டி அம்மான்.

### முற்போக்கர் கொக்கரிப்பு

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் ஓர் விழா அண்மையில் நடைபெற்றது. அந்த விழாவில் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினர் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெற்றது. அந்த நிகழ்ச்சியில் தமிழரசுக் கட்சிப் பிரசாரம் அடங்கியுள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டு ஒரு முற்போக்கு வாதியின் மூளையைக் குழப்ப ஆரம்பித்துள்ளது.

அந்த முற்போக்கு வாதிக்கும் அரசினர் ஆசிரிய கலாசாலைக்கும் என்னவும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. "தமிழரசுக் கட்சிக்குச் சாதகமானவர்களால் நடத்தப்படும் ஒரு வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை மேடையேற்ற ஏற்பாடு செய்தவர் திருமதி கங்கேஸ்வரி கந்தையா. இவர் கலாசாலையில் ஒரு விரிவுரையாளர். இவரை உடனடியாக கலாசாலையிலிருந்து ஓட்டமெடுக்க வைக்கிறேன்" என்று அந்த முற்போக்குவாதி சபதமிட்டுள்ளாராம்.

### யாரோ இவர் யாரோ?

கலாசாலையில் "மேற்றன்" வேலையில் உள்ள ஒரு அம்மையாரின் கணவர்தான் இந்த முற்போக்கர். இதைத் தவிர இவருக்கு வேறு ஒரு அடை மொழியும் கூற வழியில்லை. வாராவாரம் கொம்யுனிஸ்ட் கட்சியின் "பிட் நோட்டீஸ்" பத்திரிகை யொன்றை விற்பனையும் செய்வார். இத்தகைய அந்தஸ்துடைய இந்த ஆசாமி மட்டக்களப்பு ஆசிரியகலாசாலையின் அதிபரின் நிலையை அடைந்துவிட்டவர் மாதிரிக் கூச்சலிட ஆரம்பித்துள்ளது விந்தையிலும் விந்தைதான்.

ஐயா முற்போக்கரே, உமது வாலை ஆட்டாமல் கொஞ்சம் சும்மா இரும். அரசினர் கல்லூரி ஆரம்பகாலம் தொடக்கம் அரும் பணி ஆற்றிவந்த ஆசிரிய ரெத்தினங்களுள் சிறப்பான இடம் வகிக்கும் திருமதி கங்கேஸ்வரி கந்தையா மட்டக்களப்பு மக்களின் மனதைக் கவர்ந்த நல்லாசிரியை. அவரது சேவைக்கு ஏதாவது முட்டுக்கட்டை நேர்ந்தால்......! நிச்சயமாக உமக்கு எள்ளளவும் நன்மை அளிக்காது.

### 'தண்டம்' உபயோகித்து...

அஞ்சல் எழுது வினைஞர் சங்கத்தார் கூடி "சிங்களம் படிப்பதில்லை" என்று அண்மையில் எடுத்த முடிவு பத்திரிகைகளில் வெளியானது தெரிந்ததே. நல்லவர்கள் மத்தியில் புல்லுருவிகளும் இருப்பது இயற்கைதானே. இதற்கொப்ப முன்பு சந்திக்கிழுக்கப்பட்ட ஒரு நபர்—காசுக் கட்டளைப் பகுதியில் கடமை பார்க்கும் காட்டிக் கொடுத்தான் குஞ்சு—த. காங்கிரஸ் வால்-தனித்த மரம் போல சிங்களத்தைப் படிக்க ஆரம்பித்துள்ளது.

ஏனைய சக ஊழியர்கள் இந்த காட்டிக்கொடுத்தான் குஞ்சை சாம, பேத, தானம் முதலிய மூன்று முறைகளையும் உபயோகித்தும் முடியாது போகவே, ஒருவர் தண்டத்தையும் பிரயோகிக்கவே, அதிகாரிகளின் விசாரணை வரை விடயம் முற்றிவிட்டது. தண்டத்தைப் பிரயோகித்தவர், விசாரணையின் போது துணிகரமாகத் தன் செயலை விரிவாகக் கூறியுள்ளார். "சம்பந்தப்பட்டவர், எழுது வினைஞர் சங்கம் எடுத்துக் கொண்ட முடிவுக்கு விரோதமாகச் சிங்களம் படித்தார். ஆகவே அவர் எங்கள் இனத் துரோகி. இன்று தனது சொந்த இனத்துக்குத் துரோகம் விளைவிக்கும் இவர், நாளை ஏன் உங்களுக்கும் துரோகம் எண்ண மாட்டார்?" என்று அதிகாரிகளிடம் கேட்டுள்ளார். இவரைப் போன்றவர்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ளவரையில் நமது இனம் அழியாது.

### பாராட்டுக் குரியவர்

மேலை நாடுகளுக்கு அனுப்பப்படும் தபால் பொதிகளுக்கான கட்டண விகித மாற்றங்களையிட்டு ஒரு அறிக்கை தயாரிக்கும் பொறுப்பு, தலைமைத்தபால் இலாகாவைச் சேர்ந்த ஒரு தமிழ் உத்தியோகத்தவர் வசம் ஒப்படைக்கப்பட்டது. அவர் அவ்வறிக்கையை மூன்று மொழிகளிலும் தயாரித்து அதிகாரியிடம் சமர்ப்பித்துள்ளார். அதிகாரியோ சிங்கள வெறியர். அவர் தமிழ் அறிக்கை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளார். அவர் ஏற்க மறுப்பதை எழுத்தில் தரும்படி தமிழ் உத்தியோகத்தர் கேட்க, சினந்து கொண்டு

(13-ம் பக்கம் பார்க்க)



ரிஷிலேகியம்

ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கைகால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண் கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனாம்

15 நாள் டின் ரூ. 3-00
30 நாள் டின் ரூ. 5-75

தபால் செலவு -/95

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமை தமிழ் பேசும் மக்களுக்கு பொதுப் பிரச்சினையாகும்

# மற்றவர்கள் அதில் தலையிட்டு குழப்பம் விளைவிக்க வேண்டாம்

[12—6—62 'சிலோன் ஒப்சேவர்' நாளிதழில், தமிழ் பேசும் மக்களிடையே நிலவும் தீண்டாமைப் பிரச்சினை பற்றி செனட்டர் ஆனந்த தசநாயக்கா ஓர் கட்டுரை வரைந்திருந்தார். அதற்குப் பதிலளிக்கு முகமாக, இக் கட்டுரையை இங்கு நாம் வெளியிடுகிறோம்.]

**12-6-62-ல்** "சிலோன் ஒப்சேவர்" பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்ட செனட்டர் ஆனந்த தசநாயகக்காவின் கட்டுரை மிகவும் கவர்ச்சிகரமாக விருந்தது. ஆதிகாலம் தொட்டு தமிழ் சமுதாயத் திடையே மாத்திரமன்று சிங்கள சமுதாயத்திடை யிலும் வழக்கிலிருந்து வந்த சாதிப் பாகுபாட்டையும் அதன் பாரம்பரியங்களையும் இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற செனட்டர் அசைசரப் பட்டமை மிகவும் பரிதாப கரமானது. சாதிக் கொடு மையும் அதனால் உருவாகிய சமத்துவமின்மையையும், தமிழ் பேசும் சமுதாயமே அழிக்க முயலும் நேரத் திலும், ஒருமைப்பட்டு தமது சுதந்திரத்திற்குப் போரா டும் இந்நேரத்திலும் இப் படிப்பட்ட கட்டுரையைப் பிரசுரித்தமையால் அவர் ஒரு காரணத்துடன்தான் பிரசுரிக்க முற்பட்டார் என விடயமறிந்த எவரும் நினையாமலிருக்க முடியாது. செனட்டர் ஆனந்த, சிங்கள சமுதாயத்தின் ஒரு பகுதி யிடையே தற்போதும் நிலவி வருகின்ற சாதிக் குறை பாட்டின் சாபக்கேடு மிக வும் வெளிப்படையாகவிருந் தும் அதை ஒழிக்க, செனட் டர் ஆளும் கட்சியின் உறுப் பினராகவிருந்த போதிலும் எதுவித எத்தனமும் எடுக்க ஏன் முற்படவில்லை?

சாதிப் பாரம்பரியங்களும் சமூகக் குறைபாடுகளும், தாழ்த்தப்படுபவர்கள் எனப் படுபவர்களும் உயர்சாதி யினர் எனப்படுபவர்களும் ஒன்றுகூடி வாழ்வதினாலே தான் ஒழியும் என்பதை செனட்டரே ஒத்துக் கொள் வார். இந்தியாவிலே இந்திய தேசியக் காங் கிரசும் அதனால் அமைக் கப்பட்ட அரசாங்கங்களுமே தாழ்த்தப்பட்டவர்களையும் உயர்சாதியினரையும் அர சியல், சமூகத்துறைகளிலே ஒருமைப்படுத்தித் தீண்டா மையை மிகுந்த திருப்திகர மாக ஒழித்தன. உண்மை யிலே செனட்டர் தாழ்த்தப் பட்டவர்களுக்கு உதவி யளிக்கும் நோக்குடன் இக் கட்டுரையை எழுதியிருக் கலாம். ஆனால், இக்கட்டுரை தமிழ் பேசும் மக்களிடையே வெறுப்புமனப்பான்மையை உருவாக்கியது மாத்திர மல்ல, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதகமாகவே இக்கட்டுரை தோற்றமளிக் கின்றது.

தாழ்த்தப்பட்டவர் களென்று கூறப்படும் மக் களின் முன்னேற்றத்திற்கு வேலை செய்து வருபவரில் நானும் ஒருவர் என்ற ரீதி யிலே, செனட்டர் தமிழ ரைப் பிரித்தாளும் நோக் குடன் சாதி வித்தியாசத் தின் தீமைகளை இந்நேரத் தில் எடுத்துக்கூறி தமிழ் பேசும் மக்களிடையே பிரி வையும் வெறுப்பையும் ஏற் படுத்த முயல வேண்டாம் என்று நான் அவரைத் தய வுடன் கேட்டுக் கொள்கின் றேன். தாழ்த்தப்பட்ட மக்களென்று அழைக்கப் படுபவர்களும் தமிழர்கள் தான், அவர்கள் தமது மொழியை அழிக்கும் நோக்குடன் அரசாங்கம் செய்யும் எச்செய்கைகளை யும் சகிக்க மாட்டார்கள். உண்மையிலே சிறுபான் மைத் தமிழர்கள்—கொம்யூ னிஸ்ட் கட்சியிலுள்ள சில ரைத் தவிர—எல்லோரும் தமிழரசுக் கட்சியின் சமஷ்

## திரு. கே. ச. சுந்தரம்
(சாதி ஒழிப்பு நடவடிக்கைக் குழு இணைச் செயலாளர்)

டிக் கொள்கைக்கு மாறான வர்களல்ல. எத்தனையோ சிறுபான்மைத் தமிழ்த் தலை வர்கள்—செனட்டர் ஞா. நல்லையா உட்பட—தமிழர சுக் கட்சியிலே மிகவும் தீவிர மாக வேலை செய்கின்றனர். கடந்த பொதுத் தேர்த லிலே சிறுபான்மைத் தமிழ ரிடையே பெரும்பான்மை யோர், தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்தனர். ஏனெனில் தமிழரசுக் கட்சிதான் உண் மையிலே தமிழ் சமுதா யத்தை பொறுத்தவரையில் நீதிக்கும் நியாயத்திற்குமாக உழைத்து வருகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சமூகக் குறைபாடு களை ஒழிக்கச் செய்த சில சேவைகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். மேடை களிலும் வேறு இடங்களிலு மிருந்து செய்த பிரசாரமே சாதி வித்தியாசத்தின் வலி மையை ஒழித்தது

தமிழரசுக் கட்சித் தலைவர் களே 1956-ல் யாழ் நகர எல்லைகளிலே உள்ள சைவ ஆலயங்களிலே பிரவேசம் செய்ய உதவியளித்தவர். 1957-ல் அமரர் சி. வன்னிய சிங்கமும் ஏனைய தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தேநீர், உணவுச் சாலைச் சொந்தக்காரர்களைக் கூட்டி அவர்களின் ஸ்தாபனங் களைத் தாழ்த்தப்பட்டவர் களுக்கும் திறந்துவிட வேண்டுமென்று கேட்டதற் கிணங்க எல்லா ஸ்தாபனங் களும் அன்றைக்கே அவர் களின் வேண்டுகோளுக் கிணங்கத் திறக்கப்பட்டன. இன்று டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் (மிகவும் வைராக்கியமுள்ள பயமற்ற சேவையாளர்) அவர்களின் தலைமையின் கீழ் தமிழரசுக் கட்சி மத்திய நிர்வாகக் குழு வினால் தெரிவு செய்யப் பட்ட ஐந்து பேர் கொண்ட ஓர் உபகுழு இயங்கி வருகின் றது. இவ்வுப குழுவில் நானும் ஓர் அங்கத்தவர். இவ்வுப சபை சமீபத்தில் கட்சிப் பற்றற்ற ஓர் மகா நாட்டைக் கூட்டி கட்சிப் பற்றற்ற ஓர் நடவடிக்கைக் குழுவை யாழ் நகராண் மைக் கழகத் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங் கம் அவர்களின் தலைமையில் தெரிவு செய்தது. இக் குழு வில் சகல கட்சியின் தலைவர் களும் அங்கம் வகிக்கின்ற னர். இக் குழுவிற்கு நானும் திரு. கதிரவேற்பிள்ளை நியா யவாதி அவர்களுமே இணைக் காரியதரிசிகளாவர்.

இக்குழு சாதிக் குறை பாடுகளை ஒழித்து தமிழ்ச் சமுதாயத்திடையே நல் லெண்ணத்தையும் சமத்து வத்தையும் ஒருமைப் பாட் டையும் உருவாக்கும் என்ப தில் எனக்கு நம்பிக்கை உண்டு.

சிறுபான்மைத் தமிழர் மகாசபை இலங்கைத் தமிழ ரசுக் கட்சி சாதி வித்தியா சத்தை ஒழிக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்து ஓர் பிரே ரணையை உடுப்பிட்டியில் நடந்தேறிய அதன் மகா நாட்டிலே கொண்டு வந்த தும் இங்கு குறிப்பிடத் தக் கது. இவைகளெல்லாம் சாதி வித்தியாச ஒழிப்பைப் பற்றி சிறுபான்மைத் தமி ழர்களுக்கு இலங்கைத் தமி ழரசுக் கட்சியிலே எதுவித குறையும் கூற இடமில்லை

(12-ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

# ஈழநாட்டுப் பட்டாளப் பரணி

"கச்சேரியூர் அறங்கொண்டார்"

[1961-ம் ஆண்டு ஏப்ரில் திங்கள் 17-ல் வடக்கே படை யெடுத்துச் சென்று, யாழ்ப்பாணக் கச்சேரியடியில் ஈழநாட்டுப் பட்டாள வீரர், நிராயுதபாணிகளான அறப் போர் வீரரை எதிர்த்து வெற்றிவாகை சூடியதை நினைவு கூரும் பொருட்டே இப்பரணி]

(சென்ற வாரத் தொடர்ச்சி)

## வீர வரலாறும் வாழ்க்கை முடிவும்

இப்படியாக நீர்தான் எதிர்வரும் பகையைச் சாடி,
வெற்றிகள் ஈட்டி, நல்ல விருதுகள் மாட்டிக் கொண்டு,
சுற்றவை அனைத்தும் காட்டி, காதலால் கன்னா மீதில்
பெற்றவை செருப்பென் றுலும் பின்வாங்கா தெங்கள் ஊர்கள்,

அனைத்தையும் உமதோ யாத ஆட்சியின் கீழ்க்கொ ணர்ந்தீர்
"எனக்குயார் நிகரே ஆவார்?" எனக்கூறி ஜீப்பில் ஏறிக்
கனத்திடாத் தொப்பி யோடு காவல்நீர் வருங்கால் ஓர்நாள்
பனைக்குள்ளே இருந் தொருத்தி குடத்துடன் எதிர்ப்பட் டாளாம்!

தாவிநீர் கிழி றங்கி தடக்கரம் தன்னை விரித், "தென்
ஆவியே, அடியே, அன்பே!" என்றவள் அருகில் செல்ல,
"ஓடியா, அண்ணே, இஞ்சை ஒருத்தனைப் பார்," என் றன்னாள்
கூவியே அழைக்கக் கேட்டு குதித்தொரு கடப்பைத் தாண்டி,

கத்தியோ டொருவன் வந்த காட்சியைக் கண்டீர், பின்னர்
தத்தினீர், 'ஒலம்பிக்' வீரன் தாவிடாப் பாய்ச்சல் கண்டீர்;
எத்தனை முயன்றும் என்ன ஏழரைச் சனியன் என்றால்?
மற்றவன் உனைப்பி டித்து மல்லாத்தி விட்டுப் போனான்.

## தெருக்களத்தில் கிடந்த காட்சி

ஆண்தோ வீழ்ச்சி! காலும் அற்றதோ! உனது வாழ்க்கை
போனதோ நொண்டியாக! புளியினிக் காணுறதை
ஓடி விந்தை யெல்லாம் சிதைந்ததோ! அரசே ரோட்டில்
ஏனினும் கிடக்கிறீராய்? ஏறும்போய் விமான மய்யா!

## விமானமூலம் சொந்தத்தேசம் ஏகுதல்

கட்டுநா யக்காக் களத்தில் கட்டாநாய் போல லைந்த
பட்டாள அரசே, நீவீர் பத்துடன் இதழில் கண்ட
குட்டைநாய்க் கோமான் ஓடிக் கூட்டியே வீரர் தம்மை
எட்டவே நீநகச் சொல்லி இயம்பினார் "நெஞ்சனல் அந்தம்"

## உலா

பிறகுநீர் அங்கி ருந்து புறப்பட்டீர், உமது ஜீப்பாம்
பரியினில் உலாத்தான்; அந்தப் பார்புகழ் காட்சி கண்டு
குறைவிலா இரை யமைந்த 'குடி'மக்கள், 'நா'ய(ன்)னார்கள்,
வரிசையாய் நின்று "வாழ்வாழ்!" என்றுமை வாழ்த்தி னார்கள்

## புகழ் பூத்த வாழ்க்கை

இப்படி யாகப் போன இடமெல்லாம் உதைகள் கோடி
பெற்றுநீர் புகழு முற்றும் பிறவிவை, துறந்தே விட்டை
எட்டியே பிடித்துக் 'கள்ளநா' இறைவனைத் துய்த்துப் பல்கல்,
வெட்டிலும் நீங்கா வாழ்வு வகுத்தபின் மாண்டொ ழிந்தீர்!

## முடிவு

கோவென்று கூவிற்றுக் கோழி,—கொக்
கோவென் றெழுந்தங்கு கூவிற்றுச் சேவல்
காவென்று கத்திற்று காகம்;—கௌ,
காவென்று கத்திய தேயண்டங் காகம்;
மாவென்று கத்திற்று மாடு;—ம்ம்
மேயென்று தான்கத்திற் றும் அந்த ஆடு;
டாம் என் றொலித்தது வேட்டு;—பட்
டாளப் பரணியை நாமும் முடித்தோம்!
டும் டும் டும்

(முற்றும்)

விற்பனைக்கு

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவை யான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கமும் சகாக்களும் வரை.

33, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டு மக்களின் மறுமலர்ச்சிக்கு உழைக்கின்றது தி. மு. க.

## சிங்கள மக்களுக்குப் பூச்சாண்டி காட்டி வகுப்புவாதம் வளர்க்கிறது அரசாங்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டுவிட்டார்கள். இது சர்வதேச அமைப்புக்கே முரணானது. இந்த நிலைமையை ஒழித்து இந் நாட்டில் அவர்களுக்கும் உரிமையுண்டு என்று கூறுவது பிழையா? நண்பர் வெலிமடைப் பிரதிநிதி (திரு. கே. எம். பி. ராஜரத்தினா) அவர்கள், அவருக்கே வழக்கமான முறையில் சர்வதேச விவகாரங்களிற்கூட சுத்தப் பொய்களை இங்கே கூறினார். அவற்றைப் பற்றி நான் பின்னர் எடுத்துக் கூறுவேன். செக்கோஸ்லவாக்கியா, போலந்தில் ஜேர்மன் மக்கள் பிரச்சினைகளைப் பற்றி, 'பொட்ஸ்டாம்'' (Potsdam) உடன்படிக்கை பற்றி அவர் கூறியது உண்மைக்கு முற்றும் முரண்பட்டது என்பதை ஆதார பூர்வமாக நான், எனது பேச்சின் பின்பகுதியிலே எடுத்துக்காட்டுவேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே இச்சபையிலுள்ளவர்கள் ஒரு சரித்திர உண்மையைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சபாநாயகர் அவர்களே! இந்தியாவில் சுதந்திர உணர்ச்சியேற்பட்டு இந்தியச் சுதந்திரத்துக்காகப் போராட இந்தியத் தேசியக் காங்கிரஸ் என்ற ஒரு ஸ்தாபனம் நிறுவப்பட்டது. அதன் பிரதிபலனாக அதே பெயரோடு இலங்கையிலும், இலங்கைத் தேசியக் காங்கிரஸ் என்று ஒரு தாபனம் 1918-ம் ஆண்டில் நிறுவப்பட்டதென்பது சரித்திரம் அறிந்த உண்மை. அதே போலத்தான் தென் இந்தியாவில் சில மறுமலர்ச்சி இயக்கங்கள் உண்டாயின. பிராமணர்களுடைய ஆதிக்கத்திலே சமயம் என்ற பெயரால் நடந்த அநீதிகளை அழித்து, உரிமையிழந்து, உணர்ச்சியற்று வாழ்ந்த தமிழ் மக்களைத் தன்மானமுடையவர்களாக வாழ வைப்பதற்காக ஒரு இயக்கம்—திராவிட இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதே போலத்தான் இங்கும், மூடப்பழக்கவழக்கங்களில் மூழ்கி, உரிமையற்றவர்களாக, நாட்டுரிமை, மொழியுரிமை பறிக்கப்பட்டவர்களாக, சாதி என்று தங்கள் மத்தியிலே பிளவுபட்டுக் கிடக்கின்ற மலைநாட்டுத் தமிழ் மக்களை மறுமலர்ச்சி அடையச் செய்யும் நோக்கத்தோடு, அவர்களுக்குப் புத்துயிர் அளிக்கின்ற நோக்கத்தோடு இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கம் இங்கு பத்து ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இயக்கமில்லை இது.

இந்த அரசாங்கம் செய்து வருகின்ற அக்கிரமங்கள் ஒவ்வொன்றும் இந்த இயக்கத்துக்குள்ள ஆதரவைத் தோட்டப் பகுதியிலே கூட்டிக் கொண்டு வருகின்றது. தொழிற் சங்கங்களை நடத்தி வருகின்றோம் என்று கூறுகிற எமது தோழர்கள் பலரும் இந்தத் தொழிலாளர்களைத் தமது சொந்தக் கருமங்களுக்கு உபயோகிக்கின்றார்களேயொழிய, அவர்களுடைய உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க இவர்களில் எவரும் முன்வரவில்லை யென்பதையும் இப்பொழுது அத்தொழிலாளர்கள் உணரத் தொடங்கி இருக்கின்றார்கள். இதனால், படித்த மலைநாட்டுத் தொழிலாளர் மத்தியிலே இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவு அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அவர்களுக்கு உரிமை வேண்டுமென்று கேட்டது பிழையா? இந் நாட்டின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக வாழ வேண்டிய மக்கள், மனிதர்களாக, உரிமை பெற்ற மக்களாக வாழ வழி செய்ய வேண்டுமென்று கேட்கும் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் "பூதம்"

### இப்படியும் சொன்னார்கள்!

'கள்ளத் தோணிகள்', இராணுவப்பயிற்சிஅளிக்கப்பட்ட பின்னரே, இங்கு அனுப்பப்படுகின்றனர்— திரு. கே. எம். பி. ராஜரத்தினா.

முன் வாங்குகளில் இருக்கும் 3½ மந்திரிகளில் ஒருவராவது எனது கேள்விக்குப் பதிலளிப்பாரென நம்புகிறேன்— பாராளுமன்றத்தில் திரு. பீட்டர் கெனமன்.

இலங்கையை எதிர்நோக்கியுள்ள மிகப் பெரும் அபாயம் தி. மு. க. வாகும்— திரு. சந்திரசேன முனவீர, ரத்தோட்ட எம். பி.

கள்ளக் குடியேற்றக்காரரை நீங்கள் இந் நாட்டை விட்டு வெளியேற்றத் தொடங்கினால், முதல் முதலாக வெளியேறுபவர்களில் வெலிமடை எம். பி. (திரு. ராஜரத்தினா)யும் ஒருவராக இருப்பார்—பாராளுமன்றத்தில் திரு. அமிர்தலிங்கம்.

"பிசாசு" என்று எடுத்துக் காட்டி சிங்கள மக்களின் மத்தியில்வகுப்புவாத வெறியைத் தூண்டிவிடும் முறையிலே அரசாங்கக் கட்சி அங்கத்தினர்களும் எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் பேசி வருவது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அரசாங்கத்தின் குறைபாடுகளையும் பொருளாதாரக் குறைபாடுகளையும் சிங்கள மக்கள் காணத் தொடங்கி விட்டார்கள். இந்த அரசாங்கத்திடம் சிறந்த ஒரு பொருளாதாரத் திட்டம் இல்லையென்று அவர்கள் கண்டு விட்டார்கள். இந்த அவசர கால நிலைமை இனிமேலும் நீடித்திருக்க வேண்டியதில்லை என்று கண்டுவிட்டார்கள். இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அரசாங்கம் என்ன செய்கிறதென்றால் வகுப்புவாத வெறியைத் தூண்டிவிடுகின்றது. "இப்பொழுது ஒரு பூதம் கிளம்பிவிட்டது, அதை அடக்குவதற்கு அவசரகால நிலைமைச்சட்டம் வேண்டும்" என்று இப்பொழுது அரசாங்கத்தினர் கூறி, மக்களை ஏமாற்றி, இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசாங்கம் தடைசெய்து வைத்திருக்கின்றது. ஜனநாயகத்துக்கும் மனித உரிமைக்கும் முரண்பட்ட இந்தச்செயலை, ஜனநாயகத்தின் பேரால், பேச்சுரிமையின் பேரால், [illegible] பேரால், மனித உரிமையின் பேரால், கண்டிக்க வேண்டியிருக்கின்றது.

சபாநாயகர் அவர்களே! நான் அடுத்து ஒரு புது விஷயத்துக்குவர விரும்புகின்றேன். ஆதலால் இப்பொழுது பேச்சை நிறுத்தித் தொடர்ந்து பிற்பகல் இரண்டு மணிக்குப் பேச்சைத் தொடர்கிறேன்.

### எதற்காக இந்தத் தடை?

கௌரவ உப சபாநாயகர் அவர்களே! உணவு இடைவேளைக்காகச் சபை கலையு முன் இந்த நாட்டில் மலைநாட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் மூடப் பழக்க வழக்கங்கள் ஒழித்து, சாதி பேதத்தை அகற்றி, அவர்களுடைய மொழி குடி உரிமைகளைப் பெற்று, அவர்களும் இந்நாட்டில் மனிதர்களாக—தன்மானத்தோடு வாழவேண்டுமென்ற ஒரே இலட்சியத்திற்காக உழைத்து வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசாங்கம் தடை செய்தது ஜனநாயகத்திற்கு முரணானது—மனித உரிமைக்கு மாறானது—என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தேன். உண்மையில் இந்த ஸ்தாபனம் எடுத்த எந்த நடவடிக்கைக்காக இந்தத் தடை போடப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்திடம் நான் கேட்க விரும்புகிறேன். சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளில ஈடுபட்டார்களா? பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கி நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முயற்சித்தார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன். இந்தியாவிலே மகாத்மா காந்தி அடிகள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆர். எஸ். எஸ் என்ற ஒரு வகுப்புவாத ஸ்தாபனம் இயங்கி வந்தது. முஸ்லிம்களைக் கொல்லுவதையே நோக்கமாகக் கொண்டிருந்த இந்த ஸ்தாபனத்திற்கு இந்திய அரசாங்கம் தடை விதித்தது. இலங்கையில் அதைப் போன்றதொரு ஸ்தாபனம்— சிறுபான்மை மக்களை ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற ஒரு ஸ்தாபனம் இருக்குமாக இருந்தால் அது எனது நண்பர் கௌரவ வெலிமடைப் பிரதிநிதி (திரு. கே. எம் பி. ராஜரத்தினா) அவர்களுடைய ஜாதிக விமுக்தி பெரமுனையைத் தவிர வேறு எந்த ஸ்தாபனமுமாக இருக்க முடியாது. ஆனால் இந்த ஸ்தாபனத்தைத் தடைசெய்ய அரசாங்கம் துணியவில்லை.

அதற்கு மாறாக ஜாதிக விமுக்தி பெரமுனே அங்கத்தவர்கள் இந்தச் சபையில் கூறிக் கொள்வதற்கு இணங்க ஜனநாயக உரிமைகளுக்காக உழைத்துக் கொண்டு வருகின்ற—அகிம்சா வழியில் இயங்கி வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசாங்கம் தடை செய்தது. உண்மையில் சென்ற ஆண்டு இதே ஜாதிக விமுக்தி பெரமுனையைச் சேர்ந்த எனது நண்பர் கௌரவ வெலிமடைப் பிரதிநிதி (திரு. கே. எம். பி. ராஜரத்தினா) அவர்கள் "தமிழரசுக் கட்சியைத் தடைசெய்ய வேண்டும்; அவசரகாலச் சட்டத்தை அமுல் நடத்த வேண்டு"மென்று கோரிக்கை விடுத்தார். அவர் கோரிக்கை விடுத்த ஒருவார காலத்திற்குள் அரசாங்கம் அவசர கால நிலையைப் பிரகடனஞ் செய்ததுடன் தமிழரசுக் கட்சியையும் தடைசெய்து எங்களையும் தடுப்புக் காவலில் வைத்தது. சென்ற வாரம் சிம்மாசனப் பிரசங்கத்திற்கான தமது திருத்தப் பிரேரணையில் ஜாதிக விமுக்தி பெரமுனே அங்கத்தவர்கள்—

"தென்னிந்திய பிற்போக்கு வாதிகளின் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் இந் நாட்டு இந்தியர்களிடையேயும் சமஷ்டி வாதிகளிடையேயும் கிளைச் சங்கங்களை அமைத்து இலங்கையைத் தென்னிந்தியாவின் குடியேற்ற நாடாக்கும் நோக்கமாகச் செயற்படுத்தும் தேசத் துரோகத் திட்டங்களை ஒழிப்பதற்கும் அவ்வியக்கத்தைச் சட்ட விரோதமாககவும் அவ்வியக்கத்தில் ஈடுபடுவவர்களை நாடுகடத்தவும் தங்கள் அரசாங்கம் என்ன செய்யப் போகின்றதென்பதைப் பற்றிக் குறிப்பிடாததையிட்டும்,

வருந்துகிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த திருத்தப் பிரேரணையை இச்சபை விவாதித்து முடிப்பதற்குள்ளேயே அவர்கள் பிரேரணைக்கு ஏற்ப இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட விரோதமானது என்று அரசாங்கம் தடையுத்தரவைப் பிறப்பித்து விட்டது.

### எவ்வித தொடர்பும் இல்லை

இந்தியாவிற் கூடப் பிரிவினை வேண்டுமென்ற கோரிக்கையோடு இயங்கி வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கூட நேருவின் அரசாங்கம் தடை செய்யவில்லை. தென்னிந்தியாவில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இலங்கையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஸ்தாபன ரீதியாக எந்தவிதமான தொடர்பும் இல்லை. உண்மையில் ஸ்தாபன ரீதியாக வெளிநாட்டோடு தொடர்பு கொண்டுள்ள ஒரு கட்சி இருக்குமானால் அது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியே அல்லாமல் வேறொன்றுமில்லை. ரஷ்யத் தலைமைப் பீடத்தின் கட்டளைக்கு அமைந்து நடக்கும் கட்சி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியாகும். அந்தக் கட்சியைத் தடை செய்யாது இங்குள்ள ஏழை மக்களின் நலனுக்காக உழைத்து வரும் ஒரு கட்சியை, அது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரைக் கொண்ட ஒரே காரணத்துக்காக, தடை செய்தது உண்மையில் ஒரேயொரு மனப்பான்மையைத்தான் காட்டுகின்றது. அதாவது, நியாயம், நீதி என்பனவற்றின் அடிப்படையில் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் யார் உழைக்கின்றார்களோ, அவர்களை நசுக்கித் தடை செய்து அதனால் சிங்கள மக்களின் கவனத்தைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து வகுப்பு வெறிப்பாதையிலே திருப்பவும், தொடர்ந்து அவசர காலச் சட்டத்தை அமுல் நடத்தி ஆட்சி பீடத்தில் அமரவும் இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதற்காக எந்த அநியாயத்தையும் செய்ய இந்த அரசாங்கம் ஆயத்தமாக இருக்கின்றது. இதைத்தான் இவ்விதத் தடை காட்டுகின்றது.

(தொடரும்)





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.
டெலிபோன்: 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூரில் தோற்றதன் விளைவாக வீண் பிரச்சாரம் செய்கிறார்

## திரு. சுந்தரலிங்கம் மூதூரில் போட்டியிட்டதன் அடிப்படைக் காரணம் என்ன?

## 'சிங்கள' சுதந்திரக் கட்சியை ஆதரிக்கவே என்கிறார் டாக்டர் நாகநாதன்

['மலைநாட்டுத் தமிழர்' என்ற தலைப்பில் திரு. சுந்தரலிங்கம் பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்த கடிதத்துக்குப் பதிலளிக்கு முகமாக இக் கடிதத்தை வரைந்துள்ளார் நல்லூர் எம்.பி.டாக்டர் நாகநாதன்.]

(1) திருவாளர் சுந்தரலிங்கம், மூதூர்த் தேர்தலில் தாம் தோல்வியுற்றதன் விளைவாக, பொதுவாகச் சமஷ்டிக் கட்சியையும், பிரத்தியேகமாகத் திரு. செல்வநாயகம் அவர்களையும் தூற்றி வருகிறார்.

(2) 'சர்வம் புத்தம்' ஏகாதிபத்திய சமுத்திரத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கும் சிறுபான்மை இனமாகிய தமிழ் பேசும் இனத்தை ஒன்றுபடுத்தி, அவர்கள் எல்லோரும் அனுபவிக்கும் கஷ்டங்கள், குறைகள் யாவும் இனம் முழுவதுக்கும் பொதுவானவை என்பதை வலியுறுத்தி, அவர்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் சமஷ்டிக் கட்சியின் கொள்கையைத் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் எதிர்க்கிறார்.

(3) 'மலைநாட்டுத் தமிழர்' என்ற தலைப்பின் கீழ் திரு. சுந்தரலிங்கம் பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் அவர் சுட்டிக் காட்டியிருக்கும் முக்கிய கருத்தென்னவெனில், ஈழத்துத் தமிழருக்கும் மலைநாட்டுத் தமிழருக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் உண்டென்றும், இவ்விரு இனங்களுக்குமிடையே ஒற்றுமை ஏற்படுத்துவது இயலாத காரியம் என்பதுமே. ஆகவே, அவர் சமஷ்டிக் கட்சி மலைநாட்டுத் தமிழருடன் நெருங்கிய தொடர்பை உண்டாக்குவதையும், ஒத்துழைப்பையும், ஒற்றுமையையும் வளர்ப்பதையும் திரு. தொண்டமான் எதிர்ப்பதை ஆதரிக்கிறார்.

மூதூர்த் தேர்தலில் திரு. சுந்தரலிங்கம் வாக்காளரிடையே விடுத்த வேண்டுகோள் யாதெனில், இலங்கைத் தமிழ் மக்கள் முஸ்லிம் சகோதரர்களுடன் ஒற்றுமையுடன் வாழும் எண்ணம் வைத்திருக்கக் கூடாது. அவர்கள் இலங்கைத் தமிழ் சமூகத்துக்கு அப்பாற்பட்டவர் என்பதேயாகும்.

ஆகவே, இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வதென்னவெனில், சர்வ சிங்கள, பௌத்த ஏகாதிபத்தியத்தைத் தமது முதல் எதிரியாகக் கருதும் தமிழ் பேசும் இனத்தின் மூன்று பகுதியினரையும் பிரித்து, அவர்களை ஒருவருடன் ஒருவர் எதிர்க்கச் செய்வதே, அவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், திரு. சுந்தரலிங்கம் பின்பற்றும் கொள்கையாக விளங்குகிறது என்பதே.

### திரு. சுந்தரலிங்கத்தின் வீரப் பிரதாபங்கள்!

(4) ஆனால், சிங்கள ஏகாதிபத்தியத்தை வளர்ப்பதற்காகத் தமிழ் பேசும் இனத்தின் நலவுரிமைகளைப் பலியிட்டது திரு. சுந்தரலிங்கத்திற்கு இதுவல்ல முதல் தடவை—

(அ) 'தனிச் சிங்கள' மந்திரிசபை 1936-ம் ஆண்டிலே உருவாகுவதற்குத் தாமே வழி வகுத்ததாக இன்னும் பெருமைப் படுகிறார்!

(ஆ) எந்த நாட்டின் சரித்திரத்திலேயும் காண முடியாத அநியாயமான, நேர்மையற்ற, நீதியற்ற சட்டமான இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் ஆதிகர்த்தா திரு. டி. எஸ். சேனநாயக்கா அல்ல, தானே தான் என்றும் பெருமைப்பட்டுக் கொள்கிறார் திரு. சுந்தரலிங்கம்.

இலங்கைப் பிரஜாவுரிமையில் தரப்பட்டுள்ள கடுமையான, நடை முறைக் கொவ்வாத விதிகளின் கீழ், பிரஜாவுரிமை கோரும் ஒரு நபர், இந்நாட்டிலேயே தேவையான, அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்க முடியாததால், அவரை நீதிமன்றங்கள் பாதுகாக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

ஆகவே, இந்நாட்டின் பிரஜாவுரிமையை இந் நாட்டு மக்களுக்கு அளிப்பது, அளிக்காதது பற்றிய உரிமை முற்று முழுதாக அரசாங்கத்தின் கைகளிலேயே விடப்பட்டுள்ளது. தன்து விருப்பு வெறுப்புக் கிணங்க அது ஒரு பிரஜையின் நியாயமான பிரஜாவுரிமையைப் பறித்துக் கொள்ளலாம்.

### அவரும் பொறுப்பாளி தான்

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் தான் இலங்கைத் தமிழ் பேசும் இனத்தின் கஷ்டங்களுக்கெல்லாம் காரணமாகும். அதனை உருவாக்கிய தந்தை தாம் தான் என்பதை திரு. சுந்தரலிங்கம் இன்று ஒருவேளை மறுத்தாலும், சிங்களவர்களை, அவர்கள் தேவைப்பட்ட அத்தாட்சிப் பத்திரங்களைக் காட்டுஇல்லை காட்டாமல் விட்டாலென்ன, இந்நாட்டின் பிரஜைகளாகவும், சிங்களவரல்லாதவரை சந்தேகத்துக்குரியவர்கள் அல்லது நாடற்றவர்கள் என்றும் கருதும் இந்த அக்கிரமச் சட்டத்துக்கு, மந்திரி சபையில் அந்நேரம் அங்கத்துவம் வகித்தவர் என்ற முறையில் அவரும் பொறுப்பாளியாவார்.

(5) மலைநாட்டுத் தமிழரை, இலங்கை அரசியல் உலகத்தின் ஒரு மூலையில் ஒதுக்கிவிடப் பெரும்பாலும் பொறுப்பாக விருந்த திரு. சுந்தரலிங்கம், ஆச்சரியகரமாக இன்று, தாம் இலங்கை-இந்தியப் பிரஜாவுரிமை மசோதாவின் மீது தான் ராஜினாமாச் செய்ததாகக் கூறுகிறார்! இம் மசோதா, ஓரளவுக்காவது மலைநாட்டுத் தமிழரில் சிலரை மீண்டும் இலங்கைப் பிரஜைகளாக்க உதவும் நோக்கத்தோடு ஆக்கப்பட்டதாகும். இம் மசோதாவின் விதிகள் கடுமையாக விருந்தபோதிலும், ஒரு சிலராவது பிரஜாவுரிமை பெற இது உதவியுள்ளது.

### இப்படியும் சொல்லுகிறாரே!

இம் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களிக்க மறுத்த திரு. சுந்தரலிங்கத்தின் நிலை, எங்களுடைய பார்வைக்கு நல்லதொரு காரியமெனினும், அவருடைய அரசியல் கொள்கைகள், நடவடிக்கைகள் இவற்றின் சூழ்நிலையில், அது ஓர் தத்துவார்த்தச் செயலாகாது. இந்திய—இலங்கைப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாக விருந்ததென அவர் கூறும் திரு. டி. எஸ். சேனநாயக்காவின் மறுப்பு அறிக்கையின் ஒவ்வொரு சொல்லையும் தாமே எழுதிக் கொடுத்ததாகவும் மேலும் அவர் சொல்லுகிறாரே!

எனது நினைவு சரியென்றால், திரு. சுந்தரலிங்கம், அவர் எம்மை நம்பவைப்பது போல், தானாக—தன் சொந்த விருப்பத்தின்படி—ராஜினாமாச் செய்யவில்லை, திரு. டி. எஸ். சேனநாயக்கா அவரது ராஜினாமாவைக் கோரினார் அல்லது அவரை பதவியினின்றும் விலக்கினார்—இரண்டும் ஒன்றுதான்—என்பதே உண்மையாகும்.

(6) மீண்டும், 1948-ல், மிகத் தந்திரமாக பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தி, இலங்கைக்கு முழுச் சுதந்திரமும் பெறும் வகையில் சோல்பரித் திட்டத்தை மாற்றியமைக்கச் செய்து, கவர்னர்-ஜெனரல் தமது மந்

(15-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள் (5)

## இளமையிலேயே கவித்திறன் பெற்ற இயற்கைப் புலவர் முகம்மது காசீம்

**யூ. எல். தாவூத்**

நம் கருத்தில் உவந்து களிப்பெருவகை பூக்கும் ஈழத்து முஸ்லிம் புலவர்களுள் மாத்தறை முகம்மது காசீம் புலவரும் குறிப்பிடத் தக்கவர். இவர் 1879-ம் ஆண்டு ஆவணி மாதம் 7-ந் திகதி பிறந்தவர்.

இலங்கையின் கடற்கரைப் பகுதியில் தான் ஆரம்பத்தில் முஸ்லிம்கள் குடியேறினார்கள். அக்காலத்தில் முஸ்லிம்களிற் சிலர் அதிகாரிகளாக இருந்து பல பாகங்களில் ஆட்சி செய்திருக்கின்றார்கள். ஆரம்ப காலத்தில் சிங்கள மன்னர்களின் ஆட்சியின் கீழ் இருக்க விரும்பாத முஸ்லிம்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரை அதிகாரியாக நியமித்து ஆட்சி செய்ய வகை செய்தனர். இத்தகைய அதிகாரிகளுள் ஒருவராக இருந்தவர் உமர் லெவ்வை மரிக்கார் என்பவர். இவரது மகனுன செய்னுலாப்தீன் என்பவரின் புதல்வராகப் பிறந்தவரே முகம்மது காசீம் புலவர்.

### கவிதை பாடும் ஆற்றல்

அக்காலத்தில் கல்வி பயில்வதற்கேற்ற பாடசாலைகள் இருக்கவில்லை. இதனல் முகம்மது காசீம் பாடசாலை சென்று அரிச்சுவடி கூடப் படிக்கவில்லை. ஆனல் இளமையிலேயே கவிதைபாடும் ஆற்றலைப் பெற்று இயற்கைப் புலவராக விளங்கினார். காலவரையில் இவருக்குத் தமிழறிவு பெறக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுல்தான் தம்பிப் பாவலர் என்பவர் மாத்தறை சென்று அங்கு சிலகாலம் தங்கியிருந்த போது அவரிடம் முகம்மது காசீம் தமிழறிவு பெற்றார். பின் இலக்கியம், இலக்கணம் என்பன கற்றுத் தெளிந்தார். முகம்மது காசீம் நாவலனராகவும் விளங்கினார். அக்காலத்தில் மாத்தறைப் பகுதியில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளுக்கெல்லாம் இவரே முதலிடம் பெற்றார். மெல்ல, மெல்ல தமிழ்த் தேன் இவரின் நாவிலே பிலிற்றுவிட்டதால், நினைத்தவுடன் பொருள் நயமுள்ள பாடல்களைப் புனையும் வன்மை பெற்றார். இவர் இயற்றிய சொல்லழகும், பொருள் நயமும் தவழும் அழகுத் தமிழ்க் கவிதைகளைக் கண்ணுற்ற பலர் இவரைப் பாராட்டி ஆர்வ மூட்டினர்.

முகமது காசீம் புலவர் ஆரம்பத்தில் வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டிருந்தார். ஓய்வு நேரம் முழுவதும் தமிழாய்விலேயே சென்று கொண்டிருந்தது. காலவரையில் இவரின் வியாபாரம் தடைப்பட்டது. யாராயினுஞ் சரி ஒரே நேரத்தில் இரு விடயங்களில் கவனஞ் செலுத்தி வெற்றி காண்பது அரிதல்லவா? இவரின் நோக்கமும், கவனமும் தமிழாய்விலும், தமிழ் கற்பதிலும் சென்றதால் வியாபாரத்தில் வெற்றி காண இயலவில்லை. இவரின் ஆராய்ச்சி வளம் உள்ளத் தடாகத்தில் தேங்கி வழிந்து விட்டதால் இவரின் கலைச் சுனையாகப் பொங்கி எழத் தலைப்பட்டது. எனவே கவிதை பாடுவதை வேலையாகக் கொண்டு விட்டார்.

### காசீம் புலவரின் படைப்புகள்

இஸ்லாத்தின் பண்பு நலன்களை வாய்க்காலாக வெட்டி ஓட விட்டிருப்பது போல, செந்தமிழில் நல்லிலக்கியங்களை யாத்துத் தமிழ்ப்பணி செய்தார் காசீம் புலவர். சர்வ சமய கீர்த்தனை, இஸ்லாமிய வழி, இஸ்லாமிய பிரசாரப் பிரகாசம், இருளகற்றும் ஒளி, கதிர்காமக் கடவுளின் காரணக் கவிதை, இஸ்லாமிய சமாதாரனம், பெண்களே மானம் பேண், பெண் பிறந்தாள் என்பன காசீம் புலவர் சமைத்தளித்த நல்லிலக்கியங்களாகும்.

முகமது காசீம் புலவர் இஸ்லாமிய பண்புநலன்களை விளக்கும் நூல்களை இயற்றியதுடன் பொதுவான இலக்கிய நூல்களையும் யாத்திருக்கிறார். இவரின் பொது நோக்கை—பரந்த எண்ணத்தை—கதிர்காமக் கடவுளின் காரணக் கவிதை, சர்வ சமய சமரசக் கீர்த்தனை [illegible]

(15-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஆகஸ்ட் மாதம் 5-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1103


## வரிப்பளுவால் மக்கள் வேதனை

நிதி மந்திரியின் வரவு—செலவுத் திட்டத்தை மக்கள் பீதியுடன் எதிர்பார்த்தனர். புதிய வரிகள் எந்தெந்த உருவத்தில் வந்து யார் யார் தலையில் விழப் போகிறதோ என்ற அச்சம் எங்கும் நிலவியது. வந்துவிட்டது அந்த வரவு செலவுத்திட்டம். இத்திட்டம் மக்கள் மீது புதிய வரிகளைச் சுமத்தியுள்ளது. பங்கீடு வெட்டு மக்களைப் பட்டினி போட வழி வகுத்திருக்கிறது.

அரிசி தவிர்த்து ஏனைய உணவு பதார்த்தங்கள் அத்தனையும் விலையேற்றம். துணிமணி உட்பட உபயோகப் பொருட்கள் அனைத்தும் யானை விலை—குதிரை விலை—ஆனால் அதற்கேற்ப மக்களின் வருமானம் அதிகரித்ததா? உழைப்பாளிகளின் ஊதியம் உயர்ந்ததா? நடுத்தர மக்களின் சம்பளம் கூடியதா? கிடையாது. விலைவாசிகளேற்றம் கிராம மக்களையும் கசக்கிப் பிழிகிறது.

இந்த நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் வேறு உச்ச நிலையடைந்துள்ளது. லட்சக் கணக்கான மக்கள் வேலையின்றித் திண்டாடுகின்றனர். நாட்டிலே தொழில் வளம் குன்றிவிட்டது. தொழில் வளர்ச்சி பேச்சளவோடு நின்றுவிட்டது.

மக்கள் சுபீட்ச வாழ்வு பெற்றிருப்பின் அநியாய வரியும் ஒரு பெருஞ்சுமையன்று. இன்று மக்கள் நிலையோ அவல நிலை. வேலையின்மை, வரிப்பளு, விலைவாசியேற்றம், அவசரகாலச் சட்டம், அடக்குமுறை ஆகியவற்றால் அவர்கள் அல்லல்படுகின்றனர். இந்நிலையில் வரிகள் புதிய புதிய உருவத்தில் வந்து அவர்களின் மென்னியைப் பிடிக்கின்றன, மரத்திலிருந்து விழுந்தவனை மாடு முட்டியதுபோல,

பட்ஜெட்டுக்குப்பிறகு சராசரி சகலசாமான்களின் விலையும் ஏறத்தாழ 25 சத விகிதம் கூடி விட்டது. இதனைத் தடுக்க எந்த வழியும் கிடையாது. விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளால் இதனைக் கட்டுப்படுத்த முடியமென்பது பகற்கனவு. அவர்கள் தான் ஊழல்களின் உறைவிடமாச்சே!

உணவு வெட்டு, உடைக்கு வரி, உழைப்பதற்கும் வரி, தொழில் செய்தாலும் வரி, செய்யாவிட்டாலும் வரி, பேச்சுக்கும் வரி, மூச்சுக்கும் வரி, எந்தப் பக்கம் திரும்பினுலும் மக்களைப் பட்டினி போட்டுக் கொள்ளும் வரி...சர்வம் வரிமயம். இதுதான் சோஷலிஸமா? திரு. பண்டாரநாயக்காவின் "நடுவழி"க் கொள்கை இதுதானு? திருமதி பண்டாரநாயக்கா பிரதமரானது இதற்காகவா? மக்கள் சுதந்திரக் கட்சியை ஆட்சி பீடமேற்றியது இதைச் செய்யவா?

ஒரு பக்கம் சிங்களம் பௌத்தம் என்னும் வகுப்புவாதக் கூச்சல் இனவெறி, மொழிவெறி, மதவெறியாட்டங்கள்—மறுபக்கம் சிறுபான்மையோரை நசுக்க அவசர காலச் சட்டம் இதைத் தவிர கடந்த இரு ஆண்டுகளில் வேறு என்ன செய்திருக்கிறது இந்த அரசாங்கம்?

அபிவிருத்தித் திட்டங்களெல்லாம் 'ஐஸ்' பெட்டியில் பதுங்கி விட்டன. பத்தாண்டுத் திட்டம் மூன்றாண்டுத் திட்டமாகக் கடதாசியில் சுருங்கியதுதான் கண்டபலன். நடைமுறையில் அத்தனையும் பூஜ்யம். அரசாங்கத்தின் அன்றாடச் செலவுக்கே கடன் வாங்கும்போது அபிவிருத்தித் திட்டங்கள் வேறு?

அபிவிருத்தித் திட்டங்களுக்கென தனிவரி வசூலித்தது அரசாங்கம் அந்தப் பணத்தைக் கொண்டு நிறைவேற்றிய அபிவிருத்தித் திட்டங்கள் யாவை? அதனையும் அரசாங்கத்தின் அன்றாடச் செலவுதானே விழுங்கியது!

நாட்டிலே பயங்கரமான ஒரு பொருளாதார நெருக்கடி உருவாகி வருகிறது. இந்த உண்மையை அம்பலப்படுத்திவிட்டது வரவு— செலவுத் பங்கீடு வெட்டு செலவுத் திட்டம். பொருளாதார நெருக்கடி, பணவீக்கம், வர்த்தக மந்தம், விலைவாசிகள் மேலும் அதிகரித்தல் என்ற பூதங்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் கிளம்பி மக்களை வதைக்கப் போகின்றன.


நாடெங்கும் வரவு—செலவுத் திட்டத்துக்கு எதிர்ப்பு—எதிர்க்கட்சியினர் மக்களைத் தட்டியெழுப்புகின்றனர். தொழிற் சங்கங்கள் நடவடிக்கைக்குத் தயாராகின்றன. மற்றெருநாள் ஹர்த்தால் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையென்கின்றனர் இடதுசாரிகள்.

இந் நிலையில் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? விலைவாசி உயர்வை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தால் இருக்கவே இருக்கிறது அவசரகாலச் சட்டம் என்ற துணிச்சலா? இல்லையேல் வகுப்புக்கலவரமொன்றைப் பெரிய அளவில் தூண்டிவிடலாம்—மக்கள் கவனம் அதில் திரும்பி விடும் என்ற எண்ணமா?

..

விஷம்போல ஏறும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த மார்க்கமில்லையேல், பொருளாதாரத்தைத் திட்டமிட்டு வளர்க்கச் சாத்தியமில்லையேல், சிறுபான்மையோருக்கு உரிமைகளை வழங்கி தேசிய ஐக்கியத்தை வளர்க்கத் திராணியில்லையேல், மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் வழங்க வழியில்லையேல், அவசரகாலச் சட்டமின்றி ஆட்சி புரியத் துணிச்சல் இல்லையேல் சுதந்திரக் கட்சி அரசாங்கம் உடனடியாக இராஜினாமாச் செய்துவிடுவதுதான் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் மக்களுக்குச் செய்யும் பெரும் சேவையாகும்.

## பொன் முட்டையிடும் வாத்து




# தி. மு. க. மீது அடக்குமுறை: தமிழக அரசாங்கம் செய்யும் தவறு

## ஏகாதிபத்திய முறையைக் கையாள்வது தியாகிகளின் திருநாமத்துக்கே இழுக்கு

முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களின் நலன் கோரி ஒரு நேர்மைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. வரிப்பளு அதிகரித்ததையொட்டி விலைவாசிகள் விஷம் போல ஏறின. அதனைக் கண்டித் தி. மு. க. தமிழ் நாடெங்கும் கச்சேரிகளில் (கலெக்டர் அலுவலகங்களில்) பிரமாண்டமான அளவில் ஒரு சாத்வீக மறியலை நடத்தியது. காங்கிரஸ் ஆட்சி அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டதோடு, ஜனநாயக விரோத, சட்ட விரோத செயல்களாலும் ஈடுபட்டது. இதன் விளைவாக நாட்டு மக்கள் அனைவரது அனுதாபமும் தி. மு. க. பக்கம் திரும்பிவிட்டதென்று தமிழ் நாட்டின் பல்வேறு நகரங்களிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

தி.மு.க. நடத்தியது அறப்போர்—அஹிம்சாப்போர்—காந்திய சத்தியாக்கிரகம். காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக இந்தப் போராட்டம்—நடத்தப்படவில்லை. ஆட்சியாளர்களின் கவனத்தைத் திருப்பி விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அவர்களைத் தூண்டுவதற்காகவே சாத்விக மறியல் நடத்தப்பட்டது.

சாத்விக மறியலைச் சாத்விக மறியலாகவே கருதாமல் ரத்தம் சிந்தும் பலாத்காரப் புரட்சியாகக் கருதி, வெறி பிடித்தவர்களைப் போல அடக்கு முறைத் தாண்டவமாடியது ஆட்சியாளர் செய்த பெருந்தவறு.

மறியலின்போது பலாத்காரச் சம்பவங்கள் நடைபெற்றதாம். ஆகையால் அது பலாத்காரப் போராட்டமாம். பலாத்காரத்தைக் கொண்டே அடக்க வேண்டுமாம். இது அரசாங்கத்தின் கட்சி.

என்னே விந்தை! ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளின் அடக்குமுறை அட்டூழியங்களுக்கு ஆளாகிய காங்கிரஸ்காரர்களே இப்படிக் கூறுவதென்றால் நாம் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது.

### அவர்களுக்குப் புதிதல்லவே

மறியல், சத்தியாக்கிரகம், அறப் போர் அனைத்தும் காங்கிரஸ்காரர்களுக்கு புதியனவையன்று அவர்களும் அவற்றைச் செய்து, தடியடி, துப்பாக்கிக் குண்டு, சிறை கோட்டம், சித்திரவதை ஆகியவைகளுக்கு ஆளானவர்கள்தான். அவர்களுக்குத் [illegible] வேண்டும் காங்கிரஸ் [illegible] முறைத் திருந்தவில்லை வென்பது.

ஒரு போராட்டம் வெகுசனப் போராட்டமாக மாறும்போது சிற்சில பலாத்காரச் சம்பவங்களும் ஏற்படுவது தவிர்க்க முடியாது. பயிற்றுப்பட்ட தொண்டர்கள் மட்டும் போராட்டத்தை நடத்துவார்களானுல் ஆட்சியாளரின் ஆத்திரமூட்டும் செயலுக்குப் பலியாகாதிருப்பார்கள். ஆனல் சாதாரண பொதுமக்களிடம் அதனை எதிர்பார்க்க முடியுமா?

### சரித்திரத்தைத் திருப்பிப்பார்!

மக்கள் கூட்டத்தின் மத்தியிலே அவர்களின் மதிப்புக்குரிய தலைவர்கள் கைதி செய்யப்பட்டால் மக்கள் ஆத்திரமடைவார்களென்பது காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாத விஷயமன்று. மக்கள் ஆத்திரமடைந்தால் என்ன நடைபெறுமென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானல் 1942-ல் "வெள்ளையனே வெளியேறு" போராட்டத்தின் சரித்திரத்தைச் சற்று திருப்பிப் பார்க்கட்டும்.

1942-ம் வருடப் போராட்டத்தின்போது நடந்த பலாத்காரச் சம்பவங்கள் தி. மு. க. போராட்டத்தில் நடைபெற்ற பலாத்காரச் சம்பவங்களுக்கு ஈடாக பொட்டுக்கூடப் போதாது. இதை எப்படிக் காங்கிரஸ் ஆட்சியினர் மறந்தார்கள்?

மக்களுக்கு ஆத்திரமூட்டி, சில பலாத்காரச் சம்பவங்களில் ஈடுபடத் தூண்டி, பின்னர் கண்ணீர்ப்புகை பிரயோகம், தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், சிறையினுள் கொடுமைப்படுத்தல் முதலிய கொடிய வன்முறைகளைக் கையாள்வது இந்தியாவில் ஏகாதிபத்தியவாதிகள் அனுஷ்டித்த உபாயமாகும். இதையே தி. மு. க. போராட்டத்தில் காங்கிரஸ் அரசாங்கம் கையாண்டுள்ளது. இது வெட்கக்கேடான செயலாகும்.

### 20,000 பேர் கைது

சத்தியாக்கிரகத்தில் சுமார் 20,000 பேர் கைது செய்யப்பட்டார்களென்றும், அதனுல் தி. மு. க. வுக்கு செல்வாக்கு அதிகரிக்குமெனஅஞ்சி, அந்த எண்ணிக்கையை அரசாங்கம் குறைத்துக் கூறுகிறதென்றும் ஒரு செய்தி கிடைத்துள்ளது.

சிறையினுள் சத்தியாக்கிரகிகளை நீண்டகாலசிறைத் தண்டனை பெற்றுள்ள கிரிமினல் கைதிகளைக் கொண்டு மிருகத்தனமாக அடித்து நொறுக்குகிறார்களாம். அடித்து உதைத்து நடுநிசியில் சிறை வாயிலைத் திறந்து தெருவிலே தள்ளி விடுகிறார்களாம்.

### எம். எல். ஏக்கு 'சி' வகுப்பா?

தி. மு. க. சட்டசபை உறுப்பினர் ஒருவருக்குச் சிறையில் 'சி' வகுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

அலிபுரம் சிறையிலே (ஆந்திராவில) காங்கிரஸ்வாதிகளும், சோஷலிஸ்டுகளும் சுதந்திரத்துக்குத் தவம் கிடந்தபோது, சாதாரண நிலையிலுள்ள காங்கிரஸ்காரர்களுக்குக்கூட "பி" வகுப்பு அளித்திருந்தார்களே வெள்ளையர்கள், ஏகாதிபத்திய வெள்ளையர்களுக்கிருந்த கருணைகூட இந்தக் காங்கிரஸ்காரர்களுக்குக் கிடையாதா?

இது மிகவும் கேவலமான செயல! இந்திய விடுதலைக்காக சுதந்திர தேவியின் பலிபீடத்திலே உயிர்த் தியாகம் செய்தவர்கள், வெஞ்சிறையிலே கடுந் தவம் புரிந்தவர்கள், இன்னும் சுதந்திரத்திற்காக சொல்லொணுத்தியாகம் செய்தவர்கள் ஆகியோரின் திருநாமங்களுக்கே இழுக்கைத் தேடிக் கொடுக்கும் செயல்தான் சென்னை அரசாங்கத்தின் இந்த அடக்குமுறை.

இம்மாதிரி ஏகாதிபத்திய போக்கிலே காங்கிரஸ்போவ

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம்போல் திரண்டனர் தமிழர் கூட்டம்

## மலைநாடும் வட கிழக்கும் ஒன்றுபட்ட காட்சி

### விவேகாநந்தா மண்டபத்தில் தமிழ் விழா

"வெள்ளம் போல் தமிழர்கள் கூட்டம் விரங்கொள் கூட்டம்" என்பதற்கொப்ப 29—7—62 ஞாயிறு மாலையில் கொழும்பு விவேகானந்த மண்டபத்திலுள்ளும் புறமும், தமிழ் பேசும் மக்கள் திரண்டிருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக விருந்தது. ஆண்களும் பெண்களும், வயோதிபர்களும், சிறுவர்களும் அலை கடல் போல் ஒன்று சேர்ந்து இருக்கக் காணப்பட்டனர். தமிழ கலாசார மன்றத்தினர் நடத்திய தமிழ் விழாவில் தமிழ்த் தலைவர்கள் வீர உரை நிகழ்த்தினர், திரு. கம்பனதாசன் தலைமைதாங்கினர்.

தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம், உடுப்பிட்டி பிரதிநிதி திரு. ரி. சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம், அன்பர் பூபதிதாசர் ஆகியோர் விழாவில் கலந்து உரையாற்றினர்.

மலைநாடும், வட கிழக்கும் ஒன்ருக இணைந்து, உரிமை காக்க ஒருமித்துப் போராடும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை விழா அறிவுறுத்தியது.

விழாவில், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. ரி. சிவசிதம்பரம், அன்பர் பூபதிதாசர் ஆகியோர் பேசிய பேச்சின் சில பகுதிகளை இங்கு தருகிறேம்.

### வட - கிழக்கும் மலைநாடும் ஒன்றுபட்டுவிட்டது

—அமிர்தலிங்கம்.

அடிப்படைப் பிரச்சினையை அணுகி ஆராய்ந்து அதனைத் தீர்ப்பதற்கு நல்ல வழிவகைகளைக் கூறும் கட்சிகளைத் தடைசெய்வது, பிரச்சினையை மென்மேலும் கூட்டுவது நாட்டின் அமைதியையும், ஒற்றுமையையும் ஏற்படுத்த இடம் தர மாட்டாது.

மலைநாட்டில்வதியும் தமிழ் மக்களின் சமூக, பொருளாதாரத்தை, அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய தி. மு. க.வைத் தடை செய்வது பைத்தியகாரத்தனம். பல்லாயிரக்கணக்கான ரூபா செலவு செய்தும் பெறமுடியாத பிரசாரத்தை தி. மு. க.வைத் தடை செய்ததன் மூலம் ஸ்ரீமாவோ அரசாங்கம் தி. மு. க. விற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மலைநாட்டுத் தமிழ் மக்களிடம் நிலையான ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்த திருமதி பண்டாரநாயகாவுக்கு தி. மு. க. தலைவர்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு, மலைநாடு ஆகிய இடங்களில் வதியும் தமிழ் பேசும் மக்கள் எத்தனையோ எதிர்ப்புச் சக்திகளையும் மீறி இன்று ஒன்றுபட்டு, உரிமைப் போரில் ஈடுபட்டுள்ளனர்.

மலைநாட்டு மக்களிடம் இன்று ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியை உணரா மலில்லை. அவர்களை வழி நடத்த முடியாத தலைவர்களில் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. அவர்களுடைய பொறுமை எல்லையைத் தாண்டி விட்டது. குமுறும் எரிமலையாக அவர்களுடைய உரிமை உணர்ச்சி ஒரு நாளைக்கு வெளிப்படத்தான் போகிறது. தங்கள் தலைமைப் பதவியையும், அந்தஸ்தையும், காப்பாற்றிக் கொள்ள மலைநாட்டுத் தலைவர்கள் என்று கூறிக் கொள்ளுவோர் அப்போது என்ன நிலை அடைவார்கள் என்பதைக் காலம் காட்டும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக பாரம்பரியமுடைய தமிழ் பேசும் இனத்திற்கு 5 ஆண்டுப் போராட்டம் முக்கியமல்ல. ஏறக்குறையப் பல நூறு ஆண்டுகள் தொடர்ந்து கடும் போராட்டம் நடத்திய பின்னர்தான் இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்றது. நமது இனவிடுதலைப் போராட்டம் உண்மையில் 1956ல் தான் ஆரம்பமானது. ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் சுதந்திரம் கிடைத்துவிடும் என்பது எமது எண்ணமில்லை. சுதந்திரம் என்பது சுலபமாக கிடைக்கும் பொருளல்ல. எமது போராட்டம் தொடர்ந்து பல ஆண்டுகள் நீடிக்கவேண்டும்.

சோர்வற்ற முறையில் அரசாங்கஊழியர்களும், பொது மக்களும் தொடர்ந்து எதிர்ப்புக் காட்ட வேண்டும், தமது செயல்களை எப்பொழுதும் தமிழிலேயே ஆற்ற வேண்டும்.

### ஒரு 'மெல்'லைப் பிடிக்க முடியாதவர் எம்மை அடக்கவா?

—சிவசிதம்பரம்

ஏழு மாதங்களாக பொலிசுக்கும், இராணுவத்துக்கும் 'டிமிக்கி' கொடுத்துக் கொண்டு வந்த ஒரு ரோயிஸ் டி மெல்லைக் கைது செய்ய முடியாமற் போய் விட்டது இந்த அரசாங்கத்துக்கு. இன்று தமிழரசுக்கட்சியைத் தடை செய்து விடுவோம், தமிழ் பேசும் மக்களின் உரிமைக் கிளர்ச்சியை, இன விடுதலை உணர்ச்சியை அடக்கி விடுவோம், ஒடுக்கி விடுவோம் என்று குமுறுகிறது. இவ்வாறு உடுப்பிட்டி எம். பி திரு. சிவசிதம்பரம் கூறினர்.

அவர்மேலும் பேசுகையில் இந்தியாவிலே நேருவின் அரசாங்கத்துக்குத் தீராத தலையிடியைக் கொடுத்து வரும் தி. மு. க. வை தடை செய்யலாமா? அது நடக்கக் கூடியதா? என்று இந்திய அரசாங்கம் ஆலோசிக்க ஆரம்பிக்கு முன்னரே, ஒருபடி முன் சென்று இலங்கை தி. மு. க. வை திருமதி பண்டாரநாயகா அரசாங்கம் தடை செய்துள்ளது.

பாரதப் பிரதமர் நேரு அண்மையில் இலங்கை வரப் போகிறார் என்ற செய்தி அடிபடுகிறது. அவர் இங்கு வந்து இங்குவாழும் 10 லட்சத்துக்கதிகமான மலை நாட்டுத் தமிழர்களை இந் நாட்டு மக்கள் என்றே ஒத்துக் கொள்ளவேண்டும். முன்னர் கைச்சாத்திடப் பட்ட நேரு ஒப்பந்தம் பிரதேச மொழியாகத் தமிழ் மொழியை ஒப்புக் கொண்டுள்ளது. இங்கு வாழும் மலைநாட்டு மக்கள் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் ஓர் அங்கம் என்பதை நேரு அவர்கள் கருத்திற் கொள்வதுடன் இந்த எண்ணத்துக்கு மாருக செயற்படக் கூடாது என்றும் கூற விரும்புகிறேம்.

1963-ல் அரசாங்கம் தனது அலுவலகங்களிலிருந்து தமிழ் பேசும் ஊழியர்களை அப்புறப்படுத்துவது என்று எண்ணியுள்ளது. நான் உறுதியுடன் கூறுகிறேன். இந்த நாட்டில் யாரும் விரும்பாத பிளவை அந்த நாள் ஏற்படுத்தப் போகிறது. இந் நாடு பிளவுபடுவதை யாரும் தடுக்க முடியாது. அரசாங்கமே இதற்கு உடந்தையாகிறது. ஆகவே அரசாங்கத்திற்கு என் நன்றி.

1958-ல் தான் ஏவிவிட்ட படைக்குத்தானே பலியானுர் முன்னுள் முதலமைச்சர் திரு. பண்டாரநாயக்கா. ஊழ்வினை வந்து உறுத்தும்—தான்செய்த வினையைத் தானே அனுபவிப்பார்—என்பதற்கெல்லாம் இதை விடச் சான்று கண்டு பிடித்தல் முடியாது. வினை விதைத்தவர் வினை அறுத்தே ஆக வேண்டும்.

### சேர் ஐவோரின் அபிப்பிராயம்

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முன்னுள் துணை வேந்தர் சேர் ஐவோர் ஜெனிங்ஸ் இலங்கை வந்திருப்பது வாசகர்கள் அறிந்ததே.

மத அடிப்படையில் விகிதாசாரப்படி மாணவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப் படவேண்டுமென்ற இலங்கைத் தேசியக் கல்விக் குழுவினரின் சிபார்சு பற்றி அவரிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதற்கு அவர், "நான் எந்த விஷயத்திலும்—ஆண், பெண் விஷயத்தில் கூட—ஓரவஞ்சக மனப்பான்மை காட்டப் படுவதை விரும்புவதில்லை. அதுவும், கல்வியில் இத்தகைய மனப்பான்மை தலை தூக்குவதை நான் அறவே வெறுக்கிறேன்" என்று பதிலளித்தார்.

சேர் ஐவோர் ஜெனிங்ஸ் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைத் துணைவேந்தரென்பதும், பாராளுமன்ற விடயங்களில், உலகிலேயே தலை சிறந்த நிபுணரென்பதும் அனைவரும் அறிந்ததே.

அவர் தெரிவித்த கருத்தை அரசாங்கம் மனதிற் கொள்ளுமா?

### கருவாட்டு மூளைகளின் நாசக்குரல்

—அன்பர் பூபதிதாசர்

"இந்த நாட்டிலே பிறந்து இந்த மண்ணிலே வாழ்ந்து வரும், இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அல்லும் பகலும் பாடுபட்டு வரும் ஒரு சாராரை "நாடற்றவர்கள்" என்று கூறும் திறம் படைத்த மூளை உண்மையிலேயே நாற்றமெடுக்கும் கருவாட்டுமூளை என்றவர்களைக்குப் பொருத்தமானதே". இவ்வாறு அன்பர் பூபதிதாசர் பேசும் போது கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: மிருகங்களுக்குக் காடுண்டு. பறவைகளுக்குக் கூடுண்டு. இந்த நாட்டிலே பிறந்து, இந்த நாட்டிலே வாழும் மலைநாட்டுத் தமிழர்கள் நாடற்றவர்களாம். உலகின் எந்த மூலையிலுமே காணமுடியாத இந்தச் செயல், புத்த சமயத்தைப் போதிக்கும் புண்ணியர்கள் வாழும் இந்தப் பூமியில் தான் உண்டு.

மௌனசாமியான இந்த செல்வநாயகத்துடன் இந்தப் பீரங்கிகளை ஒத்த இடிமுழக்க வீரர்களும் சேர்ந்தது எதற்காக? தமிழ் பேசும் இனம் ஒன்று படவேண்டும்—உரிமை வேட்கையுடன் போராடி வெற்றி பெற வேண்டும் என்பதை அன்றி வேறு என்ன காரணம் இருக்க முடியும்.

### தி. மு. க. மீது...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கண்டு வருந்துகின்றேம்.

தி. மு. க. பலாத்காரத்துக்குத் திட்டமிடவில்லை யென்பது தெளிவு. சாத்விக முறையிலே சத்தியாக்கிரகம் நடத்த வேண்டுமென்று தி. மு. க. தலைவர் திரு. அண்ணுதுரை பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தாரல்லவா? மக்களின் மதிப்புக்குரிய ஒரு தலைவர் பகிரங்கமாகக் கூறுவதை ஏற்றுக் கொள்வதுதான் ஜனநாயகப் பண்பு.

ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறையால் அன்று காங்கிரஸ் வளர்ந்தது. காங்கிரஸின் அடக்கு முறையால் இன்று தி. மு. க. வளர்கிறது.

## அ. எ. வி. சங்கம் வழக்கு விசாரணை

### சுற்று நிருபத்தில் மாற்றம்

55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குச் சேவை நீடிப்புக்குச் சிங்களத் தேர்ச்சி தேவை என்று விதிக்கும் 555-ம் இலக்கத் திறைசேரி சுற்று நிருபம் சட்ட விரோதமானது என்று குற்றஞ் சாட்டி அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மே மாதம் ஓர் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. யூலை மாதம் 20-ம் திகதி கோட்டில் ஆஜராகும்படி திறைசேரிச் செயலாளர் திரு. ஷேர்லி அமரசிங்கா மீது சமன்ஸ் பிறப்பிக்கப்பட்டது.

இவ் வழக்குக்கு 20-ம் திகதி காலை நீதபதி திரு. வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் திரு. அமரசிங்கா ஆஜரானுர். இவ் வழக்கைச் ச[illegible] பிரிவின் பிரகார[illegible] பிரதிவாதியாக்கும்படி அட்டர்னி ஜெனரல் அன்று விடுத்த விண்ணப்பத்தைக் கோட்டார் ஏற்றனர்.

ஒக்டோபர் மாதம் 5-ந் திகதி தங்கள் மறுமொழியைத் தாக்கல் செய்யுமாறு அட்டர்னி ஜெனரலுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வழக்கு எடுப்பதற்கு முதல் நாள், (யூலை 19) திறைசேரி 555ம் இலக்கச் சுற்று நிருபத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மாற்றி வேறோர் சுற்று நிருபம் விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி சேவை நீடிப்புக்குச் சிங்களமொழித் தேர்ச்சி தேவையில்லையென்றும், பேச, விளங்கத் தெரிந்தால் போதுமென்றும், ஆ[illegible] [illegible] கூறுமாறும் கேட்கப்பட்டுள்ளது.





சி. சி. சி.
தாவர உரப்பசளைக் கலவைகள்
அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கிறது

எமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந் தொகையான நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நீங்கள் திடமாக நம்பியிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பனி லிமிட்டெட்,
(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.)
பசளைப் பகுதி
அங்லண்ட் ஹவுஸ்,
யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நல்லதும் கெட்டதும்

“பொன்னு”

**1959-ம்** வருடம், ஆவணி மாதத்தில் ஒரு நாள். முதல் நாளே எங்கள் பாடசாலைக்கு இரண்டாம் தவணை விடுதலை விட்டு விட்டார்கள். ஒவ்வொரு தவணை விடுமுறையிலும் விடுதலை விட்ட அன்றே கண்டியை விட்டுப் புறப்பட்டு அடுத்த நாளே மட்டக்களப்பில் எனது இல்லத்தில் நிற்பேன். ஆனுல் அந்த முறை மட்டும் உடனடியாக ஊருக்குப் போக முடியாமல் இருந்தது.

வருடாவருடம் கண்டியில் நடைபெறும் பௌத்தர்களின் பிரமாண்டமான கண்டிப் பெரகராக் காலம் அது. எத்தனையோ தடவைகளில் நான் கண்டியைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். ஆனுல் கண்டிப் பெரகராவை ஒருமுறை கூடப் பார்த்ததில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இடம் கொடாததால் அது நிறைவேறவில்லை. ஆனுல் உத்தியோகமே கண்டிக்கு மாற்றப்பட்ட பின்னரும் கூட அந்தப் பெரகராவைப் பார்த்து எனது கண்டித் தரிசனத்தைப் பூரணமாக்காமல் இருக்க முடியுமா?......

இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எனது அறைக்கு வந்து சற்றுநேரம் உட்கார்ந்திருந்தேன். மனம் கண்டி நகர வீதிகளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. எனவே கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு தெருவில் இறங்கி நடந்தேன்.

ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தின் முன்னே கொடிகள் பிடிப்பவர்களும் வெளிச்சம்காட்டுபவர்களும் சென்று கொண்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து கண்டிய நடனம், கும்மி, கோலாட்டம், தீப்பந்தம் சுழற்றுதல் என்பன நடையில் நடந்துகொண்டிருந்தன. அவற்றைத் தொடர்ந்து ஐம்பதுக்குக் குறையாத யானைகள் அணியாகச் சென்றுகொண்டிருந்தன. புத்த மகானின் புனித தந்தம் பொதியப்பட்ட பேழையைத் தாங்கிச் சென்ற யானை கம்பீர நடை போட்டது. மக்கள், “சாது!......... சாது!.........” என்று உரத்துக் கோஷமிட்டனர். சிறிய மணிகள் மெதுவாக ஒலித்துக் கொண்டிருந்தன. எங்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம், பக்திப் பிரவாகம்.

ஊர்வலம் முழுமையாக என்னைத் தாண்டிச் சென்றது. குழந்தைகளைப்போல அதன் பின்னுலேயே நடந்த பலருடன் நானும் சேர்ந்து நடந்தேன். அப்படி நடப்பதில் அந்த நேரம் ஒரு தனி மகிழ்ச்சியாயிருந்தது.

ஊர்வலம் கண்டி வாவியைச் சமீபித்த நேரத்தில் பக்தி சிரத்தையுடனும் மகிழ்ச்சி ஆரவாரத்துடனும் நின்றுகொண்டும் நடந்து கொண்டும் இருந்த மக்கள் கூட்டம் கண்மூடித் திறக்கும் நேரத்துள், என்ன நடந்தது என்று எவரும் விளங்கிக்கொள்ளாத நிலையில் கூச்சலிட்டபடி நான்கு பக்கங்களிலும் சிதறி ஓடியது. “என்ன?...என்ன?...” என்று கேட்டவர்களையும் முட்டி மோதிக்கொண்டு கண்ட கண்ட திசைகளில் சிதறினர் மக்கள்.

ஆமாம், ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்த யானைகளில் ‘ராஜா’ என்ற யானை வெறிபிடித்துக் குதித்து ஓடியது. தன் இஷ்டம் போல் மக்கள் கூட்டத்தை மிதித்து நசித்தது. எனவே மக்கள் கூட்டம் சிதறியது. முட்டியும், மோதியும், விழுந்தும், எழுந்தும் கால்கள் போன பக்கங்களில் ஓடினர் மக்கள். ஊர்வலச் சிதறலால் மற்ற ஊர்வல யானைகளும் ஆங்காங்கே ஓடியதில் பலர் விழுந்து நசிபட்டனர். யானைகளின் கால்களால் மிதிபட்டோரைவிட மக்களால் மிதிபட்டோர் அநேகர். கண்டி வாவியிருந்த திசையில் ஓடிய பலரும் வாவியில் உருண்டு விழுந்தனர். “ஐயோ!......அம்மே!....மகே புத்தா!......தாத்தா......” இப்படி அழுகையும் கூக்குரலுமே கேட்டன. போர்க்களம்போலவே காட்சியளித்தது அந்த இடம்.

அடுத்த நாள். கண்டி ஆஸ்பத்திரியில் ஏகப்பட்ட கூட்டமாயிருந்தது முதல் நாளிரவு மாண்டவர்களின் பிரேதங்களை அடையாளம் கண்டுபிடிப்பதற்காக நின்ற நீண்ட வரிசையில் பலர் அழுதபடியே நின்று கொண்டிருந்தனர். ‘எனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருப்பார்களோ?...’ என்ற எண்ணத்துடன் அங்கு வந்த நானும் அந்த நீண்ட வரிசையில் ஒருவனுகச் சேர்ந்து கொண்டேன்.

பிரேதங்களைப் பார்த்துக் கொண்டே வந்த நான் திடீரென உற்றுப் பார்த்தேன். அப்பப்பா!......எவ்வளவு கோரம்!......பளிச்சென உள்ளத்தில் படர்ந்தன அந்தப் பயங்கர நிகழ்ச்சிகள்.

*

1958-ம் ஆண்டு,மே மாதம் என்றதும் எல்லோர் மனத்திரையிலும் ஓடக்கூடிய காட்சிகளை நான் கூறத் தேவையில்லை. இலங்கைச் சரித்திரத்தில் என்றுமே எவராலும் மறக்க முடியாத மாதம் அது. உரிமை கேட்ட ‘குற்றத்’துக்காகப் பலர் தங்கள் உயிரையே அர்ப்பணித்த மாதம் அல்லவா அது. ‘மிருகத்தைப் போல் நடந்து கொண்டான்’ என்று யாரையாவது எப்போதாவது நாம் சொல்கிறோம். ஆனுல் இனவெறியால் மனிதர்கள் நடந்து கொண்ட விதம், ‘மனிதனைப் போல் மிருகம் நடந்துகொள்ளாது’ என்றுதான் சொல்ல வைக்கிறது. அப்பப்பா!......இந்த மனித இனவெறிக்கு முன்னே மிருகவெறி பிச்சை தான் வாங்க வேண்டும் பசியெடுத்த சிங்கங்களைப்போல மனித இரத்த வேட்கைக்காக மனிதர்களே அலைந்த மாதமாயிற்றே அது!

அந்த வெறியாட்டம் நடப்பதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னர்தான் நான் கொழும்பிலுள்ள ஒரு பாடசாலைக்கு ஆசிரியனுக நியமிக்கப்பட்டேன்.

‘கொழும்பில் வாழ்வதற்குச் சிங்களம் வேண்டும்’ என்று சொல்பவர்கள் வெறும் பொய்யையே சொல்கிருர்கள் என்ற உண்மையை என்னுல் உணர முடிந்தது. ஆமாம், கொழும்பில் தமிழ் பேசும் மக்களும் தாராளமாக வாழ்கிருர்கள் என்பதுடன்; கொழும்பிலுள்ள எல்லோருக்கும் சிங்களமும் தமிழும் நன்கு தெரியும் என்பதையும் அறிந்து [illegible] கொழும்பு வாசிகளில் ஒருவனுக ஆகி விட்டேன் நானும். ஆமாம்! சரளமாகச் சிங்களமும் பேச என்னுல் முடிந்தது.

வீட்டுப் பிரச்சினையின் உச்சத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் கொழும்பு மாநகரில் உத்தியோகம் பார்ப்பவர்களில் பலர் நகரத்தையடுத்த கிராமப் பகுதிகளில்தான் அமைதியாகவும் ஆறுதலாகவும் வாழ்கின்றனர். அப்படித்தான் வாழவும் முடியும். அந்த முறையையே நானும் எனது நண்பன் அருளும், பின்பற்ற வேண்டி ஏற்பட்டது.

கொழும்பிலிருந்து சுமார் எட்டு மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு சிங்கள ஹோட்டலின் மாடியறை எங்களுக்குக் கிடைத்தது. எங்கள் இருவருக்கும் தாராளமாகப் போதுமான நல்ல வசதியுடன் அமைந்திருந்தது அந்த அறை. ஹோட்டல் முதலாளி அப்புகாமி மிகவும் நல்லவன்; நண்பன் போலவே பழகினுன் எங்களுடன்.

காலை எட்டு மணிக்குச் சாப்பிட்டுவிட்டுக் கொழும்புக்குப் ‘பஸ்’ ஏறினுல் மீண்டும் பிற்பகல் ஆறுமணிக்குப் பிறகுதான் அறைக்குத் திரும்புவோம். எங்களுக்கு எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை. வாழ்க்கை மகிழ்ச்சியாகவே அமைந்திருந்தது.

யாரும் எதிர்பார்த்திருக்காத அந்தநாள் வந்தது. அதுதான் 1958-ம் ஆண்டு மே மாதத்தில் ஒரு நாள்.

அன்று பகல் ஒருமணியிருக்கும்; பாடசாலையில் ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டது. பிள்ளைகளின் பெற்றோர்கள் வகுப்பறைகளைச் சூழ்ந்து கொண்டு ‘பிள்ளைகளை விடுங்கள் ஐயா. எங்கும் குழப்பம் நடக்கிறதாம். வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, கோட்டை, புறக்கோட்டை எங்கும் தமிழர்களை அடிக்கிருர்களாம். தமிழரின் கடைகளை உடைக்கிருர்களாம், கொள்ளையடிக்கிருர்களாம், நெருப்புவைக்கிருர்களாம்’ என்று கூறியபடி ஆசிரியர்களாகிய எங்களின் உத்தரவுக்குக்கூடக் காத்திருக்காமல் தங்கள் பிள்ளைகளை அவசர அவசரமாக அழைத்துச செல்வதில் ஈடுபட்டனர்.

எங்கள் உடல், உள்ளம் எல்லாம் பதறின. உடனேயே பாடசாலை மூடப்பட்டது எங்கள் பாடசாலை இருந்த பகுதியில் அந்த நேரம் எதுவும் பரவவில்லை. அதற்குமுன்னர் இருப்பிடங்களுக்குப் போய்விட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆசிரியர்கள் எல்லோரும் அவசரமாகப் பாய்ந்து ஓடினேம்.

நான் ‘பஸ்’ஸில் ஏறி உட்கார்ந்தபோது உள்ளே எல்லோரும் அதே பேச்சையே பேசிக்கொண்டிருந்தனர். ‘பஸ்’ஸினுள் வேறு தமிழர் எவரும் இருநததாகவே தெரியவில்லை. என் இதயம் துரிதமாக அடித்துக்கொண்டிருந்தது. ‘பஸ்’ஓடிக்கொண்டிருந்தது சற்றுநேரம்மௌனமாகவே உட்கார்ந்திருந்த எனக்கு, அப்படி உட்கார்ந்திருப்பது கூட ‘நான் தமிழன்’ என்பதைக் காட்டிக் கொடுத்துவிடலாம் என்ற எண்ணம் எழவே, பக்கத்தில் உட்கார்ந்திருந்தவனின் பேச்சில் கலந்து கொண்டேன். அத்தோடு அவன் வைத்திருந்த சிங்களப் பத்திரிகையில் ஒரு பகுதியை வாங்கி வாசிப்பவன்போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தேன். இருந்தாலும் இருப்பிடம் போய்ச் சேர்வதற்குள் எனக்கு என்னென்ன நடக்குமோ என்ற பீதியால் இதயம் இன்னும் மின்னும் வேகமாகவே அடித்துக் கொண்டிருந்தது.

ஏதோ ஆண்டவன் அருளால் இருப்பிடம் போய்ச் சேரும்வரையில் எந்த வித ஆபத்தும் ஏற்படவில்லை. ‘பஸ்’ஸை விட்டிறங்கி ஹோட்டலுள் நுழைந்த பிறகுதான் நிம்மதியாக மூச்சுவிட முடிநதது.

‘அருள் எங்கு போனுனே, என்ன ஆனுனே?’ என்று எண்ணியபடியே நான் மாடிக்குப் போனபோது அருள் எனக்கு முன்பே அங்கு வந்திருப்பதைக் கணடேன். அவன மிகப் பயந்தவனைப் போல் வெலவெலத்து உட்கார்ந்திருந்தான். என்னைக் கண்டதுதான் தாமதம், “துரை, இப்போது என்ன செய்வது? எங்கே போவது? .........” என்று நடுங்கிய குரலில் கேட்டான்.

அவன் நடுக்கத்தைக் கண்டதும் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஆமாம், என் உள்ளம் எதற்கும் கவலைப் படவில்லை. அப்புகாமியின் மாடியறையில் எதுவும் வராதென்பது எனக்கு நிச்சயமாகத தெரியும்.


“ஏன் அருள் இப்படிப்பயப்படுகிருய்? நாம் எங்கேயும் போகவேண்டியதில்லை. நிம்மதியாக இங்கேயே இருக்கலாம். அப்புகாமி இருக்கும் வரை நாம் எதற்கும் கலங்க வேண்டியதில்லை” என்றேன்.

“அப்படிச் சொல்லாதே துரை. கந்தோரில் நண்பர்கள் போல் ‘சளசள’வென்று பேசும் சிங்களக் குமாஸ்தாக்கள் இன்று என் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை”—என்ற அவன் குரலில் இன்னமும் நடுக்கம் இருந்தது.

“அப்புகாமி அப்படிப் பட்டவனுயிருக்க மாட்டான்!.........” என்று நான் சொல்லி முடிப்பதற்கும் அப்புகாமி மாடியேறி வருவதற்கும் சரியாயிருந்தது.

“மாஸ்டர்! நீங்கள் இரண்டு பேரும் எங்கேயாவது போய் விடுங்கள்” என்று வந்ததும் வராததுமாய் அப்புகாமி சொன்னதும் நான் அதிர்ச்சிக்குள்ளானேன். என் தைரியமெல்லாம் திடீரென

(13-ம் பக்கம் பார்க்க)




நம்பிக்கையான

நைலோன்



வலைகளுக்கும், நூல்களுக்கும்

சேகரம் அன் சன்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலை பேசி: 693

தந்தி: சேகரம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'தடுப்புக்காவலில் நாம்'

## அருமை மகள் அன்பரசிக்கு எழுதிய மடல்—3.

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமகம,
20—4—1961

என் அருமை மகள்
அன்பரசிக்கு,

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு மூன்று நாட்கள் கடக்கின்றன. சுதந்திரப் பறவையாக, யாழ்ப்பாணத் தெருவில் உலாவிய நான்—'ப' வடிவு கொண்ட மேல் மாடியில் மட்டுமே உலாவ வேண்டியுள்ளது.

மேல் மாடியில் ஏறக்குறைய இருபது அறைகள், அவ்வறைகளிலெல்லாம் தலைவர்களும் தொண்டர்களும். அறைகளுக்குப்போகலாம். அறைகளுக்கு முன் உள்ள விறுந்தையில் உலாவலாம். இது தவிர மாடிப் படியைக்கூட எமது கால்கள் தீண்ட முடியாது. அதாவது பூமியை எங்கள் பாதங்கள் தீண்டுவதில்லை.

ஒவ்வொரு அறையிலும் குளிக்கும் அறை, மல கூடம் ஆகியன இணைக்கப்பட்டிருந்தன. உணவு கூட மேன்மாடியின் மத்திய பகுதியிலாகும். மேன்மாடியிலிருந்து கண்ணுக் கெட்டிய தூரம் பார்க்க முடியும்.

அவிசாவலைப் பக்கமாக வுள்ள மலைத் தொடர்கள், அத்தொடர்களில் பனிப் புகார் உறையும் காட்சி, இடைக்கிடை காணப்படும் தென்னை மரங்கள்.........சூழவுள்ள இராணுவக் கட்டிடங்கள், இராணுவத்தினர் தேகப்பயிற்சி செய்யும் காட்சி, அணி நடைபுரியும் காட்சி......இவைகளே கண்ணுக்குத் தெரியும். மூன்று நாட்களாகத் தொடர்ந்து பார்த்தால், அச் சடப் பொருட்களும் எங்களுடன் வாழும் பொருட்கள் போலாகி விட்டன.

பதினெட்டாவது இலக்க அறையில் எனது படுக்கை இருந்தது. இன்று எல்லோரும் அறையிலேயே சிந்தனை வயப்பட்டோராகவிருந்தனர். எல்லாரது இதயங்களும் அழுது கொண்டிருந்தன.

ஏன்?

நேற்றுக் கைதாகி வந்தவர்கள் மூலம் 17-ந் திகதி இரவு யாழ்ப்பாணம் கச்சேரியடியில் நடந்தவற்றையெல்லாம் ஓரளவில் கேள்விப்பட்டோம். ஆனால், கூறியவர்களும் முழுவதையும் கூறினார்களா? அவர்கள் தாமறிந்தவற்றையே கூறினர்.

பதினேழாந் திகதி இரவு, நாம் கைதான இரவு........ சாம நேரம், அலை அலையாக

**புதுமைலோலன்**

யாழ்ப்பாணத் தியேட்டர்களிலிருந்து மக்கள் கூட்டம் கச்சேரியை நாடிற்றும். கச்சேரியின் சூழலெங்கும் இராணுவம் காவல் செய்தனராம். ஆட்சி பீடத்தின் கொடுமைக் கரங்கள் இரதத ஆறு ஓடச் செய்ய எண்ணியிருக்க வேண்டும்.

சடசடவென கச்சேரியிலிருந்து இராணுவக்கும்பல் சத்தியாக்கிரகிகளை நாடி வந்தனராம். ஒரு சத்தியாக்கிரகியை மூன்று நான்கு இராணுவ வீரர் வீதம் தாக்கினராம். தலைவர்கள் யாவரும் கைது செய்யப் பட்டாயிற்று,......அப்போது அங்கே நின்றவர்களில் உடுப்பிட்டி சிவசிதம்பரம் அவர்களும், வழக்கறிஞர் நடராசா அவர்களும் தாக்கப் பட்டனராம். பெண்களின் வீரத்தைக் கூறாது இருக்க முடியவில்லை.

"எழுந்து செல்லுங்கள், எழுந்து செல்லுங்கள்" என இராணுவ அதிகாரி தடவாகக் கூறினராம்.

பெண் சத்தியாக்கிரகிகள் அசையவில்லை.

உரமாகக் கோபமுடன் கூறினராம்,

பெண்கள் அசையவில்லை.

பெரியதொரு ஜீப் வண்டி வந்ததாம். அதில் ஏறச் சொன்னார்களாம்.

பெண் சத்தியாக்கிரகிகள் அசையவில்லையாம்.

திருமதி இராசாத்தி என்ற பெண்ணின் வீரத்தையும் உறுதியையும் கண்ட இராணுவமே ஆச்சரியமடைந்ததாம். பெண்களைத் தூக்கி வண்டியில் போட இராணுவம் எண்ணியதும்... பெண்கள் வண்டியில் ஏறினராம். வண்டியில்கூட அவர்களது சத்தியாக்கிரகப் பாட்டு ஒலித்துக் கொண்டேயிருந்ததாம்.

இவற்றையெல்லாம் கேட்கக் கேட்க நெஞ்சு விம்மிற்று.

பழனி என்ற வாலிபன் மூர்ச்சையாகி, எழமுடியாதளவுக்குத் தாக்கப்பட்டாராம் என்பதையறிந்து தோள்கள் பூரித்தன.

வழக்கறிஞர் நடராசாவின் வெண்மண்டை உடைக்கப்பட்டதாகக் கேட்டும் இதயம் களிப்பே கண்டது. சத்தியாக்கிரகிகள் காணும் துன்பம்—தன்னலமறுப்பு—துயரத்துக்குரியதல்லவே!

சத்தியாக்கிரகிகளின் உடலிலிருநது புறப்படும் ஒரு துளி இரத்தம் போதும்.........சரித்திரத்தை மாற்றியமைக்க...! தமிழரின் வீரம் மடியவில்லை. துணிவும் தியாகமும் மாயவில்லை. அன்புக் குண்டாம் அகிம்சை எனும் பேராயுதம் கொண்டு மலையுடன் தமிழர்கள் மோதுகின்றனரா?

அகிம்சைக்கு மலையும் மடுவாகும், கொடுமையும் பணிந்தேயாகும்,......காலம் காட்டப்போகும் உண்மைகள் மகளே உண்மைகள்!

இவற்றையெல்லாம் அறிந்து கொண்ட நேரத்திலேயே, யான் இக் கடித ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல எமது இதயம் அழும் செய்தியும் கேள்விப்பட்டோம். "உடுப்பிட்டிப்பிரதிநிதி மு. சிவசிதம்பரம் அவர்கள் பதினேழாந் திகதியிரவு கடுமையாகத் தாக்கப்பட்டதால்........." எப்படி எழுதவென்றே தெரியவில்லை...... எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டாரென... அதாவது அமரராகி விட்டாரெனக் கேள்விப்பட்டதும்... உடல் நடுங்கியது, உள்ளம் நினைவற்று மரத்தது.

ஐயகோ!...... தமிழ்க் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதியாகவிருந்தும், ஆண்மையாளராக—வீரத் தமிழனாக—போராட்டத்தில் முக்கிய பங்கு கொண்ட தலைவர்...... தண்மையும், பெருமையும், கொண்டு மனமும் நிறையக் கொண்டிருந்த தலைவர்...... சில காலத்துள் மக்களின் மதிப்பை அபரிமிதமாகப் பெற்றுக் கொண்டு விட்ட சிவசிதம்பரம் எங்கே! எங்கே?

அயல் வீட்டு மல்லிகையின் மணம் கண்டு மகிழக் கூடாதா என்ன? எங்கள் தமிழரசுப் பாசறையில் இல்லாது விட்டாலும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து வரும் மிகச் சிறு கூட்டத்தவர்கள் சிவசிதம்பரத்தின் தன்னலமறுப்புக் கண்டு மகிழலாய; தமிழரசுக் கட்சியின பாடி வீட்டின் உத்தமராக திரு. சிவசிதம்பரம் மதிக்கப்பட்டார். அவரது சொற்பொழிவுகள், அவரது பாராளுமன்றப் பேச்சுகள், அரசியல் நடத்தைகள் என்பன யாவும் தமிழரசுவாதி போன்றேயுள்ளன? ஆனவின்னும் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினராக விருப்பது ஏன்—என என்னையே யான் கேட்டுப் பார்த்திருக்கிறேன் பலமுறை. விரைவில் தமிழரசு இயக்கத்தில் உறுப்பினராகி, உள்ளும் புறமும் தூய்மையுடன் தமிழரசுக் கடசியினர் ஆவார் என்றே நானும் பலரும் எதிர் பார்த்தோம். ஏனெனில், அரசியலில் சிறந்த ஒரு தலைவன் எப்போதும் நடிகனாக அமைவதில்லை? தோல்வியிலைப் பினும் இலட்சியத்துக்கே மதிப்பளிப்பான்?

ஆகவே, திரு சிவசிதம்பரம்—சத்தியாக்கிரகத்தின் போது நடந்து கொண்ட உயர் தன்மைகளைக் கண்டு, மேற் குறிப்பிட்டவை போலத்தானே கருத முடியும்?

அப்படிப்பட்ட தமிழர் தலைவர்......அமரராகி விட்டாரா?

தாங்க முடியாத வேதனையின் சுழலில் அகப்பட்டோம். பூமித்தாயையே மிதிக்க முடியாது, மேன் மாடியில் அந்தரத்தில் வாழும் நாம்.........எதைத்தான் செய்யலாம்? மனதினுல் குமையலாம், வாதனை கொண்டு உலவலாம்.

எங்களுக்கு தினகரன், வீரகேசரி, 'டெயிலி மிறர்' 'டெயிலி நியூஸ்', "டைம்ஸ் ஒவ் சிலோன", ஆகிய பத்திரிகைகள் தந்தனர். அவைகளிலாவது திரு. சிவசிதம்பரம் அவர்களின் நிலைபற்றியிருக்காதா எனத் தட்டித் தட்டிப் பார்த்தோம்.

ஊரடங்குச் சட்டமும், அவசரகால நிலையும் காரணமாகப் பத்திரிகை எதைத் தான் எழுத முடியும்?

மாலை ஆகியது. மல்லாகத்தைச் சேர்ந்த—தமிழரசுத் தபாலதிகாரி—திரு. சு. நடராசா (வழக்கறிஞர்) கைதாகி வந்தார். அவருக்கெனத் தனி விசேட விமானம், யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்ததாம். அவரைக் கண்டதும் எல்லார் இதயத்திலும் ஒரு சிறு துள்ளல் எழுந்தது. ஏனெனில், சிவசிதபரம் பற்றி அறியலாமல்லவா?

நடராசா அவர்கள் மேன் மாடியை அடைந்தார் தலையில் கட்டுக்களுடன் காணப் பட்டார்.

எங்களியக்கத் தவர்கள் குடும்ப பாசம் கொண்டவர்கள் போன்று உறவாடுவோம். சொந்தச் சகோதரர் போலப் பழகுவோம். நடராசா அவர்களின் அரசியல் வாழ்வைக் கூர்ந்து கவனித்தேன் பலமுறை.

எத்தனையோ தலைவர்கள் ஆரத்துப் பச்சைகள், அவர்களுடன் நெருங்கினல்........ ஆச்சரியப்படும்படியான, நம்பமுடியாத, தலைவராகவிருக்கமுடியாத பலதன்மைகளைக் காணலாம். ஆனல், நடராசா சாதாரண ஒரு தொண்டர் போன்றே என்றும் கட்சியில் இயங்கி வருகின்ருர். அவரிடம் தலைவருக்கிருக்க வேண்டிய—சில தலைவர்கள் படிக்க வேண்டிய—பண்புகள் பலவற்றைக் கண்டவன்......ம்! அவர் பற்றியல்லவா எழுத ஆரம்பித்து விட்டேன்.

"சிவசிதம்பரம்..." என்று ஆரம்பித்தோம்.

"நலமே, சுகமே, காயங்களுடன் உள்ளார்" என்ருர் நடராசா.

அப்பாடீ! மகிழ்ச்சி மூச்சு எழுந்தது! சிறப்புக்குரிய சிவசிதம்பரம் வாழ்கின்ருர்......வாழ்க பல்லாண்டு, எல்லோரும் அமைதியடைந்தோம். யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை என்ன?...... நடராசா கூறத் தொடங்கினர். இடையே "நல்லூர்ப் பிரதிநிதி நாகநாதன் உங்களுடன் தானே?" என்ருர்.

"இல்லையே! கைதாகி வரவில்லையே" என்ரேம்.

எ...ன்...ன?

நாகநாதன் எங்கே?—கைதும் ஆகவில்லையா......... எங்கே? எங்கே?......??

நாகநாதன் பற்றிப் பலவாறு நினைக்கக்கூடியதாக, எமது நிலையமைந்தது.

அன்பு! மணியடிக்கிறது—இராச் சாப்பாட்டுக்காம். நாளை மீதி—

அன்பு அப்பா;
புதுமைலோலன்.

# மக்கள் குரல்

## தி. மு. க. வுக்குத் தடை ஏன்?

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசினர் தடை செய்ததானது, இந்த நாட்டின் ஜனநாயகப் பண்புகளைக்குக் குழி தோண்டும் முயற்சியில் மேலும் ஒரு நிகழ்ச்சியாகும். தினசரி வகுப்பு வெறியை வாந்தியெடுத்துக் கொண்டிருக்கும் திரு. கே. எம். பி. இராஜரத்ன போன்றவர்களின் கட்சிக்கு முழுச் சுதந்திரம் அளித்திருக்கும் நமது அரசியவார், வெறும் பகுத்தறிவுப் பிரசாரம் செய்து வரும் ஒரு கட்சிக்குத் தடை விதித்ததைக் கண்டு அரசியல் அறிந்தவர்கள் எள்ளிச் சிரிக்கத்தான் செய்வர்.

தென்னகத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் இயங்கி வரும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு அரசியல் கட்சி என்பதை நான்மறுக்கவில்லை. ஆனால் இலங்கையில் இயங்கிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தை, அதன் வரலாற்றை அறிந்தவர்கள் எவரும் ஒரு அரசியல் கட்சியாகச் சிறிதும் கருத முடியாது. மக்கள் மத்தியில் மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் பரப்புவதே அதன் கொள்கையாகவிருந்து வந்திருக்கின்றது. இதை அரசியலாரும் உணராமல் இருக்க முடியாது என்றே நான் கருதுகின்றேன். எனினும் ஒரு சிலரின் மனப்பசிக்கு இரை கொடுப்பதற்காக இன்று இங்கு திராவிட முன்னேற்றக் கழகம் தடைசெய்யப் பட்டிருக்கின்றது. இத்தடை கே. எம். பி. இராஜரத்ன போன்ற வகுப்புவாதிகளின் செயல்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்குமே யல்லாது, இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்ப்பது வெறும் பகற்கனவாகும்.

இந்த நாட்டுத் தமிழ் பேசும் இனத்தை அடக்கி ஒடுக்குவதற்காக ஆளவந்தார்கள் நடத்தி வரும் திருவிளையாடல்களில் இத்தடையுத்தரவும் ஒன்று. ஆனல் ஆட்சியாளர்கள் தங்கள் எண்ணம் நிறைவேறுமா என்பதை உலக சரித்திரத்தைப் படிப்பதன் மூலம் உணர்ந்து பார்க்க வேண்டுகிறேன். வடக்கு, கிழக்கு மகாணங்களில் மட்டுமல்ல, மலை நாட்டுத்தமிழர்கள் மத்தியிலும் இன்று வேகமாகப் பரவி வரும விழிப்புணர்ச்சியைக் கண்டு ஆட்சியாளர்கள் அச்சத்திலாழ்ந்து விட்டார்கள் என்ற உண்மை நிகழ்ச்சியை இத்தடை உத்தரவு நன்ருகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. தூங்கிக் கொண்டிருந்தவர்கள் விழிப்படைந்த பின்பு, அவர்களை எக்காரணம் கொண்டும் எவரும் எடுப்பார் கைப் பிள்ளையாக இருக்கும்படி ஏமாற்ற முடியாது.

இன்று வினை விதைப்பவர்கள் நாளை வினையை அறுக்கத்தான் வேண்டும். ஆட்சியாளர்களின் இந்த விபரீத மனப்பான்மைக்குக் காலம் பதில் கூறுமல் விடாது. அரசியல் என்பது ஒரு வழுக்கு நிலம் என்ற உண்மையை அரசினர் உணர்ந்துகொள்ள வேண்டும். அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு ஆட்சி பீடத்தில் இருக்கலாம் என்று கனவு கண்ட சர்வாதிகாரிகள் கூட மண்ணோடு மண்ணுகி விட்டார்கள் என்றுதானே சரித்திரம் கூறுகின்றது.

எஸ். குணநாயகம்
கிராமச் சபைத் தலைவர்,
கட்டைடபறிச்சான்.

## காட்டிக் கொடுப்போருக்கு...

19—7—62 ஒரு தினசரியில் திரு. பிலிப் குணவர்த்தன கூறியிருக்கிருர், எமது தமிழ் பேசும் மக்களில் பலர் இரகசியமாக சிங்களம் படிக்கிருர்கள் என்று. ஏன் பகிரங்கமாகப் படிக்கக் கூடாது என்றும் கேட்டுள்ளார். தமிழ் பேசும் மக்களுக்குச் சவுக்கடி தந்திருக்கிருர்.

தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமைப் போராட்டத்திற்கு ஒரு சிலர் சாவு மணி அடிப்பதைக் கண்டு கண்ணீர் விடவேண்டி இருக்கிறது. சுயநலத் தி[illegible] சொந்த இனத்தைக் காட்டிக்கொடுக்கும் கூட்டத்தை நாம் புறக்கணிக்க வேண்டும். காதற் கன்னியர் கடைக்கண் வீச்சில் விண்ணையும் சாடும் காளையர்கள் கன்னித் தமிழைப் புறக்கணித்தால் அந்த வீரசிங்கங்களை நாம் வாழ்க்கை ஒப்பந்தம் செய்ய மாட்டோம் என்று உறுதிகொண்டு உணர்த்த வேண்டும். பெண்குலத்தின் பொன் விளக்குகள் ஆகிய நாம், அழகு தமிழை அரியாசனத்தில் அமர்த்த, முன்னணிக்கு வந்து விட்டோம் என்பதை ஆண்கள் அத்தனை பேரும் அறிய வேண்டும். குறிப்பாக காட்டிக் கொடுக்கும் கூட்டம் கவனிக்க வேண்டும்.

செல்வி. [illegible],
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரன் கலைப் பகுதி
# ஆடல்பாடல்காட்சி

## 5 வருடங்கள் 'சிறந்த நடிகர்' பரிசு பெறும் நடிகர் முத்தையா

### பிரேம் நசீரின் இணைபிரியா நண்பர்

சினிமா உலகத்தில் தொடர்ந்து 5 வருடங்கள் "சிறந்த நடிகர்" என்ற பரிசு பெற்றுவிட்ட பெருமை நடிகர் டி. எஸ். முத்தையாவையே சாரும். சிவாஜி கணேசன், சாவித்திரி போன்ருர் பல வருடங்கள் தொடர்ந்து பரிசு பெற்றுள்ளனர். அனுலும் திரு. முத்தையாவின் இடத்தை யாரும் பிடிக்க முடியவில்லை.


மலையாளப் படங்களில் முத்தையா பிரதானமான பாகங்களில் தோன்றி வெற்றிகரமாக நடித்துள்ளார். பிரேம் நசீரும் முத்தையாவும் இணை பற்ற தோழர்கள். பாடசாலை செல்லும் காலத்திலிருந்தே நட்புப் பூண்ட இருவரும், இன்றும் இணை பிரியாதவர்களாகவே இருக்கின்றனர். இருவரும் இன்றும் ஒரே இல்லத்தில் தான் வசிக்கின்றனர்.

1957-ல் நடிகர் முத்தையாவுக்கு மலையாளப் படங்களில் தோன்றியமைக்காக "சிறந்த உதவி நடிகர்" பரிசு கிடைத்தது. 1958லும் அதே பரிசு பெற்றுள்ளார். 1959-ல் மலையாளப் படத்தின் சிறந்த நடிகர் என்று பாராட்டப்பட்டார். 1960-லும், 1961-லும் சிறந்த துணை நடிகர் என்று பரிசு பெற்றுள்ளார்.

தமிழ்ப் படங்களில் நடித்தது குறைவானபோதும், கொடுத்த பாகத்தைத் திறம்படச் செய்வதில் திறர் அவர். "ஆளுக்கொரு வீடு" படத்தில் கஞ்சத்தனம் கொண்ட கணவாளுகவும், 'குமுத'த்தில் ராஜேந்திரனின் அண்ணளுகவும் தோன்றியுள்ளார்.

ஏ. வி. எம். தயாரிக்கும் "அன்னை", கமால் பிரதர்ஸ் மூன்ருவது தயாரிப்பிலும், ராஜகோபாலன் பிலிம்ஸ் படத்திலும் நடிகர் முத்தையா நடித்து வருகிருர்.

அவருடைய திறமையை தமிழ் சினிமா உலகம் நன்கு பயன் படுத்துமென்பதில் ஐயமில்லை.



## ராஜசுலோசனா-ஜிக்கி இலங்கை வருகை

"சம்சாரம்" படத்தின் மூலம் தமிழ் சினிமா உலகத்தில் நிலையான ஒரு இடத்தைக் கைப்பற்றிக்கொண்ட பின்னணிப் பாடகரும், இசை அமைப்பாளருமான திரு. ஏ. எம். ராஜாவும்; அவர் மனைவி திருமதி ஜிக்கியும் கொழும்பு வருகிருர்கள். இலங்கை சயரோகத் தடுப்பு சங்கத்திற்காக நிதி உதவிக் கச்சேரிகள் செய்ய விருப்பதாகத் தெரியவருகிறது.

ஒரு வாரத்துக்கு மேல் இலங்கையில் தங்கி, மேற்படி சங்க நிதிக்காக இசைக் கச்சேரிகள் செய்வார்கள் எனவும் தெரிகிறது.



தேவர் பிலிம்ஸ் அளிக்கும் "தாய் சொல்லைத் தட்டாதே" படத்தில்
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
(சினிமாஸ் வெளியீடு)

## எம். ஜி. ஆரும் இ. தி. மு. கவும்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஒரு மாத இதழுக்காக எழுதிய கட்டுரை ஒன்றே தான் இலங்கையில் தி. மு. கவிற்குத் தடை ஏற்படக் காரணமாக விருந்ததாம். இலங்கைக்குப் படப்பிடிப்புக்காக வரவிருந்தவரைத் தடுக்க வேண்டும் என்று கோரப்படுவதும் அக் கட்டுரையின் விளைவு தானும்,

தமிழகத்து மக்கள் வாய்ப்புக் கிடைத்தால் இலங்கைத் தமிழ் பேசும் மக்களுடன் தோளோடு தோள் நின்று போராட ஆயத்தமாகவுள்ளனர் என்றும், தமிழ் மக்களுக்கு எங்கெங்கு துன்பம் இழைக்கப்பட்டாலும், அதை எதிர்க்க ஒருபோதும் தயங்கமாட்டோம் என்றும் புரட்சி நடிகர் அக் கட்டுரையில் எழுதியுள்ளாராம்.

இக் கட்டுரையை சிங்களத்தில் மொழி பெயர்த்து வாசித்த சிங்களத் தலைவர்கள் சிலர் இதையே ஆதாரமாகக் காட்டி உடனடியாகத் இ. மு. க. வைத் தடை செய்யக் கோரினராம்.

## இரு வேடங்களில் புரட்சி நடிகர்

"குங்குமக் கோலம்
தீட்டிய வானம்
காட்டும் புதுமையா? இளம்
கன்னியர் கன்னம்
சிந்திய நாணம்
சேர்த்த பெருமையா?"

ஆலங்குடி சோமுவினுல் எழுதப்பட்ட இப் பாடல் காஞ்சனு பிக்சர்சுக்கான புதிய படத்துக்கு ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

பெயரிடப்படாத இப் படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இரு வேடங்களில் நடிக்கிருர். கதாநாயகன் தபாற்காரனுகவும், வில்லன் பாகத்திலும் எம். ஜி. ஆர். தோன்றுகிருர். துப்பறியும் பொலிஸ் உத்தியோகத்தராக எம். ஆர். ராதா தோன்றுகிருர். இப் படத்தில் விஜயகுமாரி, ஷீலா, பிரெண்டு ராமசாமி, அசோகன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

சினிமாப் போட்டி:

## 'ராஜேஸ்வரா' அளிக்கும் பரிசு

"நிச்சய தாம்பூலம்" படத்தில் வரும் ஒரு சட்டத்தை விபரித்து எழுதுமாறு சென்ற வாரம் கோரியிருந்தோம். காய் கறிகளை நறுக்குவதில் ஈடுபட்டிருந்த ஜமுனவின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் குழாயடியில் கை அலம்பவைக்கிருர் சிவாஜி கணேசன். அவ்வேளையில் ஜமுனவின் மனேநிலை எப்படியிருந்திருக்கும் என்பதையிட்டு உங்கள் கருத்தைக் கேட்டிருந்தோம்.

மேற்படி கட்டத்தை அவதானித்து சித்திரிக்கும் சிறந்த எழுத்தோவியங்களைப் பிரசுரிப்பதாகக் கூறியிருந்தோம். சிறந்தவற்றில் முதன்மையான தெனக் கணிக்கப்படும் வர்ணனைக்கு ஓர் சிறந்த பரிசளிக்கப்படும்.

மட்டக்களப்பு ராஜேஸ்வரா படமாளிகையிலும் "நிச்சய தாம்பூலம்" திரையிடப்பட்டுள்ளது. அப்படமாளிகை நிர்வாகிகளே மேற்படி பரிசை அளிக்க முன்வந்துள்ளனர்.

**பரிசு: ஒரு சிறந்த பார்க்கர் பவுண்டன் பேனு**

உங்கள் விபரணச் சித்திரத்தை 10—8—62-க்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். ஒரு "புள்ஸ்காப்" அளவு காகிதத்தில் அரைப் பக்கம் மட்டும் எழுதி அனுப்புதல் வேண்டும்.

முகவரி:—
நிச்சய தாம்பூலம் (வர்ணனை)
த. பெட்டி 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வில் நாங்கள் சோடியில்லை திரைவானில் நாங்கள் சோடி சேர்ந்தோம். புனர் ஜென்மத்தில் பத்மினி—சிவாஜி

நாடக விமர்சனம்

## கொலைத் தீர்ப்பு...?

மட்டுநகர் இப்போது தான் கலை உலகை விழித்துப் பார்க்கின்றதென்றே கூற வேண்டியிருக்கிறது. இயலிலும்; இசையிலும்; நாடகத்துறையிலும் மீன் பாடும் தேன் நாடான மட்டுநகர் இன்று ஒரு மலர்ச்சி பெற்று மிளிருகிறதென்பதற்கு இப்போதெல்லாம் மட்டு நகரில் நடைபெறும் கலை விழாக்களே சான்று பகருகின்றன. இலக்கிய சர்ச்சைகள், கலந்துரையாடல், இசை அரங்கேற்றங்கள், நாடக மேடையேற்றங்கள் மட்டக்களப்பை இப்போது கலகலக்கச் செய்கின்றன.

ஏழைச் சிறுவனுன பாஸ்கரனை பத்திரிகை ஆசிரியரான சண்முகம் சந்தித்து பத்திரிகை விற்கும் தொழிலில் அமர்த்துகின்ருர். உடல் வளர்ச்சியோடு, உளவளர்ச்சியும் பெற்றுச் சிறந்த எழுத்தாளனுக மாறுகிருன். சண்முகத்தின் மகளான பத்மினி இலட்சியவாதியான பாஸ்கரனை காதலிக்கிருள்; காதலர் பாதையில் குறுக்கிட்ட சேகர் துரதிர்ஷ்டவசமாகக் கொலை செய்யப்படுகிருன். அவ்வேளை சேகரின் மார்பிலிருந்து பிடுங்கிய கத்தியோடு நின்ற பாஸ்கரனை பொலிசார் பிடிக்கின்றனர். பாஸ்கரன் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டு, தூக்குத்தண்டனையெனத் தீர்ப்பளிக்கப்படுகிறது. இறுதியில் சுபமாகவே முடிகிறது.

இடை வேளையில் ஜீவம் கோஷ்டியினரின் "ஒரே இரத்தம்" என்ற குட்டி நாடகம் ரசிகப் பெருமக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி வைத்தது. ஒப்பனை செய்த திரு. எஸ். சிவானந்தராஜாவின் கலைத் திறன் நடிகர்களை இன்னுமொரு படி உயர்த்திவிட்டது. பின்னணி வாத்தியம் வாசித்த இசைக் குரிசில் ஜீவம் கோஷ்டியினரின் வாத்திய முழக்கம் நாடகத்துக்கு மேலும் சோபையை ஊட்டிற்று. மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த நாடகத்தை நட்டுவாங்கம் (டைரக்ஷன்) செய்து அரங்கேற்றிய பெருமை திருவாளர் என். ஜே. இரெத்தினராசா அவர்களையே சாரும்.

"கொலைத் தீர்ப்பு" கதை வசனத்தை அமைத்தவர் திரு. எம். எஸ். பாலு.

## தீண்டாமை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)


என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆகவே நாம் செனட்டர் ஆனந்த தசாநாயக்கா அவர்களையும் ஏனைய சிங்களத் தலைவர்களையும் இப்படிப்பட்ட சமூகப் பிரச்சினைகளிலே தலையிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கின்றேம். ஏனெனில் தமிழர் அவர்கள் தலையீட்டை எதிர்ப்பதுமன்றிப் பிழையாகவும் விளக்கம் கொள்கின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் தனது ஆளும் அதிகாரத்தை உபயோகித்து தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி இந்த நாட்டிலே அவர்களைத் தாழ்ந்த சாதி பிரஜைகளாகக் முயலும் இக் கொடூர சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களிடையே தேசிய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் தமிழர் ஓர் தேசிய இனம் என்ற அடிப்படையிலே செய்ய முயலுகிருர்கள்.

இந் நாடகத்தை அரங்கேற்றியவர்கள், அமிர்த கழி உதய தாரகை மன்றத்தினர்.

—ரத்தினம்



தேவர் பிலிம்ஸ் அளிக்கும் "தாய் சொல்லைத் தட்டாதே" படத்தில்
கட்டழகி சரோஜாதேவி
(சினிமாஸ் வெளியீடு)

# நல்லதும் கெட்டதும்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)
எங்கோ பறந்தோட அந்த இடத்தைப் பயம் சூழ்ந்து கொண்டது. 'நான் முழுக்க முழுக்க நம்பியிருந்த இவனே இப்படிச் சொல்கிறானே?' என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன்.

சமாளித்துக்கொண்டு, "என்ன முதலாளி இப்படிச் சொல்கிறீர்கள்;...நீங்களே இப்படிச் சொல்லிவிட்டால் நாங்கள் எங்கே போவது?..." என்றேன் கெஞ்சும் குரலில்.

"நான் என்ன செய்யட்டும் மாஸ்டர்? உங்களை இங்கே வைத்திருந்தால் என் ஹோட்டலையும் கொளுத்தி என்னையும் கொன்று விடுவதாகப் பயமுறுத்திவிட்டுப் போயிருக்கிறார்கள் சிலர். இந்த நிலையில் நான் உங்களை வைத்திருந்தால் நானோ, நீங்களோ, இந்த ஹோட்டலோ தப்பப்போவதில்லை" என்றான்.

அவன் சொன்னதிலும் உண்மை இருப்பதாகவே பட்டது. 'இனி உயிர் போனது போல்தான்' என்று எண்ணியபடியே அருணைப் பார்த்தேன். பேயறைந்தவன் போல உட்கார்ந்திருந்தான் அவன்.

சிறிது மௌனத்துக்குப் பின் "வேண்டுமானால் ஒன்று செய்கிறேன். உங்களுக்குத் தெரிந்த யாராவது கொழும்பு நகரில் இருந்தால் சொல்லுங்கள், எனது காரிலேயே பத்திரமாகக் கொண்டுபோய் அங்கு விட்டுவிட்டு வருகிறேன்" என்றான் அப்புகாமி.

சாரதியுடனும் சேட்டுடனும்தான் காரில் உட்கார்ந்திருந்தோம். கார் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. என் இதயமும் வேகமாக அடித்துக்கொண்டிருந்தது.

கார் ஒரு சந்தியைத் தாண்டிக்கொண்டிருந்தது. சந்தியில் பலர் ஓட ஓட விரட்டி அடிக்கப்பட்டதையும், பலர் இரத்த வெள்ளத்தில் ஆங்காங்கே கிடந்ததையும், பல கடைகள் பற்றி எரிந்ததையும் எங்களால் காண முடிந்தது.

'எங்களுக்கும் என்ன நடக்குமோ' என்று நான் நினைத்த அதே நேரத்தில் ஒரு கூட்டம் காரை மறித்தது. 'சரிதான்! இந்த இடத்திலேயே சாக வேண்டியதுதான்' என எண்ணிக் கொண்டேன்.

காரின் வேகம் குறைந்து மெதுவாக ஊர்ந்தபோது "கௌத முதலாளித?......... பண்ட பண்ட........." (யார், முதலாளியா? போங்கள் போங்கள்) என்றனர் கூட்டத்திலிருந்தோர். உண்மையில் அப்புகாமிக்கு நல்ல மதிப்பு அந்தப் பகுதியில். அடுத்த கணம் கார் காற்றாய்ப் பறந்தது. போன உயிர் திரும்பிவந்ததுபோலிருந்தது. அப்புகாமியை வாழ்த்தியது உள்ளம்.

இருபக்கங்களிலும் சோலைகளடர்ந்த ஒரு ஒதுக்குப் பகுதியால் போய்க் கொண்டிருந்த 'கார்' திடீரென ஒரு சந்துள் திரும்பியது.

"என்ன முதலாளி இந்தப் பக்கம் போகிறீர்கள்?......" என்று நாங்கள் இருவரும் ஏககாலத்திற் கேட்பதற்கும் 'கார்' அந்தச் சந்துள் மறைந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. நாங்கள் திகைத்தோம்.

காரை விட்டு இறங்கிய அப்புகாமி, "இறங்கு இரண்டு பேரும் கீழே" என்றவன் தன் ஆசனத்தின் கீழேயிருந்து ஒரு நீண்ட வாளை உருவி எடுத்தான்.

"அடபாவி!" என்று என்னையறியாமலேயே என்வாய் கூறிய அந்தக் கணத்தில் "அபி ரெடி முதலாளி" (நாங்கள் ஆயத்தம் முதலாளி) என்று கத்தியபடியே கைகளில் தடிகளுடன் ஐந்தாறு பேர் சுமார் பத்துப் பதினைந்து யாருக்கப்பால் இருந்து காரை நோக்கி ஓடி வந்தார்கள்.

எவ்வளவு நயவஞ்சகம்! எவ்வளவு நம்பிக்கைத் துரோகம்! எத்தனை கொடுமை! நண்பன்போல் நடித்த மிருக இரத்தம் கொண்ட அந்தப் படுபாவி எல்லாம் முன்கூட்டியே ஏற்பாடு செய்து வைத்திருந்திருக்கிறான் என்பதை அப்போதுதான் எம்மால் உணர முடிந்தது. 'சீ, என்ன நட்பு! இனவெறிக்கு இத்தனை சக்தியா? ......இந்த இனவெறியின் முன் நட்புக் கூடத் தோற்று விட்டதே!...' என்று நான் எண்ணிப்பார்த்தபோது, "நான் சொன்னேனே, கேட்டாயா துரை?......" என்றான் அருள் ஈனஸ்வரத்தில்.

இமைக்கும் நேரத்தில், "வா அருள்" என்றபடி காரின் அடுத்த பக்கக் கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்து ஓடினேன். அருளும் பின்தொடர்ந்தான். அந்தப் படுபாவியும் கூட்டத்தாரும் இரைந்து கொண்டே பின் தொடர்ந்தனர்.

"அம்...மா!..." என்ற அருளின் அவலக் குரல் என்னை, திடீரென நின்று திரும்பிப் பார்க்கச் செய்தது. அப்பப்பா!...என்ன கோரம்!... அந்தப் படுபாவியின் வாள் பதம் பார்த்த மண்டையிலிருந்து பெருகிய குருதி வெள்ளத்தில் மூழ்கியபடி கீழே கிடந்து துடித்துக் கொண்டிருந்தான் அருள். அதற்குமேல் என்னால் எப்படி ஓட முடியும்? "ஐயோ, அருள்!" என்று என்னையறியாமலேயே என் வாய் கத்தியது. அதே நேரம் தொடர்ந்து ஓடிவந்த குண்டர்கள் நெருங்கு முன்பே—அவர்களுக்கு வேலை வைக்காமலேயே—குருதி சொட்டும் வாளால் என்னை நோக்கி வெட்டினான் அப்புகாமி. திடீரென நான் சரிந்து கொள்ளவே என் இடது புஜத்தில் வெட்டு விழுந்தது. இவ்வளவும் கணநேர நிகழ்ச்சிகள்.

வாள்வெட்டு என் புஜத்தில் விழுந்த அதே நேரத்தில் பொலீசாரின் 'விசில்' சத்தம் எங்கிருந்தோ கேட்டது. அவ்வளவுதான்! "பொலிஸ்!......பொலிஸ்!..." என்று கத்தியபடியே ஓடினர் அப்புகாமியும் அவன் கூட்டத்தினரும். அப்படி ஓடும்போதே யாரோ ஒருவன் என் மண்டையில் தடியால் தாக்கிவிட்டான். அடுத்த கணம் நினைவிழந்து கீழே விழுந்தேன்.

நான் மீண்டும் சுயஉணர்வு பெற்றுக் கண்விழித்தபோது ஆஸ்பத்திரிப் படுக்கையில் கிடப்பதைக் கண்டேன்.

இரண்டு மாதங்களுக்கு மேலாகிற்று நான் பூரண குணம் அடைவதற்கு. ஆனால் அருள்?...பாவம்!!... நான்காவது நாளே அவன் இறந்து விட்டான். மனித இரத்தம் குடிக்கும் வெறியர்கள் அவன் உயிரைக் குடித்து விட்டனர். அதை இப்போது நினைத்தாலும் கண்கள் கலங்குகின்றன.

அதன் பின்னர் கொழும்புக்கு நான் போகவில்லை. ஊருக்கு எனக்கு மாறுதல் தரும்படி அதிகாரிகளைக் கேட்டேன். ஆனால் ஊரில் இடமில்லை என்றும், இடம் வரும்வரை இருக்கும்படியும் கூறி; கண்டியில் முஸ்லிம்களும் மலைநாட்டுத் தமிழரும் அதிகமாக வாழும் பகுதியிலுள்ள ஒரு பாடசாலைக்கு மாற்றி விட்டனர்.


*

மீண்டும் ஒரு[illegible]த் தப் பிரேதங்களைப் பார்த்து விட்டு வரிசையிலிருந்து விலகிக் கடந்தபோது சனக் கூட்டத்தின் ஒரு பகுதியில் இரு சிங்களச் சகோதரர்கள் சிங்களத்தில் பேசிக்கொண்டிருந்தது என் செவிகளில் தெளிவாக விழுந்தது.

"எல்லாம் நமக்கு நாமே தேடிக்கொண்ட வினை இது. கடந்த வருடம் தமிழர்களைப் பதைக்கப் பதைக்க என்ன மாதிரிக் கொன்று குவித்தார்கள் நம்மவர்கள். எவ்வளவு அநியாயமாக நடந்து கொண்டார்கள். அதற்காகத் தெய்வம் இன்று நம்மவர்களைத் தண்டித்திருக்கிறது!" என்றார் ஒருவர்.

"ஆமாம், உண்மை இல்லையென்றால் 'தெய்வம் நின்று கொல்லும்' என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்?" என்று கூறி அவர் பேச்சை ஆமோதித்தார் மற்றவர்.

இதைக் கேட்ட என் உள்ளம் குளிர்ச்சியால் நிறைந்தது. 'தெய்வம் நின்று கொல்லும்' என்று பேசிய அந்த அன்புச் சகோதரர்களையும், அந்தப் பிரேத அறையில் சிதைந்த பிணமாகக் கிடந்த ஹோட்டல் முதலாளி அப்புகாமியையும் என் உள்ளம் ஒப்பிட்டுப் பார்த்தபோது, "நல்லதும் கெட்டதும்" என்று முணுமுணுத்தன உதடுகள்.



பழனியப்பா புரொடக்ஷன் "என்னைப் பார்" என்ற படத்தில் விஜயலட்சுமி தோன்றும் காட்சி.

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் ஆதரவில் தொல்புரம் அ. மி. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மாணிக்கவாசக சுவாமிகளினது குருபூசை விழாவுக்கு திரு. கோ. கிருஷ்ணர் ஆசிரியர் தலைமை வகித்தார். மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கில பாடசாலை ஆசிரியர் திரு. கா. சின்னத்துரை, நிலையச் செயலாளர் திரு. சி. வரதராசா ஆகியோருட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

## சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
எழுத்தில் கொடுத்துள்ளார். அந்த நிருபத்தைப் பெற்ற பின்னரும், தமிழ் அறிக்கையையும் சேர்த்தே மேலதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ளார். "அதிகாரி ஒருவரின் எழுத்து மூலக் கட்டளையை நிராகரித்தமைக்காகத் தமக்கு எது நேர்ந்தாலும், தமிழ் மொழிக்குரிய கடமையைச் செய்வதில் [illegible] [illegible] [illegible] [illegible]த்துடன் கூறியுள்ளாராம்.


## சுதந்திரன் சந்தா விபரம்

இலங்கை—இந்தியா உட்பட

வருடச் சந்தா ரூபா.10-00

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!



ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி—அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள். மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதோ அதற்கு உரிய இடம்:

## சுதந்திரன் அச்சகம்,

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,

கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411



## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விபரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,

கொழும்பு -12.



## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எங்கள் கோரிக்கைகள்

எஸ். அப்துல் கபூர், கொழும்பு.

அந்தக் கால அரசர்களின் போருக்கு எங்கள் முன்னோர்கள் சுறுசுறுப்பாக எப்படியெல்லாம் ஒத்துழைத்தார்கள். ஏன்? அரசர்கள், பிரதமர்கள், ஜனாதிபதிகள், தலைவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து விட்டால் நாங்களும் தான் அணிவகுத்து முன் செல்ல வேண்டும். இப்படியான மதிப்பு எங்களில் சிலருக்குத்தான் உண்டு. எங்கள் இனத்தவர்கள் பலர் சிரமப்பட்டு, சித்திரவதை படக் கூடிய நிலைமை ஏற்படுகிறது.

சில சினிமா தயாரிப்பாளர்கள் எங்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து எங்களை நடிக்கச் செய்து விடுகிறார்கள். இந்த சினிமா திரையிட்ட பிறகு எங்களுக்குக் கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் அவாதிதான்!

ஆனால் இன்னும் எத்தனையோ நாடுகளில், வண்டியில் எங்கள் இனத்தவர்களைக் கட்டி, அதில் உங்களைப் போன்றவர் ஏறித் தெருத் தெருவாகச் சுற்றுச் சொல்லி, கடைசியில் வண்டிக்காரனுக்கு ஐந்தாறு ரூபாயைக் கொடுத்துவிட்டுப் போய் விடுகிறார்கள். இதனால் சிலர் இதையே தொழிலாகவும் செய்கிறார்கள். எங்கள் இனத்தவர்களை வண்டியில் பூட்டிய படியே ரெயில் நிலையத்திலும், சந்திகளிலும், கடைத் தெருக்களிலும் வெயிலில் கால் கடுக்க மணிக் கணக்கில் நிற்கச் செய்கிறார்கள்.

இவர்கள் நெஞ்சில் கொஞ்சு கூட இரக்கமே இல்லை. இருந்தால் இவ்வளவு தொல்லை கொடுப்பார்களா?

எங்கள் இனத்தவர்கள் பூட்டப்பட்ட வண்டியில் எந்தக் காரணத்தை முன் விட்டும் தயவு செய்து ஏறி விடாதீர்கள்! இதனால் எங்கள் இனத்தவர்களை வண்டியில் கட்டித் தொழில் செய்கிறவர்களுக்கு நல்ல பாடமாக இருக்கும். நீங்கள் இந்த வண்டியில் ஏறாவிட்டால் எங்களைச் சுதந்திரமாகச் சுற்றியலைய விட்டு விடுவார்கள். உங்களுக்குப் பிரயாணம் செய்யத்தான் நிறைய இயந்திர வாடகைக் கார் வந்திருக்கிறதே! அதில் ஏறிக் கொண்டு போகவேண்டிய இடத்திற்கு போக வேண்டியதுதான். சீக்கிரமாகவே போய் விடலாமே!

உங்கள் சூதாட்டத்தில் எங்களையும் பயன் படுத்துகிறீர்கள்! நீண்ட பெரிய திடல் அமைத்து, பெரும் பணக்காரர்கள் முதல், மாதம் நூறு ரூபாய் சம்பளம் பெறும் தொழிலாளிகள் வரை எங்கள் இனத்தவர் பத்துப் பதினைந்து பேரை இந்தத் திடலில் ஓட விட்டுப் பந்தயம் பிடிக்கிறீர்களே! இது உங்களுக்கே நல்லது என்று படுகிறதா? பெரும் தலைவர்கள் கூட எங்கள் இனத்தவர்களைச் சொந்தமாக விலைகொடுத்து வாங்கித் திடலில் ஓட விட்டுப் பந்தயம் பிடித்துப் பணம் பெறுவதும் இழப்பதும் வழக்கமாக இருக்கிறது.

இது போன்ற திடலில் ஓடும் பந்தயத்தை எல்லா நாடுகளும் நிறுத்தி விட வேண்டும். இல்லாவிட்டால் இலட்சாதிபதிகளையும் இரண்டு செல்லாக் காசு கூட இல்லாதவர்களாக்கி விடும்.

சர்க்கஸ்களுக்கு நாங்கள் அவசியம் தேவைப் படுகிறோம். உலகத்தில் உள்ள எல்லா சர்க்கஸ் கம்பெனிகளும் எங்கள் இனத்தவர்களைச் சொந்தமாக எடுத்து வளர்த்து, எங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சரித்திர சினிமா தயாரிப்பாளர்கள் எங்களுக்கு நடிக்க பயிற்சி கொடுத்து, நடிக்கச் செய்ய வேண்டும். நாங்கள் உழைக்கும் ஊதியத்தைக் கொண்டு நீங்கள் உல்லாசமாக வாழாமல், வயதான எங்கள் இனத்தவர்களுக்குத் தங்க இடமும் கொடுத்து, உணவும் கொடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

எங்கள் மேல் உல்லாசமாக சவாரி செய்ய விரும்புகிறவர்கள் எங்கள் குட்டிகளை எடுத்து உங்கள் சொந்தக் குழந்தை போல் வளர்க்க வேண்டும். அதன் மேல் சவாரி செய்யக் கூடிய நாள் நெருங்கும் போது குறைந்தது மூன்று மைல் சுற்றளவுக்கு நிலம் வாங்கி, சீர் படுத்தி, புல் முளைத்த பிறகு தான் சவாரி செய்ய வேண்டும். கம்பைக் கொண்டு அடிக்கும் பழக்கத்தைக் கனவிலும் நினைக்கக் கூடாது.

அன்பாகச் சொன்னால் [illegible] நடப்போம்.

## அமிர்த நதித் தீர்த்தக் கரை

—"ஆரையூர் அமரன்"—

அமிர்த நதித் தீர்த்தக் கரை
அதனைச் சொன்னால் பெருங்கதை
அங்கு மிங்கும் பாலைக் கடை
ஆறுகாசு இந்தக் குடை!

காணக் காணச் சனக் கூட்டம்
காயும் கறியும் கன கூட்டம்
கரும்பு வாங்கும் பெருங் கூட்டம்
காரும் 'பஸ்'சும் ஒரே கூட்டம்!

பார்க்கப் பார்க்கப் பழக் குவியல்
பானை சட்டி பெருங் குவியல்
பாயும் படமும் பல குவியல்
பாக்கு வெற்றிலை நீள் குவியல்!

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து 'வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்பவர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 4

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

____________________ ____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

# கற்பனைக் கனவினிலே தமிழன்னை வந்தாள்!

'சிந்தனைச் செல்வி', ஏழாலை.

மன அமைதியை நாடிக் காலைக் கடற்கரையை நோக்கிஇழுத்தன. மணல் மேடுகளைத் தாண்டி நிதானமாகச் சென்று கொண்டிருந்தேன். அன்று ஐந்தாம் பிறை. வன தேவதைகளோவெனத் தாரகைகள் வட்டமாகச் சூழ்ந்து வர வளர்பிறைச் சந்திரன் வான வீதியில் காட்சியளித்தான். கடற்கரையோரத்தே இருந்த ஆலயத்தின் வெளி மண்டபத்தில் அமர்ந்தேன். இளந் தென்றலைத் தழுவியவாறே பச்சிளம் தளிர்கள் நடமிடும் பாவனையுடன் தலை சாய்ந்தாடின. ஆலயத்தின் அருகே அமைந்திருந்த பொழிலில் அழகாக மலர்ந்திருந்த நறு மலர்கள் மணம் பரப்பியவாறே அசைந்தாடி பொழிலுக்கே புதியதொரு எழிலைக் கொடுத்தன. மலர்களை மருவியவாறே வந்த தென்றல் மனதில் மகிழ்ச்சியை நிறைத்தது. வெண்ணிலவு தந்த மங்கிய ஒளியிலே இயற்கை அளித்த இன்பத்தைஅள்ளிப் பருகினேன்.

மகிழ்ச்சி நிறைந்த இந்த வேளையில் மந்திரமோ? மாயமோ? மெல்லியதாக எழுந்த ஒரு சோக கீதம் செவியைத் தாக்கியது. ஆம் அது ஒரு பெண் குரல்தான்.

இருள் நிறைந்த இடத்தில் வெண்துகிலுடன் ஆண்டவனை நோக்கிக் கை கூப்பிய வண்ணம் ஓர் அலை மென் குரலில் சோக கீதம் இசைத்தாள். அருகே சென்று "அம்மா" என அழைத்தேன். அழுகை நின்றது. ஆச்சரியம் படர்ந்தது. "என்னை அம்மா என்று அருந் தமிழில் அழைக்கும் நீ என் குழந்தை தானே? குழந்தாய்! உன் தமிழ்த் தாயின் சோக வரலாற்றைக் கேள். பின் அவளைக் காப்பதன் அவசியத்தை உணர்வாய்" என்று கூறினாள் அப்பெண். நான் மௌனம் சாதிக்கவே தன் சோகக் கதையைத் தொடர்ந்தாள்.

"உலகெலாம் போற்றித் துதிக்க உன்னத நிலையிலிருந்தவள் நான். என் செல்வக் குழந்தைகள் என்னைச் சீர் சிறப்புடன் பேணிக் காத்தனர். என்னுடைய பெருமை எணி வைத்தாலும் எட்டாத உயரத்தில் ஏறி நின்றது. இன்று என் மைந்தர்களாலே ஒதுக்கப்பட்டுவிட்டேன். ஈழத்தில் இணைந்து வாழ்ந்தோம் இருவர். இன்று இரு துருவமெனப் பிரிந்து விட்டோம். பெருந்தொகையான புத்திரச் செல்வத்தைப் பெற்று அந்த மாற்றாந்தாய் தன் பெரும்பான்மை பலத்தைப் பிரயோகித்து என் உரிமைகளனைத்தையும் பறித்து என்னை ஒதுக்கிவிட்டாள். என் மானம் பறிபோய் விட்டதே!! என் நெஞ்சம் உரிமை, உரிமை என்றலறுகிறதே!!" என்றவள் "ஹோ" வெனப் பெருங்குரலிட்டுக் கதறினாள். என் விழிகளும் சட, சடவென நீர் முத்துக்களை உதிர்த்தன.

தொடர்ந்தாள், "என் மைந்தரும் அவள் மைந்தரும் நாட்டிற்குத் தொண்டு செய்த போதிலும் என் மைந்தரே 'போற்றப்பட்டனர். என் பெருமை அவளுக்குப் பொறாமையை ஊட்டியது. பகை கிளம்பியது. அவளாலும் அவள் தம் மைந்தராலும் நாங்கள் பட்ட இடுக்கண். நான் எத்தனை புதல்வரை இனவெறிக்குப் பலி கொடுத்தேன் என் புதல்வர்கள் எத்தனை பேர் உயிரோடு இருந்தும் என் மானம் காக்க முன் வராது மாற்றாந்தாயின் பதவி என்ற பட்டுப் புடவைக்குள் பதுங்கிவிட்டனர். பாவி நான் ஏன் இன்னும் உயிர் வாழ்கிறேனோ?"

"நாங்கள் இன்று நடுத் தெருவில் விடப்பட்டு விட்டோம். அன்று அரசியாக வாழ்ந்து இன்று ஆருமற்ற அனாதையாக அலையும் என் புலம்பல் என் மைந்தர்களைத் துன்பக் கடலில் ஆழ்த்த வில்லையா? தன் தாயின் மானம் பறிபோவதை எந்தத் தனயன்தான் விரும்புவான்? ஒன்றிரண்டு உதவாக்கரைகள் ஒடி ஒழிந்தாலும் என் உயர் திருச் "செல்வ"ங்கள் ஒப்பற்ற "மாணிக்"கங்கள் உரிமைக்காகப் போராடி என்றாவது இழந்த நம் உரிமைகளை மீட்டு என் மானத்தைக் காப்பார்கள் என்ற நம்பிக்கை ஒளி என்றும் இதயத்தே விளக்கொண்டே இருக்கிறது" என்று அழுகை முடிந்து அமைதியுடன் கூறி முடித்தாள்.

அந்தோ! நம் அன்னை நம்மேல் கொண்ட நம்பிக்கை! அது என்றுமே வீண் போகக் கூடாது. புதியதொரு உற்சாகத்துடன் இதய மெல்லாம் இனிக்க "அம்மா!" என்றழைத்தேன்.

"உன் மானம் காக்க உத்தம "தந்தை"யைப் பின் தொடர்ந்தே உரிமைப் போரில் கலந்திடுவேன். கலங்காதே! காப்போம் உன்னை, கன்னித் தமிழே!!" என மொழிந்தேன்.

அன்னையின் விழியில் ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பாய்ந்தது. மதி முகத்தில் மகிழ்ச்சியுடன் நம்பிக்கை ஒளி சுடர் விட்டுப் பிரகாசித்தது. கைகூப்பியவண்ணம் கணத்தினில் மறைந்தாள் அவ்விடத்தை விட்டு.

கற்பனைக் கனவிலிருந்து கண் விழித்தேன். கனவில் கண்ட தமிழ்க் கன்னியை எண்ணிப் பார்த்தேன். இப்போ என் மனமும் "உரிமை" என்று கதறுகிறதே! போராடுவது நிச்சயம். தமிழினம் இன்றில்லாவிடில் என்றாவது வெற்றி பெறுவதும் நிச்சயம்தான்.

அன்புள்ள மருமக்களே!

வணக்கம்,

தங்களிற் பலரும் ஏன் இன்னும் தங்களுடைய அங்கத்துவர் இலக்கம் வெளிவரவில்லை என்று குறைப் பட்டுக் கொள்ளுகிறார்கள்.

ஏராளமான அங்கத்துவ விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கும்பொழுது, எல்லோருடைய பெயர்களும் உடனுக்குடன் வெளியாக முடிவதில்லை.

ஆகவே, மருமக்களே! பொறுத்துக் கொள்ளுங்கள். கால தாமதம் ஏற்பட்டாலும் உங்கள் இலக்கமும், பெயரும் கட்டாயம் 'வளர்மதி'யில் இடம் பெறுவே செய்யும்.

வணக்கம்,

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## ‘சனசமூக நிலையங்களின் முன்னேற்றத்திலேயே கிராமங்களின் முன்னேற்றம் தங்கியுள்ளது’

### தொல்புரம் பரிசளிப்பு வைபவத்தில் வட்டுக்கோட்டை எம். பி.

"ஒரு கிராமத்தின் முன்னேற்றம் அக் கிராமத்தில் இயங்கிவரும் வாசிகசாலைகளின் வளர்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது. இத்தகைய சனசமூக நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பு அக்கிராமத்தில் வசிக்கும் மக்களின் கையில் தங்கியிருப்பதால் மக்கள் தங்களுக்குள் இருக்கின்ற அரசியல் வேறுபாடுகளை மறந்து கிராமத்தினதும் சனசமூக நிலையங்களினதும் முன்னேற்றத்திற்காகப் பாடுபட முன்வர வேண்டும்." என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தொல்புரம் மத்திய சன சமூக, மத்திய மகளிர் சன சமூக நிலையங்களின் ஆதரவில் நடைபெற்ற சுகாதார வார விழாப் பரிசளிப்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பகுதிச் சுகாதார சேவை அதிபர் டாக்டர் ஜி. என். ஆர். நதானியேல் இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

சுளிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி, சுகாதாரக் கல்விப் போதனாசிரியர் திரு. எஸ். தர்மலிங்கம், திரு. கா. சின்னத்துரை ஆசிரியர் ஆகியோருட்பட மற்றும் பலரும் பேசினர்.

சுகாதார வார விழாப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் வழங்கினார். மத்திய மகளிர் சனசமூக நிலையத்தினரின் சங்கீத, நடன விருந்துடன் பிரஸ்தாப வைபவம் நிறைவெய்தியது. நிலையக் காரியதரிசி திரு. சி. வரதராசா நன்றியுரை கூறினார். சைவ, கிறிஸ்தவ கூட்டுப் பிரார்த்தனைகள் விழாவில் இடம் பெற்றன.

#### தேனமுத மன்றத்தின் விபுலாநந்தர் விழா

"முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளிடம் காணப்பட்ட குருபக்தி, நாட்டுப்பற்று, பொதுநல சேவை உணர்வு ஆகிய அருங்குணங்களை நாம் என்றும் மறந்துவிட முடியாது. அடிகளாரின் பெயர் அகிலமெல்லாம் பரவ வேண்டுமென்று ஆவலுறும் அதே நேரத்தில் நகர் மத்தியிலே இருக்கும் விளையாட்டு மைதானத்திற்கு அவரின் பெயரைச் சூட்டுவதற்குத் தயங்குவது பொருத்தமாக மாட்டாது. சவக்காலையாக இருந்த மைதானத்துக்கு அடிகளாரின் பெயரைச் சூடுவது பொருத்தமில்லையென்று சிலர் கருதுவதாகக் கூறப்படுகிறது. இந்தத் தருணத்தில் நகரசபையார் நிர்மாணிக்க வேண்டியது, பல்லாயிரம் ரூபாய்கள் செலவில் திருத்தியமைக்கப்பட்டிருக்கும் இந்த மைதானம் ஒரு சவக்காலையா? அல்லது ஒரு விளையாட்டு மைதானமா? என்பதுதான். இது ஒரு விளையாட்டு மைதானமாயின் "விபுலாநந்தவெளி" என்று அதற்குப் பெயர் சூடுவது மிகவும் பொருத்தமானதே." மட்டக்களப்பு மெதடிஸ்ற் மத்திய கல்லூரியில் தேனமுத இலக்கிய மன்றத்தினர் நடாத்திய விபுலாநந்த விழாவிலே பேசும்போது திரு. இ. மிசிலீன் மகாலிங்கம் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. நாகரெத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை மேற்படி கல்லூரியின் ஸ்தாபகரும், முகாமைக்காரருமாகிய திருமதி எம். இராதிலிங்கம் அவர்கள் அடிகளாரின் திருவுருவப் படத்துக்கு மாலையணிவித்துத் தொடக்கி வைத்தார்கள்.

திரு. வி. சு. கதிர்காமத்தம்பி அவர்கள் பேசுகையில், வித்தகர் விபுலாநந்தரின் சொந்த இடத்தில் பிறந்த நாம் வீட்டிலும் ரோட்டிலும் பிறமொழியைப் பேசுவதும் நமது கலைஞர்களை கௌரவிக்க மறந்து வசை புராணம் பாட ஆரம்பிப்பதும் மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விஷயங்களாகும் என்று குறிப்பிட்டார்.

திரு.எஸ்.எஸ். அருள்ராசா (தேறுடன) அவர்கள் பேசுகையில் உலகத்தில் முதன் முதல் தமிழ் பல்கலைக் கழக விரிவுரையாளராக வந்த பெருமை நமது அடிகளாரையே சாரும் என்று குறிப்பிட்டார். இவ் விழாவில் திரு. தங்கவேல், செல்வி.புவனேஸ்வரி, நாகூர் ஏ. பாவா, ஆகியோரும் பேசினார்கள். மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் கதாகாலாட்சேபத்தைத் தொடர்ந்து செல்வன் ராஜேந்திரன், செல்வி. சாரதா அழகையா ஆகியோர் இன்னிசை விருந்தளித்தனர். மன்றத்தின் செயலாளர் செல்வன். சக்திதாசனின் நன்றியுரையுடன் விழா முடிவடைந்தது.

## தமிழ் வளர்த்த . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்பற்றி "சாதி நிற பேதங்களைப் போககடிப்போம்—ஒரு, சாதியென்றே ஒன்று நின்று உத்தரிப்போம்" என்பன போன்ற பாடல்களைப் புனைந்திருக்கிறார். புலவர் இது போன்று ஏராளமான பாடல்களை இயற்றியுள்ளார்.

முகமது காசீம் புலவரின் போற்றிப் புகழத்தக்க மகத்தான பணி பூசிரி இமாம் அவர்களின் "புர்தா" என்ற நூலைத் தமிழில் கவிதையாக மொழி பெயர்த்ததாகும். இவரின் மொழி பெயர்ப்பை இந்திய உலமாக்கள் சபை பார்வையிட்டுப் பெரிதும் பாராட்டியது. புலவரின் இப்பணியினைப் பாராட்டி செய்கு சுமாலியா வலி யுல்லா காதிரி சுமாலியா அவர்கள் பாடிய சில பாடல்களை இங்கு குறிப்பிடுகிறேன்:

"எட்டு ரண்டினி நருவை
இடைவி டாதுண்டு கண்டு
அட்டுப்பா மழதை மிக்க
அருஞ்சுவை புர்தா
வென்னும்
எடுதற் கரிய தாகி
கவியினை யாலே யாக்கி
கட்டியே தந்தான் காஸிம்
கவிப்ப ரிலட் டமாமே"

மாதவத் துயர் மதிரு
வரசர் மஃமூது வேதர்
போதக ரில்லாம் இந்த
புவியினை இலங்கச் செய்த
ஆதவர் நபிமேல் கனிந்து
அருட்கவி போர்வை மினுல்
பூதலம் புகழும் காஸிம்
போற்றி ஞன் மாதோ

சொன்ன யமுடைய நாவான்
சுந்தர முடைய நடையான்
தன்னல மற்ற காஸீம்
புலவன் மாத்தறையி
லுள்ளான்
பன்னலப் பாக்க வியற்றிய
பார்புகழ் பெற்...
சொன்ன சொல்...
...னம்போல
ஒலிபர செய் மிறுவா"

### மொழி பெயர்ப்புக்குப் பாராட்டு

இந்தியாவிலிருந்த மார்க்க மேதையான செய்யித் யாஸீன் மௌலானா அவர்கள், காசீம் புலவரின் புர்தா மொழி பெயர்ப்புக்கு அளித்த முன்னுரையில் "மாத்தறை காஸிமின் புர்தாவைப் பார்வையிட்டேன். கஸீதத்துப் புர்தாவின் அர்த்தம் பூரணமாக இதிலுண்டு. கவிதைய மைப்பு, செய்யுளிலக்கணம் வழுவின்றி அமைந்துள்ளது. அராபிய மொழியிலுள்ள பிரார்த்தனைப் பாடல்களைத் தமிழாக்கியுள்ள முறை தமிழ் முஸ்லிம்களின் பக்தியைப் பெருக்கக் கூடியது. தேவாமிர்தம் என உலக முஸ்லிம்களால் உயர்த்திப் போற்றப்படும் புர்தா மாலையை முஸ்லிம்கள் தமிழில் பெற்றது பாக்கியமே" என்று குறிப்பிடுகிறார்.

முகம்மது காஸிம் புலவர் தமிழ், அரபு மொழிகளில் மட்டுமன்றி சிங்கள மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் சிங்கள மக்களின் சூழலில் வாழ்ந்ததால் சிங்களம் கற்க வாய்ப்பாக இருந்தது. இலங்கை, பிரிட்டிஷாரின் ஆட்சியில் அடிமைப் பட்டுக் கிடந்த காலத்தில் வாழ்ந்தவர் காஸீம் புலவர். அக்காலச் சூழ்நிலைக்கேற்ப மக்களிடையே சுதந்திர உணர்ச்சியைத் தூண்டக் கூடிய சிங்களப் பாக்களையும் இயற்றியுள்ளார். இத்தகைய சுதந்திரப் பாடல்கள் "ஒட்டுண்ண ஸஹ சிங்காசனய" என்ற பெயரில் நூலாக வெளி வந்தது. திரு. டி. எஸ். சேனநாயகா பற்றியும் சிங்களத்தில் கவிதைகள் இயற்றினார். இத்... ...கள் மத்தியிலும் நல்ல மதிப்பிருந்தது.

## மூதூரில் தோற்ற...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிகளுடன் ஆலோசனை நடாத்திய பின் நிர்வகிக்கும் 'பிரத்தியேக அதிகாரங்களை'யும் கவர்ந்து கொண்டார் திரு. டி. எஸ். சேனநாயக்கா.

### கவர்னர்-ஜெனரலின் 'பிரத்தியேக அதிகாரங்கள்'

பெரும்பான்மை இனத்தின் அடக்கு முறைக்கோ, ஆக்கிரமிப்பிக்கோ எதிராகச் சிறுபான்மை இனத்தவரின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது பற்றியதே பெரும்பாலும் இந்த 'கவர்னர்-ஜெனரலின் பிரத்தியேக அதிகாரங்கள்' என்பது நாம் இங்கு கவனிக்க வேண்டிய தொன்றாகும்.

திரு. டி. எஸ். சேனநாயக்காவின் அந்தரங்க பேச்சு வார்த்தைகள் பற்றிப் பொது மக்கள் எதுவும் அறிய முடியவில்லையெனினும், மந்திரி சபையிலுள்ள மந்திரிமாருக்கு அவை பற்றி எல்லாம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், மந்திரி சபையிலுள்ள சிறுபான்மை மந்திரிகளை பிரிட்டிஷ் அரசாங்கம் தமது கருத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு முக்கியமாகக் கேட்டுக் கொண்டது. இப்பேச்சு வார்த்தைகள் மூலம் சிறுபான்மையினரின் உரிமைகள் அதிகம் பாதிக்கப்படவிருந்தது தான் காரணம்.

### அப்பொழுது என்ன செய்தார்?

அப்பொழுது திரு. சுந்தரலிங்கம் என்ன செய்தார்? கவர்னர்-ஜெனரலின் பிரத்தியேக அதிகாரங்களுக்குப் பதிலாக ஏன் அவர் அரசியலமைப்புச் சட்ட ரீதியான பாதுகாப்புகளை வேண்டிக் கொள்ளவில்லை? பெரும்பான்மையினர் (மொழிவாரியோ அல்லது மதவாரியோ) மற்ற சிறுபான்மை இனத்தவர்களை அடக்கி ஆளாத முறையில் உறுதி பண்ண, ஏன் திரு. சுந்தரலிங்கம் சமஷ்டி அரசியலமைப்பையோ, பிரதேச சுயாட்சி முறையையோ அல்லது அத்துடன் சேர்த்து அடிப்படை உரிமைகள் மசோதாவையோ கேட்டு, அதன் மூலம் அடக்கி ஆட்சி புரியாத கொள்கையினை செயற்படுத்தும்படி வற்புறுத்தவில்லை?

இலங்கை வாழ் சிறுபான்மை சமூகத்தினர் அனைவரையும் காட்டிக் கொடுத்து, அதன் மூலம் திரு. டி. எஸ். சேனநாயகாவும் அவரது சந்ததியினரும் சிறுபான்மை இனத்தவரை அவர்கள் அழிந்தொழிந்து போகும் வரை அடக்கி ஆள சர்வ சுதந்திரமும் பெற்றுக் கொடுத்த பெருமை சிறுபான்மை மந்திரிகளாக அன்றிருந்த திருவாளர்கள் சுந்தரலிங்கம், சிற்றம்பலம் இவர்களையே சாரும்.

### எந்த நோக்கத்துடன் போட்டியிட்டார்?

சமஷ்டிக் கட்சியின் வாக்குகளைப் பிளவுபடுத்தும் நோக்கத்துடன் அல்லாமல் வேறு எந்த நோக்கத்துடன் திரு. சுந்தரலிங்கம் மூதூரில் போட்டியிட்டார்? அவர் மூதூரிலுள்ள தமிழ் மக்களிடையே மாத்திரம் தான் பிரச்சாரம் செய்தார். அவர்களின் வாக்குகளை மட்டுமே கோரினார்.

அது மாத்திரமல்ல, தமிழ் மக்களிடம், "நீங்கள் எனக்கு வாக்குப் போடாவிட்டாலும், சமஷ்டிக் கட்சிக்கு மட்டும் வாக்களித்து விடாதீர்கள்" என்று அவர் கூறவில்லையா? அவரது பிரச்சாரம், தமிழ் மக்களை முஸ்லிம்களிடமிருந்து பிரித்து, அவர்களுக்கெதிராகத் தமிழ் மக்களிடையே சந்தேகத்தையும், எதிர்ப்பையும் வளர்க்கும் நோக்கத்துடன் செய்யப்படவில்லையா?

இந்தச் சந்தர்ப்பத்தில், திரு. சுந்தரலிங்கத்தின் மூதூர் பிரச்சாரம் யாரின் நன்மைக்காக? அது, 'சிங்கள' சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிப்பதற்காக அல்லவா?

### கரடியனாறில் 'கிழக்கொளி'

"கரடியனாறு விவசாயப் பாடசாலையின் மாணவர்களால் வெளியிடப்பட்ட "கிழக்கொளி" இன்று தனது ஒரு வருட சேவையை முடித்து, 400 அங்கத்தவர்களை வாசகர்களாகப் பெற்றிருக்கிறது. இவர்கள் அத்தனை பேரும் எமது கிழக்கொளியின் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள், எனவே, நாம் அமைக்கப் போகும் "கிழக்கொளி"யின் ஆண்டு மலர், வாசகர்களின் நன்றி மலராக—ஈழத் தமிழ் வித்தகர்களின் (விபுலாநந்தர்—சோமசுந்தரர்) இணைப்பு மலராக—தமிழன்னையின் சிறப்பு மலராக அமைய வேண்டும். அதுவே, ஈழத்து இளைஞர்களாகிய நாம், இன்று செய்யும் நன்றிக் கடனும், தமிழ்த் தொண்டுமாகும்" என்று கிழக்கொளியின் ஆண்டுமலர் அமைப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய கிழக்கொளி ஆசிரியர் சோமு - இளந்திரையன் கருத்து வெளியிட்டார்.

மலரின் அமைப்புப் பற்றி ஓவியர் "ஜீவிதன்" இளம் கவிஞர் "பாரதி அன்பன்" பொருளாளர் எஸ். இராசதுரை, மேற்பார்வையாளர் சோ. சுப்பிரமணியம் மற்றும் பலர் பேசினர்.

இறுதியில் ஆண்டு மலர் அட்டைப் படத்தை—பிரபல ஓவியர் குமாரிடம் ஒப்படைப்பதென்றும், கவிதை, கட்டுரை, ஓவியம், சிறுகதை அடங்கிய ஒரு போட்டி ஏற்படுத்தி புத்தகங்கள் பரிசு வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.


## ஏஜண்டுகள் தேவை

கீழ்க்காணும் ஊர்களில் சுதந்திரன் விற்பனை செய்வதற்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.


| | | |
|---|---|---|
| கொத்மலி | நிவித்திகலே | நெடுங்கேணி |
| வெலிவேரியா | முன்னியவலோ | உயிலங்குளம் |
| வாரியபொல | புலத்சிங்கள | ரம்புக்கனை |
| மன்னம்பிட்டி | மொனராகல | நாரம்மல |
| நாத்தாண்டியா | நல்லூர் | கல்லேல்ல |
| மயிலிட்டி | அளுத்கம | நாவற்குழி |

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகி,
"சுதந்திரன்"
த. பெ. இல. 1183
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் எதிர்பாருங்கள்!

எல்பின்ஸ்டன் [மருதானை] — ரீகல் [வெள்ளவத்தை] மற்றும் 8 திரைகளில்



ஜெமினி கணேசன் — அஞ்சலிதேவி

கே. ஏ. தங்கவேலு — பி. எஸ். வீரப்பா

எம். என். ராஜம் — எம். என். நம்பியார்

கமலா லெட்சுமணன் — எம். சரோஜா

முதலியோர் நடித்த

# 'வீரக்கனல்'

---

2-வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை)

மற்றும் 6 திரைகளில்

அந்தஸ்து — அதிகாரம் — ஆடம்பரம் அத்தனைக்கும் அப்பாற்பட்ட சக்தியே அன்பு! ஆனால்......போலீஸ் கமிஷனர் ரங்கநாதம் அன்பைவிட, அந்தஸ்தையே உயர்வாக மதிப்பவர். அந்தஸ்துக்காக எல்லாவற்றையும் இழக்கிறார். அந்த அன்பின் சக்தியை ரங்கநாதம் உணர்வதற்குள் ஒரு உணர்ச்சிக் காவியமே நடந்து முடிந்து விடுகிறது!

சிவாஜி



நம்பியார்



# நிச்சய தாம்பூலம்

ஜமுனா





வசனம்:
விருதை இராமசாமி

பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

இசை:
விஸ்வநாதன்-ராமமூர்த்தி



ரங்காராவ்



---

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

அநேகர் வேண்டுகோளுக்கு இணங்க!!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாசா (வெள்ளவத்தை)

சிவாஜி கணேசன் — சாவித்திரி — நம்பியார்
ராஜசுலோசனா — எம். கே. ராதா — தங்கவேலு
எம். சரோஜா — நாகையா — கண்ணாம்பா
நடித்த

# வணங்காமுடி

(புத்தம் புதிய கொப்பி)

3-வது வெற்றி வாரம்!



கெப்பிட்டல் (கொழும்பு)

குயின்லின் (நுகேகொட) — விஜயா (அம்பாறை)

மற்றும் 3 திரைகளில்

என். டி. ராமராவ் — அஞ்சலிதேவி

நடித்த

# பட்டி விக்ரமாதித்தன்

---

விரைவில் எதிர்பாருங்கள்!

நெஞ்சை உருக்கும் அநேக நிகழ்ச்சிகள் அடங்கிய அற்புதப் படைப்பு

மக்கள் திலகம்
எம். ஜி. ராமச்சந்திரன்,

கன்னடத்துப் பைங்கிளி
பி. சரோஜாதேவி,

நடிகவேள்
எம். ஆர். ராதா

பி. கண்ணாம்பா, அசோகன்
சாண்டோ சின்னப்பா தேவர்
மற்றும் பலர் நடித்த

தேவர் பிலிம்ஸ்



# தாய்சொல்லைத் தட்டாதே

கதை வசனம்: ஆரூர்தாஸ் — பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் — டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.